





இதழ் 11 புரட்டாதி 16 2004 | சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா உட்கோட்டம் இன்மைபெறின் | September 16 2004 www.vaikarai.com



தென்னிலங்கை

சந்திரிகாவும் ரணிலும்

பக்கம் 03



அமெரிக்க தேர்தல்

ஜோன் கெரியின் வெள்ளை மாளிகைக் கனவு கலைகிறது

பக்கம் 06



ரஷ்யா

சர்வாதிகாரத்தை நோக்கி ரஷ்ய அதிபர்

பக்கம் 08



லங்கா ராணி வாடைக்காற்று

பக்கம் 18 16

# இருதரப்புமே யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளன

## - யாழ்ப்பாணத்தில் எரிக் சொல்ஹெய்ம்

யுத்த நிறுத்தம் இரு பகுதியினராலும் மீறப்பட்டு வந்துள்ளன. எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின் இரு தரப்பினருமே யுத்த நிறுத்த மீறல்களை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என நோர்வேயின் சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று யாழ்ப்பாணத்தில் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மத்தியில் தெரிவித்தார்.யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அதன் தலைவர் வி. சக்திவேல் தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற சந்திப்பில் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், நோர்வே தூதுவர் ஹென்ஸ் பிரஸ்கர் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இச்சந்திப்பின்போது இணையப் பிரதிநிதிகள் யாழ்ப்பாண மாவட்ட சிவில் சமூகத்தின் எதிர்பார்ப்புகள், தேவைகள் மற்றும் அபிலாசைகள் குறித்து விபரமாக எடுத்துக் கூறியிருந்தனர். எரிக் சொல்ஹெய்ம் அங்கு தொடர்ந்து கூறுகையில், அண்மைக்காலமாக நாட்டில் பல்வேறு யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம் பெற்று வந்துள்ளன. இந்த நிலைமை அரசியல் படுகொலைகள், கொலைகள் போன்றவற்றில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினரும் அவற்றினை உடனடியாகக் கைவிடவேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகள் காணப் பட வேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் மிகவும் உறுதியாக இருக்கின்றது. விசேடமாக இந்தியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் இது விடயத்தில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளன. இலங்கையின் இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகம் அக்கறை காட்டாமல் இருக்கின்றது எனக் கூறுவது



முழுக்க முழுக்க வதந்தியாகும். இதில் எந்தவிதமான உண்மையும் இல்லை. சமாதான நிலைப்பாட்டில் யாழ். குடாநாட்டு மக்களின் உணர்வலைகளை அறியும் பொருட்டும், சில முக்கிய தகவல்களைத் திரட்டும் பொருட்டுமே நான் இந்தத் தடவை யாழ்ப்பாணம் வந்துள்ளேன். இதன் போது நான் படைத்தளபதி, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் மற்றும் சிவில் சமூகத்தினரையும் சந்தித்துள்ளேன். இச்சந்திப்புக்கள் மூலம் எமக்குப் பல புதிய உண்மைகளை புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. வியாழன் கிளிநொச்சியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பின்னர் ஜனாதிபதியையும் சந்திக்கவுள்ளேன் எனக் குறிப்பிட்டார். இங்கு இடம்பெற்ற சந்திப்பின்போது அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் இலங்கையின் சமாதான முயற்சியில் இருந்து நோர்வே எக்காரணம் கொண்டும் விலகிவிடக்கூடாது. எனவும் இலங்கைத் தமிழர்கள் நோர்வேயின் பங்களிப்பை மென்மேலும் விரும்புவதாகவும் வற்புறுத்திக் கூறியிருந்தார்கள். இதன்போது இலங்கையின் சமாதான முயற்சியில் இருதரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இது விடயத்தில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நோர்வேயிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே தாம் இதில் ஈடுபட்டு வருவதாகவும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹேன்ஸ் பிரஸ்கர் அங்கு தெரிவித்தார்.

# ஹொக்கி உலகக் கோப்பையை கனடா வென்றது



செவ்வாய்க்கிழமை இரவு ரொறன்ரோ ஏர் கனடா மையத்தில் நடைபெற்ற பின்லாந்துக் கெதிரான இறுதிப் போட்டியில் 3-2 என்ற கோல் வித்தியாசத்தில், கனடா பின்லாந்தைத் தோற்கடித்து உலகக் கோப்பையைத் தனதாக்கிக் கொண்டது. சில மாதங்களுக்கு முன்னர் நடந்த ஸ்ரான்லிக் கோப்பைக்கான இறுதிப் போட்டியில், அலபேட்டா அணி, அமெரிக்கர்ளிடம் தோல்வியுற்றதால், சோர்ந்து போயிருந்த கனேடிய ஹொக்கிப் பிரியர்களுக்கு நேற்றய இவ் வெற்றி மிகவும் உற்சாகத்தை அளித்துள்ளது. முதல் இரண்டு இருபது நிமிடங்களின் பின் 2-2 என்ற சமநிலையில் மூன்றாவது பகுதி ஆரம்பமாகியது. 34 வினாடிகளின் பின் அல்பேட்டாவைச் சேர்ந்த இளம் வீரர் ஷேன் டொன் கோலைப் போட்டதன் மூலம் கனேடிய அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார். கடந்த மூன்று வருடங்களில் நடாத்தப்பட்ட முக்கிய போட்டிகளில் நான்காவது தடவையாக கனேடிய அணி, பந்தயக் கோப்பையை வென்றுள்ளது.

# அரபாத்தை சுட்டுக் கொள்வோம் இல்லையேல் நாடு கடத்துவோம்

## இஸ்ரேலியப் பிரதமர்

பலஸ்தீனத் தலைவர் யசீர் அராபத்தை சுட்டுக்கொள்வோம் அல்லது பலஸ்தீனத்தை விட்டு நாடு கடத்துவோம் என்று இஸ்ரேல் பிரதமர் ஷரோன் மீண்டும் கூறி இருக்கிறார். பலஸ்தீனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முயற்சி நடந்தபோது அதில் முட்டுக்கட்டை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பலஸ்தீனியர் இஸ்ரேலுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அப்போது நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு பலஸ்தீனத் தலைவர் யசீர் அராபாத் தான் காரணம் என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது. இதைத் தொடர்ந்து 75 வயதான அராபாத்தை அவரது தலைமை நிலையத்திலேயே இஸ்ரேல் இராணுவம் முடக்கி விட்டது. அங்கு இருந்து வெளியேற அனுமதிக்கவில்லை. எனினும் பலஸ்தீன தற்கொலைப் படையினர் இஸ்ரேலில் அப்பாவி மக்களை கொன்று குவிப்பது குறையவில்லை. அரபாத் தூண்டுதலாலேயே இந்த தற்கொலை தாக்குதல் நடத்தப்படுவதாக இஸ்ரேல் புகார் செய்தது. இதனால் ஆத்திரம் அடைந்த இஸ்ரேல் தலைவர்கள் அராபாத்தை கொலை செய்வோம் என்று மிரட்டினர். இதற்கு இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்தது. அரபாதுக்கு எந்த வித தீங்கு இழைக்கப்படவும் அனுமதிக்க

6ம் பக்கம் பார்க்க

# ஊழல் விவகாரம் தொடர்பாக முன்னாள் பிரதமர் கிரிச்சியானுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

குபெக் மாகாணத்தில் கனடாவின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் நிகழ்ச்சிகளை ஊக்குவித்தற்காக மத்திய அரசினால் வழங்கப்பட்ட நிதி உதவிகளில் பாரிய மோசடிகள் நடந்துள்ளன என்றும், அதற்கான பொறுப்பினை பிரதமர் என்ற வகையில் திரு. கிரிச்சியான் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை எதிர்காலத்தில் ஏற்படலாம் என்றும் அரச ஊழியர் ஒருவர் முன்கூட்டியே பிரதமரை எச்சரித்துள்ளார். பிரதம மந்திரியின் கவனத்திற்கென தயாரிக்கப்பட்ட இரகசிய ஆவணம் ஒன்றில், அரச நிதியில் இருந்து 34 மில்லியன் டொலர்களை பிரதமர் இத்திட்டத்திற்கு வழங்கியுள்ளதால், அந்த நிதி எவ்வாறு செலவிடப் படுகின்றது என்பதற்கு அவரே பொறுப்பேற்க வேண்டிய நிலைமை தோன்றும் என அரச ஊழியரான ஜோசலீன் போர்க்கன் (Jocelyne. Bourgon) குறிப்பிட்டுள்ளார். இவ் ஊழல் விவகாரத்தை விசாரித்து வரும் நீதியரசர் ஜோன் கோமரியிடம், இதற்கான ஆவணத்தை நேற்றய விசாரணைகளின் போது சமர்ப்பிக்கப்பட்டது. இவ் ஆவணம் 1997ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. 1993இல் இருந்து 2003ம் ஆண்டு வரை கிரிச்சியான் கனேடியப் பிரதமராக இருந்தார். தற்சமயம் வெளிநாடு சென்றிருக்கும் முன்னாள் பிரதமர் தேவை ஏற்படின் தான் இக் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கத் தயார் எனக் கூறியுள்ளார். இவ் ஊழல் நடந்ததாகக் கருதப்படும் காலகட்டத்தில் இன்றயப் பிரதமர் போல் மாட்டின் நிதி அமைச்சராகப் பணிபுரிந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. திரு. கிரிச்சியானுக்கும் போல் மாட்டினுக்கும் ஏற்பட்ட அதிகாரப் போட்டியின் விளைவாகவே இவ் ஊழல் அம்பலப்படுத்தப்பட்டது என ஒட்டாவா அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். ஏற்கனவே ஆர்.சி.எம்.பி (R.C.M.P) இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு இவ் ஊழலில் சம்பந்தப்பட்ட விளம்பரக் கம்பனிகளின் இயக்குனர்கள் இருவர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்துள்ளனர். கடந்த பெப்ரவரி மாதத்தில் கணக்காளர் நாயகம் ஷீலா பிரேசர் வெளியிட்ட அறிக்கையில் VIA Rail Cants Post உட்பட ஐந்து அரச கூட்டுத் தாபனங்கள் இவ் ஊழல் தொடர்பான நிதிப் பரிமாற்றங்களில் சம்பந்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து பொது வேலைகளுக்கான முன்னாள் அமைச்சர், அல்போன்சேர் காக்லியானோ (Aifpnso Gagliano) டென்மார்க்குக்கான கனேடியத் தூதுவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கையில் நாட்டிற்குத் திருப்பி அழைக்கப்பட்டார். VIA நிறுவனத்தின் இயக்குனர்களான பெலெட்டியர் (Pelletier) மற்றும் Le Franwis வும் மார்ச் மாதத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VAIKARAI
வைகறை

1252 Lawrence Avenue East, Unit 207
Toronto. ON. M3A 1C3
Tel: 416-385 2999 Fax: 416-385 9862
e-mail editor@vaikarai.com

## சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தை வென்றெடுக்க...

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு ஒருங்கிணைப்பாளரும் தூதர் அந்தஸ்துடன் இருப்பவருமான கொ.ஃபா பிளாக், கொழும்பில் ஊடகவியலாளர்கள் குழு ஒன்றுடன் நடத்திய கலந்துரையாடலின் போது, சமாதானம் தொடர்பான பற்றுறுதியை நிரூபிக்கும் வரையில் விடுதலைப் புலிகள் அமைப்பு அமெரிக்காவின் தடைப்பட்டியலில் தொர்ந்தும் இடம் பெற்றிருக்குமெனக் கூறியுள்ளார். இவருடைய இக் கூற்று தமிழ் மக்களிடையே மிகுந்த கவலையைத் தோற்றுவித்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழவின் தலைவர் சம்பந்தனும், இது தொர்பாக நீண்ட அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார். அதில் நடுநிலையான அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்கத் தவறுவது சமாதான நடைமுறைக்கு பாரிய தீங்கை விளைவிக்கும் எனவும், சமாதானத்தை அடைவதற்குக் கூடுதலாக சமநிலை கொண்ட அணுகுமுறை ஒன்றை அமெரிக்கா கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார். அமெரிக்க அதிகாரியின் உரையை நுணுக்கமாக அவதானித்தால், தமிழ் மக்களின் அரசியல் தலைமைதான், சமாதானத்தின் மீது அக்கறையின்றிச் செயற்படுவது போலவும், சிங்களத் தலைமைகள் சமாதானத்துக்காக பல பாரிய விட்டுக்கொடுப்புகளைச் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்ற தொனி அதில் தொக்கி நிற்பதையும் காண முடியும். கொழும்பில் ஆட்சியில் உள்ளவர்களுடன் எப்படியாவது சுமூகமான உளவுகளைப் பேணுவதன் மூலம் தான், அமெரிக்கா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது பூகோள அரசியல் நலன்களை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்ற எடுகோளின் அடிப்படையில், இவ்வாறான பாரபட்சமான கூற்றுக்கள் வெளிவருகின்றனவா? அல்லது, அமெரிக்க அதிகாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் வழங்கப்பட்ட வழங்கப்படுகின்ற தகவல்களின் அடிப்படையில் இவ்வாறான கூற்றுக்கள் மேற்கொள்ளப் படுகின்றனவா? என்ற கேள்வி எழுகிறது. பதில் எதுவாக இருப்பினும், இலங்கைத் தமிழ் மக்களின், விடுதலையை நோக்கிய நீண்ட பயணத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கு இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டிய பாரிய கடமை தமிழ் மக்களின் அரசியற் தலைமைக்கு உண்டு.

நீண்ட காலமாக இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகள் நிராகரிக்கப் பட்டதனாலேயே இன்று நாடு ஓர் பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்து. சுதந்திரத்துக்குப் பின்னர் தொடர்ச்சியாக தென்னிலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் யாவும், தமிழ் மக்களின் மிதவாத அரசியற் தலைமைக்கு அளித்த வாக்குறதிகளைக் கௌரவிக்கத் தவறியதனாலேயே, ஆயுதப் போராட்டத்தின் மூலம், எமது அபிலாஷைகளை வென்றெடுப்பதென்ற முடிவுக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர். எமது தலைவர்களின் அஹிம்வைக் போராட்டங்கள் யாவும், அரசின் இராணுவ பலத்தினால் மூர்க்கத்தனமாக நசுக்கப்பட்டதன் விளைவாகவே ஆயுதப் போராட்டத்திற்கான சூழல் ஏற்பட்டது. தமிழர்களின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வாக இராணுவத் தீர்வொன்றை எம்மீது இலங்கை அரசு திணிக்க முற்பட்டதாலேயே இக் கொடிய உள்நாட்டு யுத்தம் மூண்டது. இதனால் தமிழ் மக்களே பாரிய அழிவுகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சிறீலங்கா அரசின் நியாயமற்ற சிங்கள மேலாதிக்கச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட அரசியலினால், மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கைத் தமிழர்களே. “போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்” என்ற முழக்கத்துடன் தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டவர்கள் தான் இன்றும் தென்னிலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் சக்திகளாக உள்ளனர். இவ்வளவு அழிவுகளுக்குப் பின்னரும், சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்து மீண்டும் ஓர் போர்ச் சூழலை தோற்றுவிப்பதற்கு மறைமுகமாக, இலங்கை இராணுவம் செயற்படுகின்றது.

மேற் கூறிய விடயங்கள் யாவும், சர்வதேச சமூகத்திற்கு, முக்கியமாக அமெரிக்க அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருக்கலாம். இவ் உண்மைகளை, உரியவர்களிடம் ஆணித்தரமாக, ஆதாரங்களுடன் முன்வைக்க வேண்டியது எமது அரசியற் தலைமையின் கடமை. முக்கியமாக இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். தமிழ் மக்கள் இவர்களை சிறீலங்காவின் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்து, இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் இரண்டறக் கலந்து, அங்கு பூத்துக் குலுங்கும் ஜனநாயகத்திற்கு சர்வதேச அங்கீகாரம் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அல்ல. மாறாக பாராளுமன்றக் கதிரைகள் கொடுக்கும், சில வசதிகளைப் பாவித்து எமது போராட்டத்தின் நியாயத் தன்மையை, தென்னிலங்கை அரசியற் சக்திகளின் அரசியல் வங்குரோத்துத் தன்மையை, அங்கு வியாபித்து நிற்கும் சிங்கள மேலாதிக்க அரசியலை, சர்வதேச சமூகத்தின் முன்பு அம்பலப்படுத்துவதற்காகத்தான்.

சிறீலங்காவின் அமைசர்களும் அதிகாரிகளும் சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தைப் பெறுவதற்கு இரவு பகலாகக் கண்முழித்துச் செயற்பட்டுள்ளதையே அமெரிக்க அதிகாரியின் கூற்றுத் தெரிவிக்கின்றது. எமது அரசியற் தலைமையும் இதற்கு ஈடாகத் துடிப்புடன் செயற்பட வேண்டிய காலகட்டமிது. செய்வார்களா?

## இந்திய அரசியலில் பிள்ளையாரின் நுழைவு

பொ ஐங்கரநேசன்

இந்துசமயம் என்று இன்று அழைக்கப்படும் பிராமணீய சமயத்தில் பிரம்மன், விஷ்னு, சிவன், முருகன் என மேல்நிலையில் உள்ள தெய்வங்கள் ஒரு புறமும் - இன்னொருபுறம் அனுமன், சண்டேஷ்வரர் போன்ற பரிவார தெய்வங்களும் வழிபாட்டில் உள்ளன. இவை இரண்டிலும் இடம்பெறாமலும். பிராமணீய சமயத்துக்கு வெளியே உள்ள நாட்டார் தெய்வங்கள் வரிசையில் இடம் பெறாமலும் தனக்கெனத் தனியான ஒரு இடத்தைப் பெற்றிருப்பவர் பிள்ளையார். சைவ – வைணவப் பெருங்கோவில்களில் மட்டுமில்லாமல் இவருக்கென உருவாக்கப்பட்டுள்ள கோவில்களிலும் இடம்பெற்றுள்ள பிள்ளையார், நாட்டார் தெய்வங்களைப் போல ஆற்றங்கரை, அரசமரநிழல், தெருச்சந்தி எனக் கூரையின்றி வெட்ட வெளிகளிலும் அமர்ந்திருக்கிறார்.

பிள்ளையார் வழிபாடு தமிழ் நாட்டில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் ஆரம்பித்துவிட்டது. இரண்டு கைகளை மட்டும் உடையதும், பூணூல் - அணிகலன்கள் - ஆயுதங்கள் இல்லாமலும் காட்சியளிக்கும் பிள்ளையார்பட்டி விநாயகரே தமிழ் நாட்டின் மிகத் தொன்மையான பிள்ளையார் உருவம் என ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர். காலப் போக்கிலேயே நான்கு கரங்களை உடையவராகவும், பூணூலும், அணிகலன்களும், அம்பு, அங்குசம், மழு, குந்தாலி, சம்மட்டி, என ஆயுதங்கள் ஏந்தியவராகவும் பிள்ளையார் உருப் பெற்றார்; பாலகணபதி தொடங்கி சங்கடஹர கணபதி ஈறாக 32 வகைப் பிள்ளையார் உருவங்கள் வழிபாட்டுக்கு வந்தன.

விநாயக சதுர்த்தி, அதை ஒட்டிப் பிரமாண்ட விநாயகர் ஊர்வலம் என்ற இன்று அமர்க்களப்படுத்தும் பிராமணீய சமயம் தொடக்க காலப் பிள்ளையாரை உடனடியாகத் தன்னுடன் இணைத்துக் கொள்ளவில்லை. தனது தெய்வங்களுக்கு வெளியிலேயே அவரை நிறுத்தி வைத்தது ; பழங்குடிகளினதும், நான்காவது வருணமான சூத்திரர்களினதும் கடவுளாகவே அவர் கருதப்பட்டார். வடமொழி நூல்களில் இடம் பெற்றுள்ள செய்திகள் பலவும் சூத்திரர்களின் கடவுளாகப் பிள்ளையார் ஒதுக்கப்பட்டதையே உணர்த்துகின்றன.

யக்ஞவல்லியர் கூற்றுப்படி ருத்திரனும், பிரமனும் விக்கினங்களை உண்டாக்குவதற்காகக் கணங்களின் தலைவராகக் கணபதியை நியமித்தனர். தொல்லைகளை உருவாக்குபவர் என்ற பொருளிலேயே விக்கினேசர், விக்கினராஜா போன்ற அடைமொழிகள் சூட்டப்பட்டன. கணபதியால் ஆட்கொள்ளப்பட்ட ஒருவன் நீரில் மூழ்குவது போலக் கனவு காண்பான்; துஷ்ட மிருகங்களின் மீது சவாரி செய்வான் ; சுடர்ந்தறியும் சக்தியை இழப்பான்” - என்றும் மனுதர்மம் குறிப்பிடுகிறது. மேலும், 'கணபதி சூத்திரர்களின் கடவுள் ; கணபதியின் அடியார்கள் செய்யும் கணயாகம் என்ற சடங்கைச் செய்தவன் சிரார்த்த விருந்தில் இருந்து விலக்கப்படவேண்டும்' - என மனுதர்ம சாஸ்திரம் குறிப்பிடுகிறது. கிரக சூத்திரம் என்ற வடமொழி நூல், பிள்ளையாரைத் தீமை செய்யும் தெய்வமாகக் குறிப்பிட்டு, இத்தெய்வத்தால் பீடிக்கப்படின் - 'ஆளத்தகுதியிருந்தும் இளவரசனுக்கு ஆட்சி கிடைக்காது ; மணம் புரியத் தகுதியிருந்தும் பெண்ணுக்கு வரன் கிடைக்கமாட்டான்; வாணிபமும் வேளாண்மையும் பயன்தரா ; மாணவர்கள் கல்வி பாதியோடு நிற்கும்' எனப் பிள்ளையாரைத் தீண்டத் தகாதவராகவே சித்திரிக்கிறது. பிரம்ம வைவார்ந்த புராணம்' பிள்ளையார் ஏகதந்தம் உடையவராகக் காட்சியளிப் பதற்கான காரணத்தைக் கூறுகிறது. பரசு ராமர் - பிள்ளையாருக்கு இடையேயான மோதலில் பரசுராமர் பிள்ளையார் மீது தன் மழுவை ஏவ, இம்மழு பரசுராமருக்குச் சிவபெருமான் வழங்கிய ஆயுதமாதலால் அது ஆற்றலற்றுப் போய்விடக்கூடாது என்பதற்காகப் பிள்ளையார் தன் தந்தம் ஒன்றினை ஒடிக்கும்படி விட்டு ஏகதந்தர் ஆனார். இருபத்தொரு முறை சத்திரியர்கள் அனைவரையும் கொன்று குவித்து, சத்திரிய விதவைகளிடம் உறவு கொள்ளப் பிராமணர்களை அனுப்பிவைத்த பரசுராமர் பிராமணிய மேலாண்மையை நிலை நிறுத்தும் புராணப் பாத்திரம் ஆகும். இந்தியச் சமூகத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட பிராமணீயத்துக்கும் வளர்ந்து வந்த சூத்திர சமூகத்துக்கும் ஏற்பட்ட மோதலின் குறியீடாகவே பரசுராமர் - பிள்ளையார் மோதலைக் கருத வேண்டியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

'ராமணீயத்தின் எதிரிகளான தாந்திரிகர்களிடமும் பிள்ளையார் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. தாந்திரிகர்களில் ஒரு பிரிவினரான வாமசாரியார்கள் வழிபடும் உச்சிஸ்ட கணபதி, தன் இடது தொடையில் நிர்வாணமான பெண்ணொருத்தி அமர்ந்திருக்க தனது துதிக்கையால் அப்பெண்ணின் பிறப்புறுப்பை வருடிக் கொண்டிருக்கும் நிலையில் காட்சியளிக்கிறார். வாமாச்சாரம் என்பது கட்டுப்பாடற்ற உடலுறவைக் குறிக்கும். பிராமணர்களைத் தவிர அனைத்துச் சாதியினருக்கும், வேத நெறியில் இருந்து பிறழ்ந்த பிராமணர்களுக்குமே வாமாச்சாரியம் உரியது. இவ்வாறு தாந்திரகத்தில் இடம் பெறும் கணபதியை, பிராமணீய சமயம் ஏற்றுக்கொள்ளாததில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை.அடித்தள மக்களின் கடவுளாகப் பிள்ளையார் விளங்கியதன் எச்சமாகத் தமிழகத்தில் இன்றளவும் சில செயற்பாடுகள் அரங்கேறி வருகின்றன. தென்மாவட்டங்களின் கரிசல் பகுதிகளில் மழை வேண்டி வெட்ட வெளியில் இருக்கும் விநாயகர் மீது மிளகாய் அரைத்துப் பூசப்படுகிறது ; கோவில் கருவறை வாயிலைப் பிள்ளையார் சிலை உயரத்துக்குக் களிமண் வைத்து அடைத்து உள்ளே தண்ணீரை நிரப்பிப் பிள்ளையாரை மூழ்கடிக்கின்றனர். மழை வரும் வரை இவை தொடரும். எரிக்கும் மிளகாய்ப் பூச்சில் இருந்து விடுபடவேண்டி அதனைக் கரைப்பதற்காகப் பிள்ளையார் மழையை வரவழைப்பார் என்றும், நீருள் மூழ்கிக் கிடக்கும் பிள்ளையார் மூச்சுத் திணறி மழையைப் பெய்விப்பார் என்றும் நம்புகிறார்கள். தானியங்களைப் பொலி தூற்றும் களத்துமேட்டில் காற்று வீச்சு நின்று அப்பணி தடைப்படின், சாணிப் பிள்ளையாரைத் தானியம் அளக்கும் மரக்காலால் மூடிவைத்துவிடுவர். காற்றின்றி வருந்தும் பிள்ளையார் காற்றை வரவழைப்பார் என்பது ஐதீகம். இப்படித் தமிழ்நாட்டில் உள்ள அடித்தட்டு மக்கள் தங்களுக்கு மிகவும் நெருக்கமானவராகப் பிள்ளையாரைக் கருதுவதாலேயே, நாட்டார் தெய்வங்களைப் போலப் பிள்ளையார் அவ்வப்போது தண்டனைகளுக்கும் ஆளாகிறார்.

பல்வேறு பழங்குடி அமைப்புகளை அழித்துப் பேரரசு உருவாகும் போது, தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் வழிகளில் ஒன்றாகத் தன் சமய வட்டத்துக்குள் பழங்குடிகளின் தெய்வங்களையும் இணைத்துக் கொள்ளும். அந்தவகையில் குப்தப் பேரரசில் ஆளுவோரின் சமயமாக விளங்கிய பிராமணிய சமயம் சூத்திரர்களின் கடவுளான பிள்ளையாரைத் தன்னுள் இணைத்துக் கொண்டது. இதன் விளைவாக, அதுவரை விக்கினங்களை உருவாக்குபவராக பிராமணீயத்தால் சொல்லப்பட்டு வந்த விக்கினேஸ்வரர் விக்கினங்களைப் போக்குபவராக மாறினார். பழங்குடிகளின் குலக்குறி என்ற தொடக்ககால அடையாளம் மறைந்து பிராமணீயக் கடவுளர் வரிசையில் பிள்ளையார் இடம் பெற்றார்.

பழங்குடிகள் மற்றும் சூத்திரர்களின் கடவுளாக இருந்து பின்பு பிராமணீயத்துக்குள் இழுக்கப்பட்ட பிள்ளையார் இந்திய அரசியலிலும் நுழைந்தார். 1893 ஆம் ஆண்டில், மராத்திய மாநிலத்தின் தலைநகரான மும்பையில் பிள்ளையாரின் அரசியல் பிரசேவத்துக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது. வெள்ளையர்களுக்கெதிரான அரசியல் இயக்கத்தில் பிராமணர் மற்றும் பிராமணர் அல்லாதவர்களிடம் நிலவிய இடைவெளியையும், காங்கிரஸ் இயக்கத்துக்கும் பாமரர்களுக்கும் இடையிலான இடைவெளியையும் போக்க, இந்தியத் தேசிய காங்கிரஸின் தலைவர்களுள் ஒருவரான திலகர் கணபதி உற்சவத்தைக் கருவியாகக் கொண்டார். அனைத்துத் தரப்பினரிடமும் பரவலாக அறிமுகமாகி வழிபடப்படும் பிள்ளையார் இம் முயற்சியில் மற்றக் கடவுள்களை விட அதிகம் உதவுவார் என்பது திலகரின் கணிப்பு. மக்களை வதைக்கும் அசுரர்களான வெள்ளையர்களை எதிர்ப்பது கணேசனை வழிபடுபவர்களின் கடமை என அவர் விளக்கினார். மேலும், சமய – சமூக விழாவாக விளங்கிய மும்பை முஸ்லீம்களின் மொஹரம் விழாவில் பெருமளவில் இந்துக்கள் கலந்து கொள்ளும் வழக்கத்தைத் தடுத்து நிறுத்தவும் கணபதி உற்சவம் உதவும் என்றும் நம்பினார். இவற்றின் அடிப்படையிலேயே,

8ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவும் ரணிலும் குழப்பமான தென்னிலங்கை அரசியலும்

**- கொழும்பிலிருந்து அர்ச்சனா டேவிட்**



அண்மையில், கொழும்பிலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பொன்றின் போது, ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா, சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு இன்று பெரிய தடைக்கல்லாக இருப்பது ரணில் விக்கிரமசிங்காதான் எனக் குற்றம் சாட்டியிருக்கிறார். ஆனால், இதனைக் கூறி ஒரு வாரம் ஆகவில்லை, சமாதான முயற்சிகளை, முன்னெடுப்பதற்கு ரணில் விக்கிரமசிகாவின் ஆதரவைக் கோரி அவருடன் ஓர் சந்திப்பையும் நடாத்தியுள்ளார். இதனால் தான், அரசியலில் ஒரு வாரம் என்பது மிகவும் நீண்ட காலம் என பிரிட்டிஷ் பிரதமர் ஒருவர் கூறியிருந்தாரோ தெரியவில்லை. இதற்கு சில வாரங்களுக்கு முன்னர்தான், திரு ஆறுமுகம் தொண்டமான், அரச தரப்புக்கு தாவுவதற்கு தன்னைத் தயார்ப படுத்திக் கொண்டிருந்த வேளையில், ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கும் என ரணில் அறிவித்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப்பற்றி ஜனாதிபதியிடம் வெளிநாட்டில் பத்திரிகையாளர்கள் வினவியபோது அம்மையார் ஒரே சொல்லில் “குப்பை” எனப் பதிலளித்தார். ‘ஆனால் இன்று இதே குப்பைகளினதும், தடைக்கற்களினதும், ஆதரவு கோரி, பேச்சுக்கு அழைத்திருக்கின்றார்.

சந்திரிக்காவின் இந்த அழைப்பை ஏற்று, சந்திப்பு ஒன்றிற்கு செல்லமாட்டார் ரணில், எனத்தான் எதிர்பார்க்பட்டது. ஏனெனில், எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து சமாதான முயற்சிகள் பற்றிக் கலந்துரையாடுகிறார் என்ற செய்தி, சர்வதேச ஊடகங்களில் உடனடியாகப் பரவவேண்டும் என்ற தேவை ஜனாதிபதிக்கு இருந்தது. லக்ஷ்மன் கதிர்காமர் ஏற்கனவே ஜப்பானுக்குப் பிச்சை பாத்திரத்துடன் புறப்பட்டுவிட்டார். நிதி அமைச்சர் சரத் அமுனுகம ஜெனிவாவிலும், அவரது செயலாளர் ஜயசுந்திர இந்தியாவிலும் ஏற்கனவே பாத்திரங்களுடன் நிற்கின்றனர். அவர்கள் அங்கு டொலருக்காகவும் யென்னுக்காகவும் கையேந்தி நிற்கையில், ஊடகங்களில், ஜனாதிபதியின், சமாதான முயற்சிகள் பற்றிய செய்திகள், பரவுவது பாத்திரத்தில் விழும் பிச்சைப் பணம் அதிகிரிப்பதற்கு உதவியாக இருக்கும். தென்னிலங்கையில் ஆட்சி செய்த இரு கட்சியினருக்கும் இது நன்றாகத் தெரிந்த விடயம். ஆனால் ஜனாதிபதியைச் சந்திப்பதைத் தவிர்ப்பதன் மூலம், கதிர்காமரின் பாத்திரத்தில் விழும் தொகையைக் குறைக்கலாம் என எதிர்க்கட்சி எண்ணியது. இந்தப் பின்னணியில் தான், ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதியின் அழைப்பை ஏற்காது ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி சந்திப்பைத் தவிர்த்து விடுவார்கள் என பரவலாக ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. கட்சியின் அரசியல் விவகாரக் குழு தொடர்பாக முடிவு செய்வதற்காகக் கூடியபோது பலதரப்பு விவாதங்களும் முன்வைக்கப்பட்டன. சந்திரிக்காவின் அழைப்பை ஏற்காவிட்டால் தாம் ஓர் பொறுப்பற்ற எதிர்க்கட்சி என்ற தோற்றத்தையே வெளிநாடுகளில் ஏற்படுத்திவிடும். அத்துடன் சமாதான முயற்சிகள் பின்னடைவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிதான் காரணம் என்ற பிரச்சாரம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஆகவே, ஜனாதிபதியைச் சந்திப்பது என்ற முடிவை எடுத்துக் கொண்டனர்.

வழமைபோல குறிப்பிட்ட நேரத்திற்கு ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்கவில்லை. ஒரு மணி நேரம் காத்திருந்ததற்குப் பின்னர்தான் அழைப்பு வந்தது. சந்திப்பின் முதல் 20 நிமிடங்களும், சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளரும், இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அமைப் பாளருமாகிய, எஸ்.பி. திசநாயக்காவையும், பெயர் குறிப்பிடாமல், தனது அமைச் சரவையிலுள்ள சில அமைச்சர்களையும், திட்டுவதிலேயே கழிந்தது. பின்னர், தனது அழைப்பிற்கான காரணத்தை தெரிவித்தார். சமாதான முன்னெடுப்பு களுக்கான தேசிய ஆலோசனை சபையொன்றை நிறுவுவதெனவும் அதற்குப் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இணைத் தலைவர்களாகச் செயற்படுவதெனவும் தனது ஆலோசனையை முன்வைத்தார். இவ் ஆலோசனைகளை எழுத்து மூலம் தந்தால், தனது கட்சியின் தலைமைப் பீடத்துடன் விவாதிக்க உதவியாக இருக்கும் என ரணில் விக்கிரமசிங்கா கேட்டபோது, கொடுப்பதற்கு ஜனாதிபதியிடம் ஒன்றுமே இருக்கவில்லை. பின்னர் அனுப்பி வைப்பதாகக் கூறி மழுப்பிவிட்டார். ஆனால் இதுவரை அவ்வாறான ஆவணம் எதுவும் அனுப்பப்படவில்லை. ஜனாதிபதியின் சமாதானத்தின் மீதான நாட்டம், அக்கறை எல்லாம் இந்த அளவில்தான் உள்ளது. இருப்பினும், தேசிய ஆலோசனைச் சபையின் இணைத் தலைவராக தம்மால் செயற்பட முடியாது என்பதைத் தெளிவாகத் தெரிவித்து விட்டுத்தான் ரணில் விக்கிரமசிங்கா வந்துள்ளார்.

ஜனாதிபதியைப் பொறுத்த வரையில் எப்படியாவது தனது சமாதான முன்னெடுப்புகளின் பங்காளியாக இணைத்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம், தென்னிலங்கையின் சிங்கள மக்களின், ஒருமித்த கருத்தொன்றை (Sinhala Consensus) தோற்றுவித்து அதன் அடிப்படையில், பேச்சுவார்த்தை ஒன்றை விடுதலைப் புலிகளுடன் நடாத்துவது. அதற்கான அழுத்தத்தை சர்வதேச சமூகம், புலிகள் மீது பிரயோகிக்கும் என நம்புகின்றார். இந்த நிலைமையைத் தோற்றுவித்து விட்டால், சர்வதேச சமூகமும், கொடையாளி நாடுகளும், நிதியுதவிகளைத் தாராளமாக வழங்குவர் என எதிர்பார்க்கின்றார். இதனால் தான், நிதியுதவிகள் வரும்வரை தனது பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யையும், சமாதானப் பேச்சுகள் தொடர்பாக சிறிது அடக்கி வாசிக்கும்படி அறிவுரை கூறியுள்ளார். ஜே.வி.பி.யும், நோர்வேயும் வேண்டாம், அதிகாரப் பகிர்வும் வேண்டாம், இடைக்கால அதிகார சபையும் வேண்டாம் என்ற தனது நிலைப்பாட்டில் இருந்து நோர்வே பங்கு பெறலாம், ஆனால், தமது கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு இறங்கி வந்துள்ளது. இடைக்கால சபையும் இறுதித் தீர்வும் என இறங்கி மேலும் இப்போ, இடைக்கால சபை பற்றிப் பேசி முடிவெடுப்போம். ஆனால் இறுதித் தீர்வு ஏற்பட்டதும் அதை அமுல்படுத்துவோம் என்கின்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ளது. ஆக இவ்வாறு நாளாந்தம் மாறிவரும் கட்சிகளின் நிலைப்பாடுகள் குறித்து மக்கள் மிகவும் குழப்பமடைந்திருக்கிறார்கள். இவ்வாறு மக்களைக் குழப்புவது தான் அரசியல்வாதிகளின் தொழில் தர்மம் என்றால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் அதை அப்பழுக்கில்லாமல் கடைப்பிடிக்கிறார்கள்.

# கிழக்கில் சந்திப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு படையினர் மேற்கொள்ளும் தந்திரங்கள்

கிழக்கின் பாதுகாப்பு நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருவதையே அங்கு தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கருணா குழுவினரை வைத்துக் கொண்டு இராணுவப் புலனாய்வுத்துறையினர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்த பின்னர்தான் நிலைமை மோசமடையத் தொடங்கியது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வைத்தே புலிகளின் மூன்று லெப்.கேணல் நிலையைச் சேர்ந்த சிரேஷ்ட போராளிகள் கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்தளவுக்கு மோசமான தாக்குதல்கள் இடம்பெற்று வருவதால் படையினருடன் பேசி எந்தப்பயனும் இல்லை என்று கூறி படையினருடனான சந்திப்புக்களைப் புலிகள் இடைநிறுத்தியிருந்தனர்.

கடந்த மே மாதத்துக்குப் பின்னர் புலிகள் படையினர் சந்திப்புக்கள் நடைபெறாத காலத்தில் நிலைமை சிக்கலடைந்ததால் கண்காணிப்புக்குழு படாதபாடுபட்டு மீளவும் இருதரப்பும் சந்தித்துப்பேச்சு நடத்துவதற்கான இணக்கப்பாட்டை எட்டியிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமைக்கு இந்தச் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது. இதற்கிடையே முதலில் சந்திப்பு நடைபெறத் திட்டமிட்டிருந்த கடந்த 3ஆம் திகதி விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ், தளபதிகள் ராம், ஜனார்த்தன் மற்றும் கௌசல்யன் போன்றோர் வன்னிக்கு சென்றனர்.

படையினருடனான சந்திப்பு தொடர்பாக தமது தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசனை செய்யும் நோக்கிலேயே கேணல் ரமேஷ் மற்றும் தளபதிகள் வன்னிக்குச் சென்றிருந்தனர். இவர்களின் பயணத்துக்கு சமாதானச் செயலகம் ஊடாக விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்றை வழங்கி உதவியிருந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர்கள் மட்டக்களப்புக்கு மீளத்திரும்பிச் செல்வதற்கு சமாதானச் செயலகம் ஊடாக புலிகள் ஹெலிகொப்டர் வசதி செய்து தருமாறு கோரிய போது அதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை.

விமானப்படையின் எதிர்ப்புக் காரணமாகவே ஹெலிகொப்டர் வசதி வழங்கப்படவில்லை எனச் செய்திகள் தெரிவித்தன. போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படாததால் கேணல் ரமேஷ் மற்றும் தளபதிகள் வன்னியிலேயே தங்கியிருக்கின்றனர்.

இதனால் கடந்த செவ்வாயன்று நடைபெறத் திட்டமிட்டிருந்த படையினர் புலிகள் சந்திப்பு இடம்பெறவில்லை. இந்த நிலையில்தான் செவ்வாய்க்கிழமை இரவு புல்லுமலையில் ஒரு பெரும் தாக்குதல் திட்டம் புலிகளால் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு நகரில் இருந்து 65 கி.மீ. தொலைவில் உள்ள எல்லையோரக் கிராமமான புல்லுமலையில் உள்ள புலிகளின் முகாம் மீது 34 பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய குழுவொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10.15 மணியளவில் தாக்குதல் மேற்கொண்டது. புலிகள் கடும் பதில் தாக்குதல் நடத்தியதில் தாக்குதல் நடத்திய குழுவினர் தப்பி ஓடியிருந்தனர். இச்சம்பவத்தில் தாக்குதல் நடத்த வந்த குழுவில் இருந்த இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட குழுவில் கருணா குழுவைச் சேர்ந்த ஆறு பேரும், மிகுதியானோர் இராணுவத்தினரும் அடங்கியிருந்ததாக புலிகள் குறறம் சாட்டியுள்ளனர். புலிகளின் பதில் தாக்குதலில் கொல்லப்பட்டோரில் நகுலன் என்ற கருணா குழு முக்கியஸ்தரும் அடங்குகிறார்.இந்தத் தாக்குதலில் இராணுவக் கொமாண்டோக்களும் பங்கேற்றனர் என்பதையும், இவர்கள் அனைவரும் தம்பிட்டிய விசேட அதிரடிப்படை முகாமுக்குத் தப்பிச் சென்றதாகவும் அப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ’மக்’என்ற பிரித்தானிய கண்ணிவெடி அகற்றும் நிறுவன ஊழியர்கள் தெரிவித்துள்ளர்.

இவர்களைப் பயமுறுத்தி காயமுற்ற, கொல்லப்பட்டோரின் உடல்களை தாக்குதல் நடத்தியோர் தம்பிட்டியமுகாம் வரை கொண்டு செல்லுமாறு அச்சுறுத்தியிருந்தனர். அவர்கள் தப்பி வந்தே இந்தத் தகவலை உறுதி செய்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் விடுதலைப் புலிகள் பாரதூரமான நிலைப்பாடுகளை எடுப்பதற்கான சாத்தியங்களை உருவாக்கியிருக்கிறது. அத்துடன் படைத்தரப்பு மேலும் முறுகலை வளர்த்து சண்டையை மீளத் தொடங்கும் முனைப்புடன்தான் இருக்கிறதென்ற உண்மை உறுதியாகி வருகிறது.

கிழக்கில் படையினரும் புலிகளும் சந்தித்துப் பேசினால் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கோட்டேகொட கூறிவந்தாலும் அத்தகைய சந்திப்புக்குப் படையினர் தயாராக இல்லை என்பதை அண்மைய நிகழ்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புவ் ஹொப்டே படையினரையும் புலிகளையும் கிழக்கில் சந்தித்துப் பேசுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு நோர்வே சென்று விட்டார். ஆனால் திட்டமிட்டபடி சந்திப்பு நடைபெறவில்லை. இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டது. இந்த இரண்டு ஒத்திவைப்புகளுக்கும் காரணம் அரச மற்றும் படைத்தரப்பேயாகும். இராணுவத்தினர் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே முதலில் திட்டமிடப்பட்ட சந்திப்பு பிற்போடப்பட்டது. பின்னர் கிளிநொச்சியிலிருந்து புலிகளின் தளபதிகளை அழைத்துவர ஹெலிகொப்டர் வசதி வழங்குவதற்கு படைத்தரப்பு மறுத்ததால் தான் சந்திப்பு இடைநிறுத்தப்பட்டது.

8ம் பக்கம் பார்க்க


MARKHAM/STEELES




NEW DET. HOME ,3 BM,3 WRM
NEW SCHOOL, CLOSE TO TTC,
RAVINE,GREAT NEIGHBORHOOD
ALL LUXARY FINISHINGS,
LOWEST PRICE, STARTER HOME
FREE DOWN payment
324 000.00

NIELSON / MCLEVIN




NIELSON / MCLEVIN
2+1 BEDRM CONDO APT. WELL MAINTED APT. step to TTC SCHOOL,COMMUNITY CENTRE MEDICL CENTRE PARK,SCHOPING, LOTS OF UPGRADE ,LOWEST PRICE IN THE
******BUILDING FOR QUICK SALE******
!DONOT WAIT ACT NOW
0% DOWN AVAILABLE

WARDEN/FINCH




3 BM/ 2 WM CONDO APT. WELL MAINTED APT. step to TTC SCHOOL,COMMUNITY CENTRE MEDICL CENTRE PARK,SCHOPING, LOTS OF UPGRADE , LARGEST UNIT IN BLDG !DONOT WAIT ACT NOW
0% DOWN
AVAILABLE

PORTUNION / LAWRENCE




3 BM/ 3 Wm. WELL MAINTED Step to TTC, Go stn, beach SCHOOL,COMMUNITY CENTRE MEDICLCENTREPARK,SCHOPING, LOTS OF UPGRADE, TOWNHOUSE,IMMACULATE CONDITION DONOT WAIT ACT NOW
0% DOWN AVAILABLE

# 1 selling agent
BACK TO BACK 2002 & 2003



PAT R.PUSHPAKANTHAN
B.Sc ENGG. SALES REP.
416 894 1187
Century 21 AFFILIATE REALTY INC.
416 290 1200


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க ஜனாதிபதி இவ்வாரம் நியூயோர்க் பயணம்



ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க இவ்வார இறுதி யில் நியூயோர்க் நோக்கிப் புறப்படவுள்ள அதேசமயம், ஐ.நா. கூட்டத்தில் கலந்து கொள்ளும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷையும், ஜனாதிபதி திருமதி குமாரதுங்கவையும் சந்திக்க வைப்பதற்கான ஏற்பாடுகளை நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. வுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஆரம்ப அமர்வுகள் எதிர்வரும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள அதேசமயம், நாட்டுத் தலைவர்களின் விசேட உரை 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறும். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் ஆற்றும் உரைக்கு அடுத்தபடியாக ஜனாதிபதியின் உரை இடம்பெறும். ஐ.நா. பொதுச் சபை அமர்வுக்குப் பின் ஜனாதிபதி, பல அரசியல் தலைவர்களைச் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்க ஜனாதிபதியை சந்திக்க வைப்பதற்கான, ஏற்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பிரசாத் காரியவசம் மேற் கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும் ஜனாதிபதி, இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கும், சமாதான முயற்சிகளுக்கும் சர்வதேச சமூகத்தின் கூடுதலான பங்களிப்பினைக் கோரவுள்ளார். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஜனாதிபதியுடன் நியூயோர்க் செல்லவுள்ளார்.

# அடுத்த கட்ட அனுகுமுறை குறித்து ஆராய தமிழ்ச்செல்வன் மாத இறுதியில் ஜெனீவா பயணம்

சமாதான முயற்சிகளின் அடுத்த கட்ட நகர்வுகளின்போது கையாள வேண்டிய அனுகுமுறைகள் குறித்து ஆராய்வதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஜெனீவாவுக்கு இம்மாத இறுதியில் பயணமாகவுள்ளனர்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் தயாரிப்பிற்கான ஆலோசனை கலப்புகளில் பங்கேற்ற முன்னாள் சட்ட மா அதிபர் சிவா பசுபதி, சிங்கப்பூரைச் சேர்ந்த பேராசிரியர் சுவர்ணராஜா, பேராசிரியர் இராமசாமி உட்பட நிபுணர் குழுவினருடன் தமிழ்ச்செல்வன் குழுவினர் நிலைமைகளை ஆராய விருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், ஜே.மகேஸ்வரன், வி.ருத்ரகுமார், புலித்தேவன் உட்பட புலிகளின் முக்கியஸ்தர்கள் ஜெனீவா கலந்து ரையாடலில் பங்கேற்பர்.



இப்பேச்சுவார்த்தைகள் மூன்று நாட்கள் நடைபெறும். இதன் பின்னர் சுவிற்சர்லாந்து வெளி யுறவு அமைச்சு அதிகாரி களுடன் தமிழ்ச்செல்வன் குழு வினர் சந்தித்துப், பேசுவதற்கு ஏற்ப டாகியிருப்பதாகத் தெரிய வருகிறது. பல்வேறு வெளிநாட்டுப் பிரமுகர்களையும் இவர்கள் சுவிஸில் சந்திப்பர். இதன் பின்னர் தமிழ்ச்செல்வன் குழுவினர் நோர்வே செல்லக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசை வலியுறுத்த வேண்டும்

### ஜப்பானிய தூதுவரிடம் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப் பட்டுள்ள இடைக்கால நிர்வாக யோசனைகளை ஏற்றுக் கொண்டு தடைபட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜப்பானிய அரசு இலங்கையரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜப்பானிய அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அரியூடோ சூடோவை நேற்று செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசிய கூ ட்டமைப்பின் இராஜதந்திர குழு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் சந்தித்து இலங்கையின் சமாதான முயற்சிகளின் தேக்க நிலை குறித்து மீண்டும் அப்பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத் தியுள்ளனர்.இச் சந்திப்பின் போது, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பில் இணைத்தலைவர்களாக விளங்கும் நான்கு நாடுகளில் ஜப்பானும் ஒன்று என்ற வகையில் இந்த சமாதானப் பேச்சுகளை முன்கொண்டு செல்ல வேண்டிய கடப்பாடு ஜப்பானுக்கு உண்டு என்று தாம் வலியுறுத்தியதாக பாராளுமன்ற உறப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.கிழக்கில் தற்பொழுது நிலவும் அமைதியற்ற சூ ழலுடன் படையினருக்கும் தொடர்பு இருப்பதாக மக்கள் சந்தேகம் கொண்டுள்ளதுடன் அச்சத்துடன் வாழ்வதாகக் குறிப்பிட்ட தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமாதானப் பேச்சு வார்த்தையைக் காப்பாற்ற வேண்டுமானால் யுத்த நிறுத்த உடன்படி க்கையைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருப்பதாகவும் ஜப்பானிய தூதுவருக்கு சுட்டிக் காட்டியுள்ளதாக தமிழ்க் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை தனிநாட்டிற்கான கோரிக்கை என சிங்கள கடும் போக்கு வாதிகள் குறிப்பிடுவது என தெரிவித்துள்ள தமிழ்க் கூ ட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னைய அரசாங்கம் முன்வைத்த மூன்று திட்டங்களுக்கு ஈடாகவே விடுதலைப் புலிகள் இடைக்கால திட்டத்தினை முன் வைத்தனர் எனவும் வலியுறுத்தியுள்ளனர். ஒன்றுபட்ட இலங்கைக்குள் முன் வைக்கப்பட்டுள்ள இந்த இடைக்காலத் தீர்வின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை முன்கொண்டு செல்ல வேண்டும் எனவும் தமிழ் கூட்டமைப்பினர் ஜப்பானிய தூதுவரிடம் தெரிவித்தனர்

# பேச்சு துரிதமாக இடம்பெற சர்வதேச சமூகத்தின் அழுத்தம் தேவை

### - கனடியத் தூதுவரிடம் கூட்டமைப்பு கோரிக்கை

சமாதான முயற்சிகளில் தேக்கம் ஏற்பட் டுள்ளதுடன் யுத்த நிறுத்தம் தொடருமா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது . எனவே, இந்த நிலைமையை மாற்றியமைத்து துரிதகதியில் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க கனடாவும், சர்வதேச சமூ கமும் தமது முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. இலங்கைக்கான கனடியத் தூதுவர் வலரின் ரேமரை நேற்று வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்த போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கனடியத் தூதரகத்தில் நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது தூதரகத்தின் அரசியல் துறைக்குப் பொறுப்பான கிறிஸ்ரினாவும் கலந்து கொண்டார்.மிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். சமாதான முயற்சிகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகும் ஒரு சூழலே தற்போது காணப்படுகிறது. எனவே, இந்த நிலைமையை மாற்றியமைக்க கனடா ஏனைய சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் தனது பங்களிப்பை வழங்க வேண்டும். தனிநாட்டுக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்ட விடுதலைப் புலிகள் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றைக் காண்பதற்கான ஒரு இடைக்கால நிர்வாக சபைத் திட்டத்தை முன்வைத்துள்ளனர். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றைக் காண்பதற்கான திட்டத்தை விடுதலைப் புலிகள் முன்வைப்பார்களா என்ற சந்தேகம் சர்வதேச சமூ கத்திடமும் தென்னிலங்கை மக்களிடமும் காணப்பட்டது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலேயே இடைக்கால நிர்வாக சபைக்கான நகல் திட்டம் முன்வைக்கப்பட்டது. எனவே, இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும், அரசாங்கத்துக்கும் கனடாவும், ஏனைய சர்வதேச நாடுகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.அழிந்து போயுள்ள வடக்கு, கிழக்கைக் கட்டி யெழுப்பவும் மீள் குடியேற்றம் மற்றும் அடி ப்படை மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளவுமே, இடைக்கால நிர்வாக சபைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை அடிப்படையாக வைத்தே சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும்.

அத்துடன், கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் சம்பவங்கள் அனைத்தும் படையினரின் ஒத்துழைப்புடன் நடைபெறுவது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் உடனடி யாக நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் யுத்த நிறுத்தத்துக்கு ஆபத்து ஏற்படலாம். இது குறித்தும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சமாதானப் பேச்சுக்கான சாத்தியம் வெகு தொலைவில் உள்ளது

### ரவூப் ஹக்கீம்



சமாதானப் பேச்சுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுமென்பதில் நோர்வே தரப்பு நம்பிக்கை இழந்திருப்பதாகவே இலங்கை வந்துள்ள நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் கருத்துகள் தெளிவாகக் காட்டுகின்றன. போர்நிறுத்த உடன்படிக்கையை இருதரப்பும் மீறாத வகையில் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத் தியிருக்கின்றார். கொழும்பு வந்துள்ள நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் செவ் வாய்க்கிழமை மாலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஷக்கீமை அவரது இல்லத்தில் சந்தித்து சுமார் 45 நிமிடங்கள் பேச்சுநடத்தினார். சொல்ஹய்முடன் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், தூதரக உயரதிகாரிகள் இருவரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். இச்சந்திப்பு முடி வடைந்த பின்னர் ரவூப் ஹக்கீம் ஊடக மாநாடொன்றை நடத்தினார்.

சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படுவது குறித்த நோர்வே தரப்பின் நிலைப்பாடு எவ்வாறாக உள்ளது என்று ஊடகவியலாளர்கள் கேட்ட போது ஹக்கீம் பதிலளிக்கையில் கூறியதாவது:. சமாதானப் பேச்சுகள் இப்போதைக்கு ஆரம்பிக்கப்படும் என்ற எந்தவிதமான நம்பிக்கையும் நோர்வே தரப்பிடம் காணப்படவில்லை. பேச்சுகள் குறித்த அதீத நம்பிக்கையின் வெளிப்பாடு காணப்படவே இல்லை. ஆனால், போர் நிறுத்த உடன்பாடு மீறப்படாமல் பாதுகாக்கப்படுவதும் இதுவரையில் நடந்திருக்கின்ற போர்நிறுத்த மீறல்கள் இருதரப்பிலும் பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கின்றன. இந்த நிலையில் இருதரப்புகள்மீதும் அழுத்தம் கொடுத்து அரசியல் படுகொலைகளைப் புலிகள் நிறுத்த வேண்டும் என்றும் இராணுவம் ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு கொடுக்கின்ற போக்கிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்றும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவது மிக அவசியமாக இருப்பதாகவும் இது தங்களுடைய தார்மீகப் பொறுப்பாகக் கருதுவதாகவும் சொல்ஹெய்ம் பிரஸ்தாபித்தார். பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான தருணம் இன்னமும் கனியவில்லை என்பதைப் போன்ற கருத்துகள் தான் அவரிடமிருந்து இன்று வெளிப்பட்டன.

5ம் பக்கம் பார்க்க

## அகாஷி வருகிறார்

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி இலங்கை நிலைவரம் தொடர்பாக அறிவதற் காக அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார். ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்ட வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரி வித்த விடயங்கள் தொடர்பாக நேரில் அறி வதே அவரது விஜயத்தின் நோக்கம் எனக் கூறப்படுகின்றது. இலங்கை விஜயத்தின்போது அவர் ஜனாதி பதி மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி கள் ஆகியோரைச் சந்திப்பார். இலங்கையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டை அறிவதில் அவர் முக்கிய கவனம் செலுத்து வார் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

A2Z Financial & Taxation Solutions.
Accounting, Bookkeeping & Tax Returns
உங்கள் வியாபார நிறுவனத்திற்கான வரவு செலவு கணக்குகள்
மற்றும் வியாபார, தனிநபர் வருமான வரி சேவைகளுக்கு....
அழையுங்கள்: Madhu (416)997-3114 Kenga (416)695-3973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் நடந்த கிழக்கின் உதயம் மாநாடு உணர்த்துவது என்ன?




அண்மையில் ''கிழக்கின் உதயம்'' எனும் அமைப்பினரால் ''வடகிழக்கு மாகாண இணைப்பை உடனடியாகப்பிரி'' எனும் தொனிப் பொருளில் கல்முனை மாநகரசபை மண்டபத்தில் மாநாடும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் நடத்தப்பட்டன. மாநாடு நடைபெறுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னரே அம்பாறை மாவட்டத்தின் கரையோரப்பிரதேசங்கள் தவிர்ந்த அனைத்து இடங்களிலும் இதற்கான போஸ்டர்கள், பெனர்களும் கட்டப்பட்டிருந்தன. மாநாடு நடைபெற்ற கல்முனைப்பிரதேசத்தில் அன்றிரவே போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. அந்தளவுக்கு இதனை யார் ஒழுங்கு செய்தார்கள் என்பதைக்கூட மக்கள் அறிந்து கொள்ள முடியாதவகையில் ஒழுங்குகள் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. எப்பொழுதும் போல் இப்பொழுது மிகவும் அதிகமாக வடகிழக்கு பிரிவை அழுத்தமாகப் பேசி வரும் அம்பாறை மாவட்ட அமைச்சர்களில் ஒருவர் இதற்குப் பின்னணியில் இருக்கின்றாரா? அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பெண் அமைச்சர் இதற்கு தலைமை வகிக்கப் போகின்றாரா? என்ற சந்தேகங்கள் எல்லாம் மக்கள் மனதில் தோன்றி இருந்தன. ஏன் என்றால் அப்படி அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாடுகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்புத்தான் இம்மாநாட்டுக்கும் வழங்கப்பட்டிருந்தது. அது மட்டுமல்லாது இவைகளுக்கு அப்பால் ''கிழக்கின் உதயம்'' எனும் பெயரில் அரசின் பங்காளிக்கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணி இதை ஏற்பாடு செய்துள்ளதா? என்ற சந்தேகமும் எழாமல் இருக்கவில்லை. மாநாடு கல்முனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தமிழ், முஸ்லிம் மக்களைத் தவிர மற்றைய அனைவருமே பௌத்த பிக்குகளும், சிங்கள பொது ஜனங்களுமாவர். இவர்கள் வெளி மாவட்டங்களிலிருந்து வாகனங்கள் மூலம் இதற்காகக் கொண்டுவரப்பட்டவர்கள். திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ இதில் பங்கு கொண்டமையினால் மக்கள் விடுதலை முன்னணியே இதை ஒழுங்கு செய்துள்ளது என்பதை மக்களால் ஊகிக்க முடிந்திருந்தது. ''இடைக்கால நிர்வாகத்தை புலிகளுக்கு தாரை வார்க்காதே'', ''கிழக்குப் படுகொலைகளை உடனடியாக நிறுத்து'' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத்தாங்கிய வண்ணம் ஊர்வலமும் நடைபெற்றது. மக்கள் விடுதலை முன்னணியின் சார்பு இயக்கமான கிழக்கின் உதயம் ஏன் இம்மாநாட்டுக்கான சிறந்த இடமாக கல்முனை மாநகரத்தைத் தெரிவு செய்தார்கள் என்ற சந்தேகம் புத்திஜீவிகள் மத்தியில் கிளம்பியுள்ளது. அண்மைக்காலமாக முஸ்லிம் அரசியல் தலைமைகளை நம்பிய மக்கள் தமது தலைமைத்துவங்களில் நம்பிக்கையிழந்து விட்ட நிலையில் மீண்டும் மீண்டும் ஏமாறமுடியாது என்ற நிலைக்கு வந்துள்ளனர். நாளுக்கு நாள் ஒவ்வொரு கட்சி ஆரம்பிக்கப்பட்டு அவரவர் சுயநல நிகழ்ச்சி நிரல்களை அடைய முற்பட்டு அதற்காக முழு முஸ்லிம் சமூகத்தையே விற்றுப்பிழைக்கின்ற அரசியலில் இனி ஏமாறுவதற்குத் தயாரில்லை என்ற மனோநிலை இப்பொழுது தென் கிழக்கு முஸ்லிம்களிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. என்றோ ஒரு நாள் இந்த நாட்டை ஆளப் போவது அல்லது பெரும் எதிர்க்கட்சியாக மாறப்போவது மக்கள் விடுதலை முன்னணியே என்ற கருத்து எல்லோரிடமும் இருப்பது போல் தென்கிழக்கு முஸ்லிம்களிடமும் இருக்கத்தான் செய்யும். எனவே இவைகளையெல்லாம் தமக்கு சாதகமாகப்பயன்படுத்தி அம்பாறை மாவட்ட முஸ்லிம்களிடம் தமது செல்வாக்கை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொள்ள மக்கள் விடுதலை முன்னணி வெள்ளோட்டமாக இம் மாநாட்டை நடத்தி முடித்திருக்கின்றது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜே.வி.பி. சார்ந்த மீன்பிடித்துறை அமைச்சர் விவசாய கால் நடைகள் அமைச்சர் ஜே.வி.பி. பாராளுமன்ற தேசியப்பட்டியல் உறுப்பினர் புஆத் முஸம்மில் ஆகியோர் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கு வந்து சென்றதும் இதன் பின்னணியிலேதான். புஆத் முஸம்மில் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியின் மூன்றில் ஒரு பகுதியை அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களுக்கு ஒதுக்கி அபிவிருத்தியில் ஜே.வி.பி.யும் இணைந்து கொள்ளது தீர்மானித்துள்ளது. ஜே.வி.பி.யினர் தமது அரசியல் நடவடிக்கைகளை அம்பாறை மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இரகசியமாக விஸ்தரித்து வருகின்றனர். அவர்கள் வருவதும் போவதும் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி. அமைச்சர்கள் பொது நிகழ்ச்சிகளுக்குக் கூட சமுகமளித்தால், அவை கூட கடைசி நேரத்திலேயே அறிவிக்கப்படுகின்றன. முஸ்லிம் அரசியல் தலைமைகள் சமூக நலன் கருதி தங்களது சொந்த இலாபங்களுக்கு அப்பால் ஒன்றிணையவில்லையானால் ஜே.வி.பி.யின் அம்பாறை மாவட்ட கனவு நனவாகும் சாத்தியங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. ஆனால் அவர்கள் இனப்பிரச்சினை விடயத்தில் பல விட்டுக் கொடுப்புகளைச் செய்யத்தயாராக வேண்டும். யார் எதைக் கூறினாலும் முஸ்லிம்களின் அதிக பட்ச ஆதரவைப் பெற்றுள்ள கட்சி என்ற ரீதியில் தற்பொழுது முஸ்லிம் காங்கிரஸின் கொள்கையே முஸ்லிம் மக்களின் கொள்கையாகும். அதுதான் வட கிழக்கைப் பிரிப்பதனால் தமிழ் முஸ்லிம் மக்களின் சகோதரத்துவ உறவில் மீண்டும் விரிசல் ஏற்படும். அதனை முஸ்லிம்கள் விரும்பவில்லை. அதே போன்றே இணைந்த வடகிழக்கில் எந்தவிதமான அதிகாரமுமற்ற அடிமைகளாகவாழவும் தயாரில்லை. அமரர் அஷ்ரப் இதைத்தான் கூறினார். வடகிழக்கை பிரிக்க வேண்டும் என்று அவர் எங்கேயும் கூறவில்லை. வடக்குடன் கிழக்கு இணைந்திருக்க வேண்டுமா அல்லது பிரிந்திருக்க வேண்டுமா என்பது எமக்கு முக்கியமல்ல. தமிழ் மக்களுடன் இணைந்து வாழ முடியும் என்ற உத்தரவாதமே முஸ்லிம்களுக்கு முக்கியம். அதை அவர்கள் வழங்க முன்வந்தால் ஏற்றுக் கொள்ளத்தயார். இவ்வுத்தரவாதம் சம்பந்தப்பட்டவர்களால் வழங்கப்படாதவிடத்து கல்முனை மாநாடு தொடரும். அதனை ஜே.வி.பி. பயன்படுத்திக் கொள்ளும். ஜே.வி.பி.யைப் பொறுத்தவரைக்கும் கல்முனை மாநாடு வெற்றியளித்திருக்கின்றது. ஆனால் அது எதுவரைக்கும் என்பதுதான் கேள்விக்குறியாகும்.

ஏ.பி.எம்.அஸ்வர் ஜே.பி, கல்முனை

# தமிழரின் அபிலாஷைகளுக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் செயற்படாது



தமிழரின் அபிலாஷைகளுக்கு எதிராக செயற்படக்கூடாது என்பதாலேயே வடக்கு, கிழக்கு இணைப்பு பிரிக்கப்படவில்லை வடக்கு, கிழக்கு இணைப்பு முஸ்லிம்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியது. எனினும் தமிழ்த் தேசியத்தின் நலன்கள் பாதிக்கப்படக் கூடாது என்னும் நோக்கில் மறைந்த தலைவர் அஷ்ர.:.ப் வடக்கு, கிழக்கு இணைப்பை பிரிக்க முற்படவில்லை. தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராக முஸ்லிம் தேசியம் செயற்படக் கூடாதென்பதில் அஷ்ர.:.ப் அவதானமாக இருந்தார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளருமான எப்.எம்.அமீருள் அன்சார் மௌலானா கூறினார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் வீரகேசரி பத்திரிகைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு சொன்னார். அந்த பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க் கட்சியில் இருப்பது ஒரு வசந்த காலம் எனக் கூறுகின்றார். எனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் எதிர்க்கட்சி அரசியலில்தான் அங்கம் வகிக்கப் போகின்றதா?

பதில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அதனைச் சூழ நடைபெறுகின்ற நிகழ்வுகளையும், அரசாங்கத்திற்குள் ஏற்படுகின்ற, இலகுவில் களைய முடியாத முரண்பாடுகளையும் அவதானிக்கும் போதும், நாட்டின் பொருளாதார அரசியல் நெருக்கடிகளையும் உற்று நோக்கும் போதும் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறுவது போல இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்காமல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பது சரியானதென்றே கருதுகின்றேன்.

இன்றைய அரசாங்கமானது ஆரம்பத்தில் வசந்த காலத்தில் இருந்தது. தற்பொழுது இலையுதிர் காலத்தில் வாழ்வது போல் தெரிகிறது. எதிர்கால நிலை கேள்விக்குரியதே. ஒரு பக்கம் தன் பங்காளியான ஜே.வி.பி.யை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க திணறுவதைப் பார்க்கின்றோம். மறுபக்கம் சமாதான முயற்சிகளில் ஓர் அடியைக்கூட முன்னெடுக்க முடியாமல் அரசு திணறுவதை காண்கின்றோம்.விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்ல, சந்திரிகாவுக்கு தனது பங்காளியான ஜே.வி.பி.யின் ஆதரவை வேண்டி நிற்கும் ஹெல உறுமயவுடன்கூட சமாதான அரசியலை நடத்த முடியாதுள்ளது.நாடு யுத்தத்திற்குச் செல்வதா? இல்லையா? என்ற பீதி ஒரு பக்கம் இருக்க தனது அரசியல் பொருளாதார கொள்கைகளை முன்னெடுப்பதில் சந்திரிகா ஜே.வி.பி.யுடன் பெரிய யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்த நாள் முதல் தன் கட்சி அழிந்து கொண்டு வருவதை சந்திரிகா இப்பொழுது உணர்ந்திருப்பார். இந்நிலையில் முரண்பட்ட அரசியல், பொருளாதார கொள்கை உடையவர்களுடன் எவ்வளவு காலத்திற்கு அரசியல் சக வாழ்வு நீடித்து நிற்கும் என்ற வினா எழுகிறது.

இந்த பாரிய சிக்கலுக்குள் அகப்படாமல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளமை கட்சியையும், அதன் தனித்துவத்தையும் பாதுகாத்து கொள்வதற்கு உதவும். இல்லாவிட்டால் அரசின் பங்காளியாகி தீர்வில்லாத பிரச்சினைகளுக்கு மக்களுக்கு விடை சொல்ல வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டிருக்கும்.எல்லாவற்றுக்கும் மேலாக தொய் வுற்றிருக்கும் கட்சி கட்டமைப்பை மீளக் கட்டி எழுப்பும் எங்களுக்குள்ளே சுய விமர்சனம் செய்துகொள்ளவும், மக்களின் ஐயங்களுக்கு பதில் சொல்லவும் இது வாய்ப்பான காலமாகும்.

கேள்வி: அண்மைக் காலமாக கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா வடக்கு கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட வேண்டும் என்று மிகவும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வருகிறார். இனப்பிரச்சினைக்கு அதுதான் தீர்வு என்றும் சொல்கிறார். ஆனால் நீங்கள் கட்சி மேடைகளில் அக் கருத்துகளுக்கு மாறுபாடான கருத்துகளைக் கூறி அவரது கூற்றை கண்டித்து வருகிறீர்கள். இது தொடர்பாக தெளிவான விளக்கமளிக்க முடியுமா?

பதில்: 1987ஆம் ஆண்டு இலங்கைஇந்திய ஒப்பந்த த்தினூடாக ஏற்படுத்தப்பட்ட வடக்குகிழக்கு இணைப்பானது முஸ்லிம்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத் தியுள்ளது. எனினும் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வின் அடிப்படை யாகவும் அத்திவாரமாகவும் அமைந்த, இணைந்த வடக்குகிழக்கு தமிழ் மக்களின் மொழி ரீதியான மாநிலம் என்ற சுயாட்சி கோரிக்கை வந்ததை வரலாற்றில் நாம் அறியலாம். எனவேதான் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ர.:.ப் கூட சக இனமான தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளுக்கு முரணாக முஸ்லிம் தேசியம் செயற்படக்கூடாதென்பதில் அவதானமாக இருந்தார். முஸ்லிம்களுக்கு வடக்குகிழக்கு இணைப்பு பாதகத்தை ஏற்படுத்தியபோதும் ஒரு நிரந்தர தீர்வை நோக்கிய அரசியல் பயணத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனையோடு ஏற்றுக்கொள்கிறது என்ற அரசியல் கோட்பாட்டை அவர் முன்வைத்தார்.

1986ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது முதல் தலைவர் அஷ்ர.:.ப் மரணிக்கும்வரை வடக்கு கிழக்கு இணைப்பு என்ற அத்திவாரத்தில் இருந்து கொண்டுதான் இனப்பிரச்சினை தீர்வை நோக்கினார். வடக்கு கிழக்கு இணைப்பு பற்றியும் முஸ்லிம் மக்களுக்கான சுயாட்சி பற்றியும் குரல் எழுப்பினார்.

அச்சுயாட்சிக்கான சொற்பதங்கள் வித்தி யாசப்பட்டிருக்கலாம். ஆரம்பத்தில் இணைந்த வடக்குகிழக்கிற்குள் பெரும்பான்மை முஸ்லிம் மாகாணம் என்றும், பின்னர் நிலத் தொடர்பற்ற தென்கிழக்கு அலகு என்றும் அவர் பேசியும் எழுதியும் வந்தார். 2000ஆம் ஆண்டு தலைவர் அஷ்ர.:.ப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய அரசியல் அமைப்பு தொடர்பான விவாதத்தில் வடக்குகிழக்கு இணைப்புக்கு எதிராக ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. முஸ்லிம்களுக்கு அதிக சேதமில்லாத விட்டுக்கொடுப்புடன் கூடிய வடக்கு கிழக்கு இணைப்பு பற்றிய நிர்வாக அலகு குறித்தே அவர் சிந்தித்துப் பேசினார்.

வடக்கு, கிழக்கிலே வாழும் தமிழ்த்தேசியத்தின் நீண்ட விடுதலைப் போராட்டத்தின் நலன்களுக்கு எதிராக ஒருபோதும் முஸ்லிம் சமூகம் இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக மறைந்த தலைவர் அஷ்ர.:.ப் இருந்ததால்தான் இணைப்பை ஏற்றுக் கொண்டு தமிழர் போராட்டத்திற்கு ஒரு வகையில் தார்மீக ஆதரவை தெரிவித்துக் கொண்டு, முஸ்லிம் தேசியத்திற்கான விடுதலைபற்றி சிந்தித்தார். இதே சிந்தனையின் அடிப்படையில்தான் இன்றைய தலைவர் ரவூப் ஹக்கீம் வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பான நிலைப்பாட்டை தொடர்ந்தும் பேணி வருகிறார்.எனினும் இணைந்த வடக்குகிழக்கு

6ம் பக்கம் பார்க்க

J.S.T.D Financial Service


பணமில்லையா? கவலை வேண்டாம்
2 நாட்களில் உங்கள் பிரச்சனையை தீர்க்க நான் இருக்கிறேன்
$ 25,000 - $50,000
■Line of Credit ■ Personal Loans ■Credit Cards ■Mortgage & Refinancing
Call JAY @
Office - 416.288.9425 Cell - 416.666.5381



S & S Satellite Service
SunTV and KTV மேலும் 300க்கு மேற்பட்ட TV Channels களும் உங்கள் இல்லம் நோக்கி வருகின்றன....
$430.00 மட்டுமே
Digital Satellite Systems.
Free- To-Air
சுதர்சன் 416.569.9372 - 514.568.0193
சிவா 416.908.5931

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஹெல்ஸ் ஏஞ்சல்ஸ்” தலைவர்களுக்கு 20 வருட சிறைத் தண்டனை




‘நரகத்தின் தூதர்கள்’ (Hells Angels) என அர்த்தம் கொண்ட மோட்டார் சைக்கிள் குழுவின் தலைவர்களான ஒன்ராறியோவைச் சேர்ந்த இருவருக்கு குபெக் மாகாண நீதி மன்றம் 20வருட சிறைத் தண்டனை வழங்கியுள்ளது. போதைவஸ்து கடத்தியமை, கொலை செய்ய முயற்சித்தமை, வன்முறைக் குழுவாகச் செயற்பட்டமை, உள்ளடங்க ஐந்து குற்றச்சாட்டுகளில், 51வயதான வால்டர் ஸ்ராட்நிக் (Walter. Stadnic) 42வயதான டொனால்ட் ஸ்ரொக்போர்ட்(Donald Stock ford) ஆகிய இருவரும் குற்றவாளிகள் என யூன் மாதத்தில், நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. 13 கொலைக் குற்றச் சாட்டுகளிலிருந்தும், 3 கொலை முயற்சிக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் ஸ்ராட்நிக் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தார். ‘நரக தூதர்கள்’ எனும் இவ் வன்முறைக் குழவினால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையால், குபெக் மாகாணத்தில் 150 பேர்வரை உயிரிழந்துள்ளனர்.

நீதிபதி ஜெரி சிக்மான் (Jerry Zigman) இவர்களுக்குரிய தண்டனையை வாசிக்கும் பொழுது, குற்றவாளிகள் இருவரும் உணர்ச்சி எதுவும் காட்டாமல் மௌனமாக இருந்தனர். “போதைவஸ்துகள் எமது சமூகத்தின் மீது எவ்வாறு கெடுதலான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை அறிந்திருந்தும் பெருமளவில் போதை வஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் திருத்த முடியாத கொடிய கிரிமினல்கள். தம்முடைய செயல்களுக்கு இதுவரை இவர்கள் எந்தவித வருத்தமும் தெரிவிக்கவில்லை. இவர்களை சமூகத்தில் சுதந்திரமாக நடமாட அனுமதிப்பது, சமூகத்திற்கு அபாயகரமான விளைவுகளையே கொடுக்கும்” இவ்வாறு தனது தீர்ப்பின் போது நீதிபதி தெரிவித்தார்.

2001ம் ஆண்டு குபெக் மாகாணப் பொலீசாரால் நடாத்தப்பட்ட தீவிர நடவடிக்கையின் போது, 200க்கும் அதிகமான ‘ஹெல்ஸ் ஏஞ்சல்ஸ்’ உறுப்பினர்கள் ஒரே இரவில் கைது செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கையின் போதுதான் ஸ்ராட்நிக்கும் ஸ்ரொக்போர்ட்டும் கைது செய்யப்பட்டனர். இவர்களின் வழக்கு விசாரணை ஆங்கிலத்தில் நடைபெற்றது. மொன்றியல் நகரிலுள்ள ‘ஹெல்ஸ் ஏஞ்சல்ஸ்’ அமைப்பின் ‘நோமட்ஸ்’(Normads) எனும் குழுவின் ஸ்தாபகர்கள் இவர்கள் இருவரும். போதை வஸ்து வியாபாரத்தை தமது கட்டுப்பாட்டில் எடுப்பதற்காக ‘றொக் மஷீன்’ (Rock Machine) எனும் இன்னொரு குழுவுடன் இவர்கள் ஓர் யுத்தத்தையே நடாத்தினர். ஏற்கனவே சிறையில் கழித்த காலத்தை கணக்கில் எடுத்துக் கொண்டால் இவரும் இன்னும் 13 ஆண்டுகளாவது சிறையில் இருக்க வேண்டியிருக்கும். அரச தரப்பு சட்டத்தரணி 24 வருட தண்டனை கோரியிருந்தாலும், நீதிபதியின் தீர்ப்பையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தார். கடந்த 31/2 வருடங்களில் ‘ஹெல்ஸ் ஏஞ்சல்ஸ்’ தொடர்பான 109 வழக்குகளில், குற்றவாளிகளுக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. கடந்த ஆறு வருடங்களாக, இவர்கள் இருவரும் பிரிட்டிஷ் கொலம்பியா, மனிட்டோபா, மற்றும் ஒன்ராறியோ மாகாணங்களில் ‘ஹெல்ஸ் ஏஞ்சலின்’ தலைவர்களாக செயற்பட்டுள்ளனர்.

# கனேடிய பத்திரிகையாளர், அரபுத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டார்.

-சிரச்சேதம் செய்யப் போவதாக அச்சுறுத்தினார்.



ஈராக்கின் வட பகுதியில் வைத்து அரபுத் தீவிரவாதிகளால் தான் கடத்தப்பட்டதாகவும், தன்னைச் சிரச்சேதம் செய்யப் போவதாக மிரட்டியதாகவும், கனேடிய பத்திரிகையாளர் ஸ்கொற் ரெய்லர்(ளுஉழவவ வுயலடழச) தெரிவித்தார். ஸ்கொற் ரெய்லர், பிரத்தியேகமாக யுத்தங்கள் நடக்கும் இடங்களில் செய்தியாளராக பணிபுரிபவர். இவர் நுளிசைவை ழுந ஊழசிள எனும் இராணுவ சஞ்சிகையின் வெறியீட்டாளராகவும், Halifax chromicle – Herald எனும் பத்திரிகைக்கு நிருபராகவும் உள்ளார். ஐந்து நாட்கள் தீவிரவாதிகளின் பிடியில் இருந்த இவர், கடந்த ஞாயிறு அன்று விடுதலை செய்யப்பட்டார். இஸ்ரேலிய உளவு நிறுவனமான மோசாட்டின் உளவாளி என தன்மீது குற்றம் சாட்டினர் என்றும், அவர்களின் பிடியில் இருந்த ஐந்து நாட்களில் மூன்று தடவை தன்னை சிரச்சேதம் செய்யப் போவதாக மிரட்டினர் என்றும் சி.பி.சி. வானொலிக்குத் தெரிவித்தார். கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து ஈராக்கில், வெளிநாட்டவர் கடத்தப்படுவதும், பின்னர் சிரச்சேதம் செய்யப்படுவதும் அதிகரித்தவண்ணம் உள்ளது. ஆகஸ்ட் 20ம் திகதி கடத்தப்பட்ட பிரஞ்சு பத்திரிகையாளர் இருவர் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை. தால் அபார்(Tal Afar) நகரத்தின் மீது அமெரிக்கர்கள் தாக்குதல் நடாத்தப் போவதாகச் செய்திகள் வெளிவந்த போது, அது தொடர்பான விபரங்களை அறிவதற்காக வெளியில் சென்ற சமயம், துர்க்மேனியர்கள் குழு ஒன்றினால் கைது செய்யப்பட்டார். பின்பு அவரைத் தடுத்து வைத்திருந்த வீடு அமெரிக்க அப்பாசச்சி ஹெலிகொப்படர்கள் மூலம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இவரும் இவரைக் கைது செய்து வைத்திருந்தவர்களும் உயிர் தப்பினாலும், தனது கடவுச் சீட்டு உட்பட சகல ஆவணங்களையும் இத்தாக்குதலின் போது இழந்துவிட்டார். அன்று அமெரிக்கர்களால் நடாத்தப்பட்ட வெவ்வேறு தாக்குதலில் 22 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர். பின்னர் பத்திரிகையாளர் ஸ்கொற் ரெய்லர், ஈராக்கியர்கள் அல்லாத வேறொரு அரபுத் தீவிர வாதக் குழவிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர்கள் இவரை சங்கிலியால் கட்டிவைத்து, மொசாத் உளவாளி என ஒப்புக்கொள்ளும்படி சித்திரவதை செய்தனர். மூன்று நாட்களுக்குப் பின்னர் இவரை ஓர் வாகனத்தில் ஏற்றி, துருக்கிய எல்லையில் விட்டுவிட்டுச் சென்றனர் இவருடன், துருக்கியப் பத்திரிகையாளர் ஒருவரும் கடத்தப்பட்டு முன்னரே விடுதலை செய்யப்பட்டுவிட்டார். இப் பத்திரிகையாளரே, ஸ்கொற் ரெய்லரின் கைது பற்றி கனேடிய தூதரகத்திற்குத் தகவல் தந்துள்ளார். கனேடிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர், ஸ்கொற் ரெய்லர் கடத்தப்பட்டது உண்மை என ஊர்ஜிதம் செய்தாலும் மேலதிக விபரங்கள் எமக்குத் தெரியாது என தெரிவித்துள்ளனர்.

பேச்சுகள் ஆரம்பிப்பது தொடர்பிலான முஸ்லிம்களின் நிலைப்பாட்டை நாம் உறுதியாக வெளிப்படுத்தியிருக்கின்றோம். முஸ்லிம் தரப்புகள் அனைத்தும் ஒருமித்து ஒரே குரலாக ஒலிக்கவேண்டி யதன் அவசியத்தையும் தெரிவித்திருக்கின்றோம். முஸ்லிம் அணிகளுக் கிடையில் முரண்பாடுகள் தொடருமானால் அது முஸ்லிம் சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கப்படக் கூடி யதாகவே அமையலாம். எம்மைப் பிளவுபடுத்த முனையும் சக்திகள் விடயத்தில் நாம் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டியிருக்கின்றது. முஸ்லிம் தனித்தரப்பு தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தயாரித்திருக்கும் யோசனைகள் உரிய வேளையில் பகிரங்கப்படுத்தப்படும். அவசரப்பட்டு குழப்ப நிலையை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட முடியாது.

1ம் பக்கத் தொடர்ச்சி(அரபாத்)

மாட்டோம் என்றும் அமெரிக்கா கூறியது. இதனால் இஸ்ரேல் அமைதி அடைந்தது. ஆக்கிரமித்து இருக்கும் பலஸ்தீன பகுதியில் இருந்து இராணுவத்தை அடுத்த ஆண்டு விலக்கிக் கொள்வது என்று பிரதமர் ஷரோன் தீர்மானித்து இருக்கிறார். இதற்கு இஸ்ரேலின் வலது சாரி அணியினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். அவர்களது எதிர்ப்பை சமாளிப்பதற்கு ஷரோன் பெரும்பாடுபட்டு வருகிறார். அந்த வகையில் தான் அவர் அரபாத்துக்கு மீண்டும் மிரட்டல் விடுத்து இருக்கிறார். அரபாத்தை கொலை செய்வோம் அல்லது பாலஸ்தீனத்தை விட்டு வெளியேற்றுவோம் என்று கூறி இருக்கிறார்.

5ம் பக்கத் தொடர்ச்சி (தமிழர்..)

மாகாண சபையில் அங்கத்தவர் பதவியை வகித்து, அதன் கீழான நலன்களையும் பெற்றுக்கொண்டு அண்மைக் காலம் வரை பெரும் தலைவரின் வழியில் செல்பவரென தன்னைக் கூறிக்கொண்டிருந்த சகோதரர் அதாவுல்லா ஏன் இவ்வாறு பேசுகின்றார் என்பது குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும்.

அவர் சுயமாகவே இதனைச் சொல்லிக் கொண்டிருக்கிறாரா? அல்லது சில உள்ளூர், வெளியூர் சக்திகளின் உந்துதலினால் அவ்வாறு பேசுகின்றாரா? என்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. வடக்குகிழக்கு இணைப்பு கடந்த காலங்களில் முஸ்லிம்களின் பொருளாதார, அரசியல், நிர்வாக ரீதியான உரிமை மறுப்பு என்பவற்றை ஏற்படுத்தியிருக்கலாம் அல்லது வடக்குகிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்களுக்கான அபிவிருத்தி நியமனங்கள் தொடர்பில் புறக்கணிப்பு ஏற்பட்டிருக்கலாம். இவற்றை பற்றி சொல்லாமல், தீர்வாக வடக்கு, கிழக்கு பிரிப்பை ஆராய வேண்டியுள்ளது. முஸ்லிம்களை கேட்ட பின்பே வடக்கு, கிழக்கு துண்டாடப்பட வேண்டுமென முஸ்லிம்கள் கோஷமெழுப்பின் அது முஸ்லிம்களை ஆபத்தின் உச்சிக்கு தள்ளிவிடும் ஒரு கோரிக்கையாக அமையாதா? வடக்கு, கிழக்கு இணைப்பை பிரிக்க வேண்டும் என்று கூறுவது இனப்பிரச்சினை தீர்வை இன்னும் சிக்கலாக்கவே துணைபுரியும். மறுபக்கம் தமிழர் தேசியத்தின் ஒரு அடிப்படைக் கோரிக்கையை தகர்த்துவிட்ட தகர்க்கின்ற நிரந்தர எதிரிகளாக முஸ்லிம்கள் இருக்கப்போவதை நாம் அனுமதிக்கின்றோமா? கிழக்கு மாகாணம் தனியே பிரிக்கப்படும்பொழுது அதன் எல்லைகளாக வருபவை எவை?

8ம் பக்கம் பார்க்க

# உலகின் முதலாவது ஒரேபால் விவாகரத்து



கடந்த யூன் மாதத்தில் ஒன்ராறியோவில் திருமணம் செய்த ஒரே பால் தம்பதிகளான இரு பெண்களுக்கு ஒன்ராறியோ உயர் நீதிமன்றம் விவாகரத்து வழங்கியது. இதுவே உலகின் முதலாவது ஒரேபால் விவாகரத்து. தனது தீர்ப்பை வழங்குகையில் நீதிபதி றுத்.மெஸ்பூர் (Ruth Mesbur) மத்திய அரசின் விவகாரத்துச் சட்டத்தில் ‘Spouse’ என்ற சொல்லுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம், அரசியல் யாப்பிற்கு முரணானதெனவும், அதனால் செல்லுபடியாகாதெனவும் தெரிவித்தார்.இருவர் திருமணம் செய்து கொள்ளும் உரிமை கனடாவின் ‘Charter of Rghts and freedom| என அழைக்கப்படும் அடிப்படை உரிமைச் சட்டததில் அங்கரீகரிக்கப்பட்டுள்ளது. அதில் ஆணும் பெண்ணும் மட்டும் தான் திருமணம் செய்து கொள்ளலாம் என வரையறை செய்யப்படவில்லை. இச் சட்டத்தின பிரகாரம் தான் 2003ம் ஆண்டு யூன் மாதத்தில் ஒன்ராறியோ மேன் முறையீட்டு நீதிமன்றம் ஒரேபால் தம்பதிகள் திருமணம் செய்து கொள்ளலாம் எனத் தீர்ப்பு வழங்கியிருந்தது. இத் தீர்ப்பின் பின் நூற்றுக் கணக்கான ஒரேபால் தம்பதிகள் திருமணம் செய்வதற்காக ரொறன்ரோவிற்கு வந்திருந்தனர். ஐந்து ஆண்டுகள் நண்பர்களாக இணைந்து வாழ்ந்த J.H., M.M. என அழைக்கப்படும் இரு பெண்கள் யூன் 18ம் திகதி ரொறன்ரோவில் திருமணம் செய்து கொண்டனர். ஆனால் இவர்களின் திருமண வாழ்க்கை ஐந்து நாட்கள் தான் நீடித்தது. பின்னர் விவாகரத்துக் கோரி ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். இம் மனு புதியதொரு சட்டச் சிக்கலை ஏற்படுத்தியது. ஒரேபால் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டாலும் கனடாவின் விவாகரத்துச் சட்டம் இத் திருமணங்களை அங்கரிக்கவில்லை. கனேடிய விவாகரத்துச் சட்டத்தில் ‘Spouse’ என்ற சொல் ஓர் கணவனை அல்லது மனைவியைத் தான் குறிக்கின்றது. இது ஒரேபால் விவாகரத்தில் அர்த்தமற்றதாகி விடுகிறது. இச் சொல்லை விவாகரத்துச் சட்டக் கோவையில் இருந்து நீக்கிவிட்டு தமக்கு விவாகரத்து வழங்குமாறு இரு பெண்களும் தமது மனுவில் கோரியுள்ளனர். ஒன்ராறியோ மாகாண உயர் நீதிமன்றம் ஒரேபால் திருமணத்தை அங்கீகரித்து வழங்கிய தீர்ப்பை எதிர்த்து அரசாங்கம் மத்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடர்ந்திருந்தது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கும் வரையில் இவ் விவாகரத்து வழக்கை பின் போடுமாறு அரச சட்ட வல்லுனர்கள் நீதிபதியைக் கேட்டிருந்தும், அவர் இவ் வழக்கை குறிப்பிட்ட திகதியில் விசாரணைக்கு எடுத்துத் தீர்ப்பும் வழங்கியுள்ளார்.





High Speed Internet
1St Month Free - Next 3 Months $24.99 Only

Bell ExpressVu
Satellite Tv
Starting From $7.00
( TVI, ATN and Over 500 Channels )



TVI, ATN தமிழ் தொலைக்காட்சி
சேவையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

Call Sunthar: 416.473.0058 or 416.289.2082
www.Speednetcanada.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் கெரியின் வெள்ளை மாளிகைக் கனவு கலைகிறது





போர் தொடர்பாக, தெளிவான நிலைப்பாட்டினை எடுக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றார். 50,000 அமெரிக்கர்களின், உயிர்களைப் பலியெடுத்த வியட்நாம் போரில், ஜோன் கெரி ஆற்றிய சேவையையும், காட்டிய அர்ப்பணிப்பையும், தனது தேர்தற் பிரச்சாரத்தின், அச்சாணியாக்க முயன்று அதில் ஓரளவு வெற்றியும் கண்டாலும், ஈராக் யுத்தம் தொடர்பாக, முன்னுக்குப் பின் முரணனான கருத்துக்களைக் கூறியதன் மூலம், தனது நம்பகத் தன்மையை, விரைவாக இழந்து வருகிறார்.

அமெரிக்கா தனது துருப்புக்களை ஈராக்கிற்கு அனுப்பி, 18 மாதங்கள் கூட ஆகாத நிலையில் 1000 வீரர்கள் அங்கு கொல்லப்பட்டுள்ளனர். வியட்நாம் போரைப் போலல்லாமல், பல மில்லியன் டொலர் பெறுமதியான, நவீன, ஆயுதங்களுடன் நடாத்தப்படும் இப் போரில், 1000 உயிர்களைப் பலிகொடுத்தும், யுத்தம் தீவிரமடைந்துள்ளதே அல்லாமல் தணியவில்லை. தேர்தல் நெருங்கிவரும் சமயத்தில், ஈராக்கில் அமெரிக்கத் துருப்புக்களுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்படக் கூடாதென்பதற்காக, ஈராக்கின் வெளி மாநிலங்கள் பலவற்றில் கிளர்ச்சிக்காரர்கள், மீண்டும் நிலைகொள்வதை கண்டும் காணாமல் இருக்கும்படி வெள்ளை மாளிகை, இராணுவத்திற்கு உத்தரவு இட்டுள்ளது என பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவ்வாறு தனக்குச் சாதகமான நிலைமைகள் பல இருந்தும் ஜோன் கெரியால் மக்கள் ஆதரவை தன்பக்கம் திருப்ப முடியவில்லை. ஜோன் கெரியின் இச் சரிவு, ஆகஸ்ட் 8ம் திகதி, பத்திரிகையாளர்களால் கேட்கப்பட்ட இலகுவான கேள்வியுடன் ஆரம்பமாகியது. "இன்று உங்களுக்கு தெரிந்த தகவல்களின் அடிப்படையில், ஈராக்கிற்கு துருப்புக்களை அனுப்புவது தொர்பாக என்ன முடிவு எடுப்பீர்கள்? ஆம் அல்லது இல்லை என்று பதில் சொல்லுங்கள்'' எனக் கேட்கப்பட்டது. அதற்கு ஜோன் கெரி "அவ்வாறான முடிவை எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் என்றே நான் கூறுகின்றேன். அவ் அதிகாரம் என்னிடம் இருக்குமேயானால் அவ்வதிகாரத்தை நான் திறமையாகப் பாவித்திருப்பேன்'' எனப் பதிலளித்தார். ஜோன் கெரி கேட்ட கேள்விக்கு நேரடியாகப் பதில் கூறவில்லையென்றாலும், ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்பது தெரிந்திருந்தும், ஜோன் கெரியும் ஈராக் மீது தாக்குதலைத் தொடுத்திருப்பார் என்றே அவரது பதிலைப் பலரும் அர்த்தப்படுத்தினர். இதே ஜோன் கெரிதான், சில மாதங்களுக்கு முன்னர், ஜனநாயகக் கட்சியின், ஜனாதிபதி வேட்பாளருக்கான முதல் நிலைத் தேர்தல்களின் போது, தன்னை ஓர் போருக் கெதிரான, வேட்பாளராகச் சித்தரித்திருந்தார். ஒரு வாரத்திற்கு முன்பு கூட சின்சினாட்டி நகரில் நடந்த ஓர் கூட்டத்தில் ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள யுத்தத்தை " தவறான இடத்தில், தவறான நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட தவறான யுத்தம்'' என் வர்ணித்திருந்தார். அது மட்டுமல்ல, இதே கூட்டத்தில் போர்ச் செலவுகள் பற்றிக் குறிப்பிடுகையில் ''200 பில்லியன் யுத்தத்திற்குச் செலவிடுகிறார்கள், ஆனால் எமது பிள்ளைகளின் பாடசாலைகளின் மேம்பாட்டிற்கு நிதியில்லை; ஈராக்கிற்கு 200 பில்லியன் செலவிடுகிறார்கள், ஆனால் எமது காயப்பட்ட வீரர்களின் சுகாதரா சேவைக்குப் பணப்பற்றாக் குறை; 200 பில்லியன் ஈராக்கில் செலவிடுகிறார்கள் ஆனால் எமது பொலீஸ் படையை நவீனமயமாக்க நிதியில்லை." என ஈராக் யுத்தத்திற் கெதிரான கருத்தை கூறுகின்றார். எனினும், சில மாதங்களுக்கு முன்னர், ஈராக் யுத்தத்திற்கு தேவையான நிதி குறைக்கப்பட வேண்டுமா? எனக் கேட்கப்பட்டபோது, "இல்லை, அதிகரிகக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்றேன்'' எனக் கூறியுள்ளார். தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், முதல் தவணைக் காலத்திலேயே ஈராக்கிலுள்ள அமெரிக்கத் துருப்புக்களின் எண்ணிக்கையைக் குறைப்பேன் என்றார். பின்னர் ஒரு வருடத்தில் குறைப்பேன் என்றார், இப்போ ஆறு மாத்தில் குறைப்பேன் என்கின்றார்.

இஸ்லாமியத் தீவிரவாதிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும், ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேயினுக்கும் எந்தவித தொடர்புமில்லை. ஜனாதிபதி புஷ் இவை இரண்டையும் முடிச்சுப் போட்டு, வேறு காரணங்களுக்காக ஈராக் மீது போர் தொடுத்துள்ளார். அவரது தவறான முடிவால், அமெரிக்க இளைஞர்கள் கொல்லப்படுகிறார்கள். நேச நாடுகளின் நட்பை இழந்து சர்வதேச ரீதியில் அமெரிக்கா தனிமைப்பட்டு உள்ளது. இந்த வாதங்களையே ஜனநாயகக் கட்சியினர், தமது தேர்தல் பிரச்சாரத்தின் மையப் பொருளாகக் கொண்டிருந்தனர். ஆனால், ஜோன் கெரியின், குழப்பகரமான நிலைப்பாடுகள், இதுவரை கூறிவந்த வாதங்கள் அனைத்தையும், மறுதலிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. அமெரிக்க ராஜாங்க செயலாளர் கொலி பவல் கூட சதாம் ஹுசேயினுக்கும், செப்டெம்பர் 11 தாக்குதலுக்கும் தொடர்பில்லை எனக் கூறியிருக்கும் நிலையில், ஈராக்கில், அமெரிக்க வீரர்கள், சுதந்திரத்திற்காகவும், பயங்கரவாதத்திற் கெதிராகவும் போரிடுகிறார்கள் எனக் கெரி கூறியுள்ளது, ஜனநாயகக் கட்சி அனுதாபிகளிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் அமெரிக்காவின் வரலாற்றிலேயே மிகவும் மோசமான ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தான் எனப் பெரும்பான்மையான அமெரிக்கர்கள் கருதியிருந்தார்கள். அவர்களின் அக்கணிப்பில் தவறேதும் இல்லை. ஆனாலும், இந்த மோசமான ஜனாதிபதியையே மக்கள் மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தந்துக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு அவர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டால், அதற்கான முழுப் பொறுப்பும், ஜோன் கெரி எனும் தனி மனிதனையே சாரும்

# பக்தாத் சந்தை கட்டிடப் பகுதியில் பாரிய குண்டுவெடிப்பு

**39 பேர் பலி பெருந்தொகையானோர் காயம்**



பக்தாத், மேற்கு பக்தாத்துக்கருகில் மக்கள் நிறைந்த சந்தைக் கட்டிடப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் குறைந்த பட்சம் 39 பேர் வரை கொல்லப்பட்டனர். பெருந்தொகையானோர் காயமடைந்தனர். மேற்கு பக்தாத் பொலிஸ் தலைமையகக் கட்டிடங்களின் அருகில் இச்சந்தைக் கட்டிடப் பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் மனித அவயவங்களும், பொருட்களும் சிதறிக் கிடந்தன. கட்டிட இடிபாடுகளையும் காணக்கூடியதாக இருந்தது. ஹைபா வீதியிலுள்ள பொலிஸ் நிலையத்தைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதல் என அமெரிக்க இராணுவமும் ஈராக்கிய உள்விவகார அமைச்சும் அறிவித்தன. இப்பகுதி கெரில்லாக்களினதும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரினதும் புகலிடமாக இருந்து வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, இப்பாரிய குண்டு வெடிப்பில் 39 பேர் கொல்லப்பட்டனர். 96 பேர் காயமடைந்தனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவை இரு கார்க் குண்டுத் தாக்குதல்களாக இருக்கும் என உள்துறை அமைச்சும் பார்வையாளர் வட்டாரமும் தெரிவித்தன. ஏக காலத்தில் மோட்டார் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன என்றும் பார்வையாளர்கள் தெரிவித்தனர். ''நான் அங்கே நின்று எனது நண்பரோடு கதைத்துக் கொண்டிருந்தேன். திடீரென பயங்கர ஓசை கேட்டது. இரத்தக் களரியைத்தான் கண்டேன். எனது நண்பர் விழுந்து இறந்தார்'' என சபீர் என்னும் பெயருடைய ஈராக்கியர் ஒருவர் குறிப்பிட்டார்.இவர் மருத்துவமனைக் கட்டிலில் இருந்தவாறு இதைக் கூறினார்.

இவரது முகத்தில் கீறல்களும் இரத்தக் கறைகளுமிருந்தன. வயிற்றுப் பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது. பக்தாத் மருத்துவமனைக்கு 23 சடலங்கள் கொண்டுவரப்பட்டன என அம்மருத்துவமனை வட்டாரம் தெரிவித்தது. குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்திற்கருகில் காணப்பட்டன.

மீட்புப் பணியாளர்கள் சந்தைக் கட்டிடப் பகுதியிலிருந்து சடலங்களை மீட்டார்கள். இப்பகுதியில் பாதணிகள், உடைகள், மனித அவயவங்கள்,சந்தையிலிருந்து சிதறுண்ட பழவகைகள், மரக்கறிகள் ஆகியவையும் சிதறிக் கிடந்தன.

**இரான் அணு வல்லமை:**

# விடை காணாத கேள்விகளுக்கு இரான் பதிலளிக்க வேண்டும்

**- ஐ.நா மன்ற அணு சக்தி நிறுவனத் தலைவர்**

ஈரான் நாடு ரகசியமான முறையில் அணு ஆயுதங்களை தயாரிக்க முயற்சிக்கவில்லை என வரும் நவம்பர் மாதத்திற்குள் சர்வதேச சமூகத்தைத் திருப்தி செய்ய வேண்டும் என்கின்ற காலக் கெடுவை விதிக்க வேண்டுமா என்பது குறித்து சர்வதேச அணு ஆற்றல் மையத்தின் கூட்டம் ஒன்று பரீசீலித்து வருகிறது. ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் நடைபெறும் மாநாடு ஒன்றில் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் வைத்துள்ள முன்வரைவுத் திட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு கருத்து இருக்கிறது.

ஆனால், இரானின் அணு ஆற்றல் மையங்கள், திட்டங்கள் குறித்த விசாரணையை முடிவுக்கு கொண்டு வர எவ்வித கால அட்டவணையையும் தான் குறிப்புணர்த்தவில்லை என்று சர்வதேச அணு ஆற்றல் மையத்தின் தலைவர் முகம்மத் எல்-பரதேய் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மேலும் இந்த விசாரணை எவ்வித ஒளிவு மறைவுமின்றி நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். தாங்கள் அணு ஆயுதங்கள் தயாரிக்க முற்படுவதாய் கூறப்படுவதை மறுக்கும் ஈரானும் கூட, சர்வதேச சோதனைகள் வரும் நவம்பரில் முடிவடைய வேண்டும் என்று விரும்புகிறது. யுரேனியம் செறிவூட்டப்படுவதை இடைநிறுத்தம் செய்ய சென்ற ஆண்டு ஒத்துக் கொண்ட, ஈரான், மீண்டும் அவ்வாறு செய்ய திட்டமிடுவதாக வியன்னா கூட்டத்தில் கலந்து கொண்ட, ஈரானின் பிரதிநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## ரஷ்ய ஹெலி மீது தீவிரவாதிகள் தாக்குதல்

செச்னிய வான்பிரதேசத்தில் பறந்து கொண்டிருந்த ரஷ்ய இராணுவ ஹெலிகொப்டரை தீவிரவாதிகள் விமான எதிர்ப்பு ஏவுகணை மூலம் தாக்கியுள்ளனர். இதனால் இதில் பயணம் செய்த விமானப்படை ஊழியர்கள் இருவர் பலியானார்கள். அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஸ்டிங்கர் ஏவுகணைகள் செச்னியா தீவிரவாதிகளுக்கு கிடைத்ததும், அவர்கள் ரஷ்ய இராணுவ ஹெலிகொப்டர்களை அடிக்கடி தாக்கி வருகின்றனர். கடந்த 2002 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் போக்குவரத்து ஹெலிகொப்டரை தீவிரவாதிகள் வீழ்த்தியதில் 118 வீரர்கள் பலியானார்கள். திங்கட்கிழமை மத்திய செச்னியா மீது பறந்த இராணுவ ஹெலிகொப்டர் தரையில் விழுந்து நொருங்கியது. இதில் இருந்த இரு விமானப்படை ஊழியர்களும் பலியானார்கள். தொழில் நுட்பக்கோளாறு காரணமாக இது விழுந்து நொறுங்கியதாக முதலில் கூறப்பட்டது. பின்னர் வந்த தகவல்கள், தீவிரவாதிகள் தாக்குதலால் தான் லிகொப்டர் வீழ்த்தப்பட்ட தாகத் தெரிவித்தன. இராணுவ அமைச்சரக விசாரணைக் குழு விசாரணையில் இந்த தகவல் கிடைத்தது.

## வட கொரிய குண்டு வெடிப்பு சம்பவ இடத்துக்கு ராஜீய அலுவலர்கள் அனுமதி

வட கொரியாவில் அண்மையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு பல்வேறு யூகங்களை எழுப்பியுள்ள நிலையில், குண்டு வெடிப்பு நடந்த இடத்திற்கு வெளிநாட்டு ராஜ தந்திரிகள் செல்ல வட கொரிய அரசு அனுமதி அளித்துள்ளதாக, அந்நாட்டில் தற்போது பயணம் செய்து வரும் பிரிட்டி' வெளியுறத் துறை பிரதி அமைச்சர் பில் ராமல் தெரிவித்துள்ளார். நாட்டின் வடக்கே அமைந்துள்ள வெடிகுண்டு வெடித்த இடத்திற்கு ராஜதந்திரிகள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தலைநகர் பியோங்யாங்கில் பேசிய ராம்மல் தெரிவித்தார். சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற குண்டு வெடிப்பு, வட கொரியா தன்னுடைய முதலாவது அணு ஆயுத சோதனைய நடத்தியிருக்குமா என்ற யூகத்தினை எழுப்பியுள்ளது. ஆனால், நீர் மின் திட்டம் ஒன்றிற்காக மலை ஒன்றினை வேண்டுமென்றே தாங்கள் வெடி வைத்து தகர்த்ததாக வட கொரிய வெளியுறவுத் துறை அமைச்சர் பேக் னேம் சன் தெரிவித்தார்.

வெடி குண்டு வெடித்ததாக கூறப்படும் ஒதுக்குப் புறமான இடத்தில் இருந்து மிகப் பெரிய புகை மண்டலம் ஒன்று எழும்பியுள்ளது போல செய்கோள் புகைப்படங்கள் காட்டியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம் பக்கத் தொடர்ச்சி

விநாயகசதுர்த்தி எனப்படும் பிள்ளையாரின் அவதார நாளை ஒட்டி அதுவரை தனித்தனியாக, விரும்பிய நேரத்தில் கணபதியின் உருவத்தைக் கடலில் போடச் சென்ற மராத்திமக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து, குறிப்பிட்ட நேரத்தில் ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்று கடலில் கரைக்கும் புதிய முறையை - 1893இல்- திலகர் உருவாக்கினார். பேரணியில் பாடிச் செல்வதற்கென்று பஜனைப் பாடல்களும் இதனை ஒட்டி உருவாயின. இப்பாடல்களில் பக்திமட்டுமன்றி, ''அந்நிய மதம் தன்னை அந்நியப்படுத்து'' என இந்துக்களையும் இஸ்லாமியர்களையும் பிளவு படுத்தும் மதவாத வித்துக்களும் தூவப்பட்டன. திலகர் இந்திய விடுதலை இயக்கத்தை மதத்துடன் இணைத்ததன் மூலம் தேசியஇயக்கத்தின் போக்குக்குப் பெரும் தீங்கு பயக்கும் முறையில் அரசியல் தீவிரவாதமும் மதவகுப்பு வாதமும் நாசகாரமாய் இணைந்தது. அதன் தொடர்ச்சிதான் இன்றைய 'ஆர். எஸ். எஸ்', 'விஸ்வ ஹிந்து பரிஷத்', 'பஜ்ரங்தள்' போன்ற சங்பரிவாரங்கள் எல்லாம். 1981இல் தமிழகத்தில் தேவேந்திர குலவேளாளர்கள் சிறு சிறு குழுக்களாக இஸ்லாமியத்தைத் தழுவிய வேளையில், 'தாய்மதம் திரும்பச் செய்தல்' என்ற முழக்கத்துடன் 'இந்து முன்னணி' என்ற இயக்கம் வட இந்தியாவில் இருந்து வந்த துறவிகளாலும் தமிழகத்தின் இந்து மத அடிப்படைவாதிகளாலும் உருவாக்கப்பட்டது. வகுப்புவாதத்தை 'அதிகாரத்துக்கான கருவி' யாகப் பார்ப்பவர்கள் சமயங்களைப் பின்பற்று வோரிடையே பகை உணர்வை உருவாக்கி வகுப்புக் கலவரங்களுக்கு வித்திடுகின்றனர். இத்தகையவர்களுக்கு 'வகுப்புவாதம்' என்பது அடிப்படையில் ஆட்சியைப் பிடிப்பதற்கான ஒரு தந்திரமே ஆகும். இத்தந்திரத்தின் வெளிப்பாடாகவே 1990ஆம் ஆண்டு பிள்ளையார் ஊர்வலம் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ''எங்களுக்குத் தனித்தன்மை கொண்ட தளமில்லை என்பதாலேயே நீண்ட காலமாகத் தமிழகத்தில் காலூன்ற முடியவில்லை. எனவேதான் விநாயகரைக் கொண்டு எங்கள் இயக்கத்தை, மதத்தை வளர்க்க முயற்சிக்கிறோம'' என்று சிசேனாவின் செய்தித் தொடர்பாளர் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிறமத எதிர்ப்பை மையமாகக் கொண்டு தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட பிள்ளையார் ஊர்வலத்தின் பின்னணியில் வணிகப் போட்டியும் இணைந்து கொண்டது. வட இந்தியாவிலிருந்து வந்து வாணிபத்திலும் வட்டித் தொழிலிலும் ஈடுபட்டு ஒரு வலுவான சக்தியாகத் தமிழகத்தில் காலூன்றிவிட்ட மார்வாரி வகுப்பினர் தங்கள் வாணிபப் போட்டியாளர்களான இஸ்லாமியர்களை ஓரங்கட்டுவதற்கு விநாயகர் ஊர்வலத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். பிரமாண்டமான பிள்ளையார்களை உருவாக்கி, வழிபாடு நடத்தி, கடைசியல் கடலில் கரைக்கும் வரை ஆகும் செலவினை பின்னணியில் இருந்து சமண சமயத்தவரான இவர்களே பொறுப்பேற்றுக் கொள்கின்றனர்.

ரதயாத்திரையின் போது வட இந்தியாவில் கோபம் கொண்ட முகத்தோடு கூடிய இராமர் அறிமுகப்படுத்தப்பட்டார். அது போல, இராமர் வழிபாடு செல்வாக்குப் பெறாத தமிழ் நாட்டில் மேட்டிமைத் தன்மை வாய்ந்தோரையும் அடித்தளமக்களையும் இணைக்கும் வெகு ஜனக் கடவுளான பிள்ளையாரின் கைகளில் மோதகம், மாம்பழத்துக்கும் பதிலாக இந்துமத அடிப்படை வாதிகள் வாளையும், ஏ.கே. 47 துப்பாக்கியையும் திணித்தனர். ஆயுதங்கள் தாங்கிய இந்த விநாயகருக்கு வீரவிநாயகர் என பெயரும் சூட்டினர். தமிழில் அர்ச்சனை செய்வதற்கும், பிராமணர் அல்லாதோர் அர்ச்சகர் ஆவதற்கும் ஆகம விதிகள் இடம் தரவில்லை என்று கூக்குரல் இடுபவர்கள் ஏ கே. 47 விநாயகரையும், டைனொசோர், காட்ஸில்லா போன்ற அச்சுறுத்தும் விலங்குகளில் உலாவரும் விநாயகர்களையும் அங்கீகரித்து ஊர்வலத்தில் அனுப்பி வைக்கின்றனர்.

ரதயாத்திரையின் போது அறிமுகப்படுத்தப்பட்ட கோபங் கொண்ட முகத்தோடு கூடிய இராமரின் கரத்தில் இருந்த வில் - அம்பு 1992 டிசம்பர் 6 ஆம் நாள் பாபர் மசூதியைத் தகர்த்தது. இது போன்று வீர விநாயகரின் கையில் இருக்கும் ஏ.கே.47 துப்பாக்கியின் இலக்கு தமிழகத்தின் மதச்சிறுபான்மையினர்தான் என்பதற்கு விநாயகர் ஊர்வலம் கடந்து செல்லும் பாதைகளை, முடிவடையும் இடங்களை, தாரை தப்பட்டைகளுடன் முழங்கும் கோஷங்களை விடவும் வேறு என்ன சான்றுகள் வேண்டும்?

6ம் பக்கத் தொடர்ச்சி(தமிழர்)

அதற்குள் சிங்களவர்கள் வருவார்களா? அதற்கான நிர்வாக கட்டமைப்பு எப்படிப்பட்டது? போன்றவற்றைப் பற்றி விளங்காமல் வெறும் பிரிப்பு பற்றியே அதாவுல்லா கூறி வருகின்றார். ஏற்கனவே சிங்கள பேரினவாதத்தின் குடியேற்ற வாதத்தினாலும், நிர்வாக அடக்முறையினாலும் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள், வடக்கில் இருந்து கிழக்கு பிரிக்கப்படும்பொது காலப்போக்கில் முற்றுமுழுதான சிங்கள மயப்படுத்தப்பட்ட மாகாணமாக மாறாது என்ற உத்தரவாதத்தை வடக்கு கிழக்கை பிரிக்க வேண்டும் என வலியுறுத்துபவர்களால் தெளிவாகக் கூற முடியுமா?

அமைச்சர் அதாவுல்லா முஸ்லிம்களின் பிரச்சினைக்கும், தமிழர்களின் பிரச்சினைக்கும் வடக்கு கிழக்கு பிரிப்பு ஒருபோதும் யதார்த்தமான தீர்வை தராது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

கேள்வி: தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவும், அதனை ஜே.வி.பி., ஹெல உறுமய எதிர்த்து வருவது தொடர்பாகவும் உங்களின் கருத்து என்ன?

பதில்: போதுமான மூச்சின்றி திணறிக் கொண்டிருக்கும் இலங்கை தேசத்தை காப்பாற்ற வேண்டுமாயின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் பேச்சுவார்த்தை கதவுகளை மீளத் திறக்க வேண்டும். ஆனால் துரதி'டமாக சிங்கள கடும் போக்காளர்களான ஜே.வி.பி. மற்றும் பௌத்த பிக்குமார் யதார்த்தத்தை மறந்த நிலையில் சமாதானத்திற்கு எதிராக பேசிக் கொண்டிருக்கின்றனர்.புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாக வைத்துக்கொண்டு பேச வேண்டும் என்று கூறுவதை ஜீரணித்துக்கொள்ள முடியாமலே ஜே.வி.பி. அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தையையும் குழப்பிக் கொண் டிருக்கிறது.பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு முன்னரே புலிகளுக்கு தன்னாட்சி அதிகார சபை ஒன்றை கொடுத்துவிடப் போவதாக ஒரு மாயத் தோற்றத்தை ஜே.வி.பி. சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்க முற்படுகிறது. ஜனாதிபதி உண்மையை உணர்ந்த நிலையில்தான் பேச்சுக்குத் தயார் என்கிறார். ஆனால் பாவம். அவரது அரசியல் நண்பரான ஜே.வி.பி.யை ஆசுவாசப்படுத்த முடியவில்லை. பொருளாதார ரீதியாக மக்களின் செல்வாக்கை இழந்து வரும் அரசில் இருந்து தனது அரசில் இருப்பை பாதுகாப்பதற்காகத்தான் சமாதானப் பேச்சுவார்த்தை, இடைக்கால நிர்வாக சபை பற்றிய முரண்பாடான கருத்துக்களை முன் வைத்துக் கொண்டு ஜே.வி.பி. அரசியல் முரண்பாட்டை ஏற்படுத்தி வருகிறது. இடைக்கால அதிகார சபை கோரிக்கை நாட்டை பிளவுபடுத்தும் என்று ஜே.வி.பி. கூறுவது அதன் அரசியல் முதிர்ச்சியின்மையின் அடை யாளமாகும். ஏற்கனவே இந்நாட்டில் இரண்டு நிர்வாக கட்டமைப்பு இருப்பதையும் தேசம் பிளவுபட்டு உள்ளதையும் கண்டு உணராமல் சிவப்புச்சட்டைக்காரர்கள் பேசி வருகின்றார்கள். புலிகள் கேட்கின்ற எல்லாவற்றையும் பேச்சுவார்த்தை மேசையில் கொடுப்பது என்பது அர்த்தமல்ல. பேச்சுவார்த்தைக்கு அவர்களைக் கொண்டு வந்தால்தான் புலிகளுக்கு சில யதார்த்தங்களைப் புரிய வைக்க முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுக்கு வழங்கப் போகின்ற இடைக்கால நிர்வாக கட்டமைப்பானது, இலங்கை அரசியல் யாப்புக்குள்ளும் இலங்கை தேசத்திற்குள்ளும் உருவாக்கப்படவுள்ளதென்பதை எதிர்ப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். புலிகளின் ஆலோசனையில் இருக்கும் சாதகமான, பாதகமான அம்சங்களை பரிசீலனை செய்வதற்கும், மாற்று யோசனைகளை முன் வைப்பதற்கும் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அப் பேச்சுவார்த்தையில் அரசும்புலிகளும் மட்டுமல்ல பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பிரதான எதிர்க்கட்சி, ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஈடுபட வேண்டும். அப்போதுதான் பொதுப்படையான தீர்வை எட்ட முடியும்.இதை உணராமல் இலங்கை அரசும் அரசியல் கட்சிகளும் நடந்து கொள்கின்றமை ஏற்கனவே பிளவுபட்டுள்ள இந்த தேசம் நிரந்தரமாகவே பிளவுபடும் பேரபாயத்தையே எடுத்துக் காட்டுகிறது.இந்த யதார்த்தங்களின் அடிப்படையில்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம், அதன் தலைமையும் சமாதானப் பேச்சுவார்த்தையை மீள விட்ட இடத்தில் இருந்து தொடர வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கின்றன. வடக்குகிழக்கிற்கான ஒரு அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் தமிழ் தேசியம், முஸ்லிம் தேசியம் என்பவற்றின் ஒட்டு மொத்த அரசியல் அபிலாஷ'கள், சுயநிர்ணயம் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு தீர்வைக் கண்டு நெருக்கடியான இக்கால கட்டத்திற்கு தீர்வு காண வேண்டும்.

பேட்டி கண்டவர்: செல்லையா பேரின்பராசா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரத்தை நோக்கி ரஷ்ய அதிபர் புற்றின்




ரஷ்யாவின் தென்முனையிலுள்ள பெஸ்லான் நகரில், பாடசாலை ஒன்றை இஸ்லாமியத் தீவிரவாதிகள், கைப்பற்றியதைத் தொடர்ந்து உருவாகிய நெருக்கடி, 450 உயிர்களைப் பலி கொடுத்ததுடன் முடிவடைந்தது. உணர்ச்சிகளையே வெளிக்காட்டாத, கல் மனிதன் எனக் கருதப்படும் ரஷ்ய அதிபர் லிஸ்டிமீர் புற்றின் கூட இச்சம்பவத்தால் ஆடிப்போய்விட்டார். இச்சம்பவத்தின் பின்னர், புற்றின் பேச்சுக்களில், உடைந்து போன சோவியத் ஒன்றியதின் காலத்தில், ரஷ்யர்கள் எவ்வளவு பாதுகாப்பாக வாழ்ந்தனர் என அங்கலாய்ப்பு தென்பட்டது. பயங்கரவாதிகள் ரஷ்யா மீது போர் தொடுத்துள்ளார்கள் என்றும், அவர்களுக்குப் பின் பலமாக அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் செயற்படுகின்றன என்றும் அவர் குற்றம் சாட்டியது, சோவியத் ஒன்றியத்தின் உடைவுடன் முடிந்து போய்விட்டதாகக் கருதப்படும் பனிப்போர் காலகட்டத்தையே நினைவூட்டுகிறது. ரஷ்யாவின் அணுவாயுத பலத்தையிட்டு அமெரிக்கா அஞ்சுவதாகவும், அதனால் ரஷ்யாவைப் பணியவைக்க இப் பயங்கரவாதிகளை அமெரிக்கா பாவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். சில தினங்களுக்கு முன், மேற்குலக புத்தி ஜீவிகள் மற்றும் பத்திரிகையாளர்களுடன் அவர் நடாத்திய கலந்துரையாடலின் போது மேற்குலகத்தின் மீது தனக்கிருந்த கோபத்தை மறைப்பதற்கு முயற்சிக்கவில்லை. "மேற்கு நாடுகள், பயங்கரவாதிகளுக்கு நேரடியாக உதவுகின்றார்கள் எனக் கூறுவதற்கு என்னிடம் ஆதாரங்கள் இல்லையெனினும், ரஷ்யாவில் உள்நாட்டுப் பிரச்சினை சிலவற்றைத் தூண்டி விடுவதன் மூலம், சர்வதேச அரங்கில் ரஷ்யாவைப் பலவீனப் படுத்திவிடலாம் என சில அரச வட்டாரங்கள் கருதிச் செயற்படுகின்றன என நான் எண்ணுகிறேன்" எனக் கூறினார். உதாரணமாக மேற்குலக நாடுகள் பல, செஸ்னியப் பிரச்சினைக்கு விரைவில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக் காண வேண்டும் என ரஷ்யாவை நிர்ப்பந்திக்கின்றனர். பேச்சுவார்த்தை என்பது செஸ்னியாவின், சுதந்திரம் பற்றியதாக மட்டும்தான் இன்றைய நிலையில் இருக்க முடியும். புற்றின் இக் கூற்றுக்கள் முற்றிலும் கற்பனையானவை, ரஷ்ய மக்களை ஓர் அணியில் திரட்டுவதற்காக கடைப்பிடிக்கும் உபாயம் என்றெல்லாம் அவற்றை ஒதுக்கிவிட முடியாது. சோவியத் ஒன்றியம் உடைந்த போது ரஷ்யர்கள், பெருமளவு நிலப்பரப்பை ஏற்கனவே இழந்து விட்டார்கள். ஆகவே, செஸ்னியா, தனியாகப் பிரிந்து செல்வதென்பது ரஷ்யாவிற்கு பாரியளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தாது என்ற எண்ணக் கரு மேற்குலக ராஜதந்திரிகள் வட்டாரத்தில் பரவலாக உண்டு. அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் கூட ரஷ்யாவின், செஸ்னியக் கொள்கையையும், அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்களையும் கண்டித்திருந்தது. அதனால் தான், அண்மையில் மேற்குலக பத்திரினையாளர்களுடனான சந்திப்பின் போது, "ரஷ்யா, செஸ்னியத் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஏன் ஆரம்பிக்கக் கூடாது?" எனக் கேட்டதற்கு, "நீங்கள், வெள்ளை மாளிகைக்கோ அல்லது புருசெல்ஸ்சுக்கோ ஒசாமா பின்லாடனை அழைத்து, ஏன் போச்சுவார்த்தைகளை நடாத்த முடியாது? அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்டு அதைக் கொடுத்துவிட்டால், நீங்களும் நிம்மதியாக இருக்கலாமே? நீங்கள் ஏன் அதைச் செய்யக் கூடாது?" எனக் குத்தலாகவே



திருப்பிக் கேட்டார். அவரது கேள்வி சற்று விதண்டாவாதமாகத் தோன்றினாலும், மேற்குலகத்தின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவதாகவே இருந்தது. அதுமட்டுமல்லாமல், செஸ்னியக் கிளர்ச்சிவாதத் தலைவர் அஸ்லான் மஸ்காடொவ்வின் தூதுவர் அண்மட் சுக்கேயெவ்விற்கு பிரித்தானிய அரசு அரசியல் தஞ்சம் கொடுத்துள்ளது. மாஸ்காடொவ்வின் வெளிவிவகார அமைச்சர் இலியாஸ் அஹ்மடொவ்விற்கு அமெரிக்கா தஞ்சம் கொடுத்துள்ளது. ரஷ்யாவின் உண்மையான நண்பர்கள் இவ்வாறு செய்யமாட்டார்கள் என்பது தான் புற்றின் வாதமாக இருந்தது.

1990ம் ஆண்டு பேர்லின் சுவர் தகர்க்கப்படும் வரை சோவியத் ஒன்றியத்தின் மேற்கெல்லை ஜேர்மனி வரை நீடித்திருந்தது. ஆனால் இன்று சோவியத் ஒன்றியத்திற்கு பாதுகாப்புக் கவசமாக விளங்கிய மத்திய தென் ஐரோப்பிய நாடுகள் நாட்டோ (Nato) அணியில் இணைந்துள்ளன. நாட்டோவின் எல்லைகள் கிழக்கு நோக்கி விரைவாக நகர்ந்து விட்டது. அதுமட்டுமல்ல, சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து சென்ற தெற்குத் குடியரசுகளான, ஜோர்ஜியா, ஆர்மேனியா போன்றவற்றில் அமெரிக்கரின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது. ரஷ்யா தனது 'பின் வளவு' எனக் கருதும் எண்ணெய் வளமிக்க கங்கஸ் பிரதேசத்தில், அமெரிக்கர்களினதும், மேற்குலக நாடுகளினதும், அதிகரித்துவரும், பிரசன்னத்தை சகித்துக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆகவே, இஸ்லாமியத் தீவிரவாதிகளால், மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை அடுத்து. ரஷ்ய அதிபர் புற்றின், மறைமுகமாக மேற்குலகத்தைச் சாடியிருப்பதற்கான விளக்கங்களை இந்த யதார்த்த நிலைமைகளில் தான் தேடவேண்டும்.

கொர்பாச்செவ், யெல்ப்சின் போன்ற தலைவர்களுக்கு பதிலாக, புற்றின் அன்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை கைப்பற்றியிருந்தால் சோவியத் ஒன்றியம் உடைந்தே இருக்காது எனப் பலரும் பரவலாக நம்புகின்றனர். ஏனெனில், முன்னாள் ரஷ்ய உளவுத் துறையின் (K.G.B) தலைவரான புற்றின், அன்றைய சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களாக இருந்த பிரெஷ்னெவ், கொசிறின் போன்றே, அதிகாரங்கள் மையப்படுத்தப்பட வேண்டும் என்றே கருதுபவர். நாட்டின் பாதுகாப்பு, ஸ்திரத் தன்மை, போன்றவற்றை முன்நிலைப்படுத்தப்படும் பொழுது மக்களின் சுதந்திரச் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுவதில் தவறில்லை எனக் கருதுபவர். மேற்குலகின் ஜனநாயக விழுமியங்கள் எல்லாமே, எல்லா நேரத்திலும் ரஷ்யர்களுக்கு பொருந்தாது என எண்ணுபவர். இவருடைய இந்த கடுமையான நிலைப்பாட்டிற்கு ரஷ்யர்கள் மத்தியில் பெரும் ஆதரவு உண்டு. இரண்டாவது தடவையாகவும் புற்றின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒரு சராசரி ரஷ்யரின் மாதவருமானம் 215 டொலர்களாக இருந்தும், புற்றின், மக்கள் ஆதரவு எப்பொழுதும் 70 வீதத்திற்குக் கீழ் குறைந்ததில்லை. பொரீஸ் யெஸ்ட்சினின் ஆட்சியில் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் மிகவும் பலவீனப்பட்டுப் போயிருந்தது. அவற்றை எல்லாம், மறுசீரமைத்து ரஷ்யாவை ஓர் ஸ்திரநிலைமைக்குக் கொண்டு வந்ததில், புற்றினின் பங்கு அளப்பரியது. ஆகவேதான், அவரது கடும் போக்கிற்கு மக்கள் மத்தியில் எப்பொழுதுமே பெரிய அளவில் எதிர்ப்புகள் எழுந்ததில்லை. இதனால் தான், ரஷ்யாவின் மிகப் பெரிய செல்வந்தரான 'மிகையில் கொடார்க்கொவ்கி' ( Mikhail Kodotkovsky) வருமானவரி ஒழுங்காகக் கட்டவில்லை என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டபோது மக்களிடம் இருந்தோ, ஊடகங்களில் இருந்தோ எதிர்ப்புக்கள் எழவில்லை.

இந்த நிலையில் தான் தீவிரவாதிகள் மேற்கொள்ளப்பட்ட பாடசாலை மீதான தாக்குதல், புற்றினுக்கு அதிகாரத்தை மையப்படுத்துவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தைக் கொடுத்துள்ளது. இச்சம்பவத்தை அடுத்து, புற்றின் தனது அமைச்சர்கள் மாநில ஆளுனர்கள், குடியரசுகளின் தலைவர்களை அழைத்து இது தொடர்பாகத் தான் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி விளக்கியுள்ளார். " பெஸ்லான் பாடசாலையில் நடந்தவற்றைப் பற்றி எண்ணுகையில் எம் கண்ணில் நீர் பெருகுவதைத் தடுக்க முடியவில்லை. ஆனால், இன்று தேவையாக உள்ளது கண்ணீரும், ஆறுதல் வார்த்தைகளும் அல்ல. இதுவரையில் பயங்கரவாதத்தை வெற்றிகொள்வதில் நாம் ஒன்றும் பெரிதாகச் சாதித்து விடவில்லை. பயங்கரவாதத்தின் ஊற்றை நாம் அழிக்கத் தவறிவிட்டோம். அரசாங்கத்தை நிலைகுலையைச் செய்து, நாட்டின் ஒருமைப்பாட்டைச் சிதறடித்து ரஷ்யாவை அழிப்பது தான், இப் பயங்கரவாதிகளினதும், அவர்களுக்குப் பின்பலமாக நிற்பவர்களினதும் திட்டம் ஆகும். இந்த கசப்பான யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்" என அதிபர் புற்றின் கூறியபோது அனைவரும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். பயங்கரவாதத்தை முறியடிக்க, புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தினால் மட்டும் போதாது. நாட்டின் அரசியல் அமைப்பிலும் பாரிய மாற்றம் செய்யப்பட வேண்டும் என புற்றின் அவர்களுக்கு விளக்கிக் கூறினார். இறுதியில் "ஆளுனர்கள் போன்ற உயர் அதிகாரிகளின் நியமனங்கள், பிராந்தியங்களால், அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றாலும் அவர்களின் நியமனங்கள் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும் சட்டவாக்கங்களை பாராளுமன்றம், இவ்வருட இறுதிக்குள் நிறைவேற்ற வேண்டும்" என தனது திட்டத்தை முன்வைத்தார். இத் திட்டம் நடைமுறைக்கு வந்தால், அது மாநில, பிராந்திய அரசியலில், மொஸ்கோவின் ஆதிக்கத்தை அதிகரிக்கும். ரஷ்யாவில் மீண்டும் ஓர் சர்வாதிகார ஆட்சியை நிறுவுவதற்கான, நடவடிக்கையாகவே இதைக் கருதுபவர்களும் உண்டு. புத்தி ஜீவிகள் மட்டத்தில் இத் திட்டத்திற்கு எதிர்ப்புகள் தோன்றினாலும், பரந்துபட்ட மக்கள் மத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை. புற்றினின் இப் புதிய திட்டத்தின் மூலம், பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தி, கங்கஸ் பிராந்தியத்தை மீண்டும் ரஷ்ய ஆணைக்குள் கொண்டுவருவதில் வெற்றியும் ஈட்டிவிட்டார் என்றால், வரலாற்றில் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற ஒரே ஒரு சர்வாதிகாரி புற்றின் ஆகவே இருப்பார்.

3ம் பக்கத் தொடர்ச்சி(கிழக்கில்)

ஆகவே படைத்தரப்பு மிகவும் திட்டமிட்டே சில நடவடிக்கைகளை எடுத்துவருவது புலனாகிறது. கிழக்கில் புலிகளைப் பலவீனப்படுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வரை சந்திப்புகள் நடைபெறுவதைப் படைத்தரப்பு விரும்பவில்லை. புலிகளுடன் சந்திப்பு நடந்து அதில் இணக்கப்பாடு உருவாக்கப்பட்டால் புலிகள் மீதான தாக்குதலை நிறுத்தவோ கட்டுப்படுத்தவோ வேண்டிய பொறுப்பு படையினருக்குரியது. புல்லுமலையில் ஒரு தாக்குதலை நடத்த திட்டமிட்ட படைத்தரப்பு அதை நிறைவேற்றுவதற்காகவே புலிகளுடனான சந்திப்பை இடைநிறுத்த எத்தனித்திருப்பதாக கருதப்படுகிறது. இதுதவிர புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களிடையே புல்லுமலைத் தாக்குதலில் தான் அதிகளவானோர் பங்கேற்றதிலிருந்து பெருமெடுப்பிலான திட்டமொன்றின் அடிப்படையில் படைத்தரப்பு இயங்கிவந்திருப்பது தெரிகிறது. கேணல் ரமேஷ் உள்ளிட்ட முக்கிய தளபதிகள் கிழக்கில் இல்லாத சமயத்தில் படையினருடனான சந்திப்பு நடைபெறாது என்பதை படைத்தரப்பு நன்கு அறிந்திருந்தது. சந்திப்பை நிறுத்துவதற்காக மட்டுமே கேணல் ரமேஷ் உள்ளிட்ட குழுவினர் மட்டக்களப்புக்கு திரும்புவதற்கான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு படைத்தரப்பு மறுக்கவில்லை. முக்கிய தளபதிகள் இல்லாத தருணத்தில் புல்லுமலையில் பெரும் தாக்குதலை நடத்தி புலிகளுக்கு சேதங்களை ஏற்படுத்தி பெரும் குழப்பத்தை உருவாக்கும் திட்டத்துடனேயே இவர்கள் திரும்புவதற்கு வசதி செய்து கொடுக்க அரசு மறுத்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. மொத்தத்தில், கிழக்கில் புலிகள் மீதான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தவும், குழப்பங்களை உருவாக்கவும் படைத்தரப்பு முன்னின்று செயற்பட்டு வருகிறது. இந்த நிலைமை மோசமானதொரு கட்டத்துக்குள் செல்வதற்கான முதற்படியாகவே தோன்றுகிறது. கிழக்கில் பலவீனப்படுத்திக் கொண்டு புலிகளைப் போருக்குள் இழுத்துவரும் முயற்சிகளில் படைத்தரப்பு ஈடுபட்டிருப்பது சமாதான முயற்சிகளால் பின்தள்ளுவதுடன் மட்டுமன்றி யுத்த நிறுத்த உடன்பாட்டைக் கூட கேள்விக்குள்ளாக்கி விடுகிறது. இப்படியே நிலைமை தொடர்ந்தால் புலிகள் தமது பொறுமையை இழக்கும் நிலை ஏற்படும் போலத் தெரிகிறது. படையினரின் நடவடிக்கைகள் இன்னொரு யுத்தத்தில்தான் கொண்டு சென்று விடும் என்பதை அரசு தெரிந்திருந்தும் அதை அனுமதிப்பது சமாதான முயற்சிகளில் அரசு நம்பிக்கையற்றிருப்பதை உணர்த்தி நிற்கிறது.


# A1 Digital Video & Photography

The Professional People



Call: Ruthran
Res: 416-287-9844
Cell: 416-587-5583
Web: www.ruthran.com

*Call for Specials*

# K. Ruthralingam

Sales Representative

Need Any Help Call Me First

416-587-5583
416-497-9784
417-497-5949 ( Fax )
rudy@ruthran.com



COLDWELL BANKER
ECEPTIONAL R E SERVICES
3107 Sheppard Ave E, Toronto, Ontario, M1T 3J7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களாய் ஒன்றிணைவோம்



## பொங்குதமிழ் வெற்றிபெற வாழ்த்துகிறோம்




**Port Union/Kingston**
Detached 2-Storey
3+1 Bedrooms
3 Washrooms




**Steels/Markham**
Detached 2-Storey
3 Bedrooms
3 Washrooms - Brand New House

**For Rent**
**Neilson/McLevin**
**2 Bedroom condo**

HOMELIFE
HIGHER STANDARDS

**HOMELIFE/GTA Realty Inc.**
1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

## சசி செல்வரட்ணம்

Sales Representative

**Direct 416.725.1125**
**Office 416.321.6969**



digi Media Creations -416.467.4952

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

02~09~04 வெளிவந்த ஓவியர் டிராட்ஸ்கி மருதுவின் நேர்காணலின் தொடர்ச்சி

# ஓவியர் டிராட்ஸ்கி மருது

## சந்திப்பு

## பொ ஐங்கரநேசன்

**உங்களுடைய ஓவியங்கள் பெரும்பாலும் கோட்டு ஓவியங்களாகவே இருக்கின்றன. அப்படிக் கோடுகளைப் பிரதானப்படுத்துவதற்கு ஏதேனும் காரணங்கள் உண்டா?**

சின்ன வயதில் மதுரை ரீகல் டாக்கீஸில் நான் பார்த்த அனிமேஷன் படங்கள் தான் வலிதான சரியான கோடுகளால் வரையப்பட்ட படிமங்களின் வழியாக தொடர்பு கொள்வது சக்தி வாய்ந்தது என்ற நம்பிக்கையை என்னுள் ஏற்படுத்தியது. தொடர்ந்து கோட்டு ஓவியங்களை வரைந்த பயிற்சி, தேர்ந்த கோட்டு ஓவியங்களின் ஓவியங்களைப் பார்க்கும்போது ஏற்படும் மோகம், அனிமேஷன் கலைக்கான அவசியம் என்று இப்படிப் பல காரணங்கள் இருக்கலாம்: சந்தானராஜ், சிற்பி தனபால், ஆதிமூலம், தட்சிணாமூர்த்தி, ஆர். பி. பாஸ்கரன் , வீரசந்தானம் போன்ற சம காலத்து ஓவியர்களுடைய ஓவியங்களில் கூட கோட்டைப் பிரதானப்படுத்திய போக்கே தென்படும். இந்தப் போக்குக்கும் சென்னை □ கும்பகோணம் ஓவியக் கல்லூரிகளின் சூழலுக்கும் பெரும் தொடர்பு இருக்கிறது.

**சிறுபத்திரிகைகளில் ஆரம்பித்து இப்போது வெகுஜனப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வரைந்து கொண்டிருக்கிறீர்கள். இது உங்களுடைய தனி ஓவிய வெளிப்பாட்டுக்கு இடையூறாக இருக்காதா?**

ஒரு எழுத்தாளனுக்கும் கவிஞனுக்கும் இருக்கின்ற சுதந்திரம் ஒரு ஓவியனுக்கும் கண்டிப்பாக இருக்கிறது. ஒரு ஓவியனாக எனக்கு இருக்கும் அந்த சுதந்திரத்தை நான் விட்டுக் கொடுப்பதில்லை. இதனாலேயே கதையில், கவிதையில் வரும் ஒரு சம்பவத்தையோ, எழுத்தையோ மட்டும் வைத்துக்கொண்டு அதற்குள்ளேயே விம்பங்களைத் தேடுகிற இடத்தில் நான் எப்பவுமே சிக்கிக் கொண்டதில்லை. ஏற்கனவே இருந்த ஓவியர்கள் கதையோ கவிதையோ அதில் வருகின்ற ஒரு சம்பவத்தை மட்டுமே வரைவார்கள். நான், கதையைப் படித்துப் போட்டுவிட்டு கதையை மறந்துவிட்டு என்னைப் பாதித்ததை மட்டுமே வரைகின்றேன். இதில் வெளியைக் கையாளுவதில், வண்ணங்களில், கோடுகளில் பரிசோதனை முயற்சி செய்வதற்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. அப்படிக் கிடைக்கவில்லையென்றாலும் ஒரு இடைவெளி கிடைத்தால் கூட நானாக எடுத்துக் கொள்கிறேன். இதனால் சில நேரங்களில் கதையில் இல்லாத காட்சிகளைக் கூட வரைந்திருக்கிறேன். ஆனால் வாசகன் அந்தக் காட்சியை விட்டு விலக முடியாது. அவன் கதையையும் படத்தையும் நடுவில் நின்று இணைத்துக் கொள்வான்.

**பத்திரிகையில் இருந்து ஒரு குறிப்பிட்ட படைப்பை அனுப்பி அதற்குப் படம் வரைந்து தாருங்கள் என்று கேட்கும் போதே ஓவியனாக இருந்து கொண்டு நீங்கள் எதிர்பார்க்கும் அந்த சுதந்திரத்துக்கு ஒரு வரையறை ஏற்பட்டுவிடுகிறதே?**

பத்திரிகைகள் அநேகமாகத் தேர்ந்தெடுத்த கதைகளைத்தான் அனுப்புகின்றன. அந்த வகையில் எனது சுதந்திரத்துக்கு சவால் விடக் கூடிய கதைகள் என்று எனக்கு அதிகம் வருவதில்லை. எனக்கு ஒப்புதல் இல்லாத கதைகளாக இருந்தால், 'வாசகர்களை நீங்களும் நானும் சேர்ந்து ஏமாத்த வேண்டாம். இந்த மாதிரிக் கதைகளை அனுப்பாதீர்கள்' - என்று திருப்பிக் கொடுத்து விடுகின்றேன். சில சமயங்களில் என்னைத் தொடாத கதைகளுக்கும் தவிர்க்க முடியாத நிலையில் வரைந்து கொடுக்க வேண்டி நேரிடுகிறது. அப்படியான சந்தர்ப்பங்களில் கதையைத் தூக்கிப் போட்டுவிட்டு சுதந்திரமான நிலைமைய எடுத்திருக்கிறேன்.

**பத்திரிகைகளில் படம் வரைவது ஒரு பக்கவாத்தியம் மாதிரித்தான் என்ற கருத்துடன் எந்த அளவுக்கு ஒத்துப் போகிறீர்கள்?**

முன்பு வரைந்த ஓவியர்களுடைய படங்களை கதையிலிருந்து பிரித்தால் அவை செத்துவிடும். வேணுமென்றால் நீங்கள் சொல்லுவது அவைகளுக்குப் பொருத்தமாய் இருக்கலாம். ஆனால் இப்பொழுது வரையப்படுகின்ற பத்திரிகை ஓவியங்கள் பற்றி அப்படி நான் நினைக்கவில்லை. என்னுடைய, என்னைப் போன்ற சம காலத்து ஓவியர்களுடைய படங்களை கதையிலிருந்து பிரித்தாலும் தனிய நிற்கும். இன்றைக்கு வாத்தியக் கருவிகளே மேலோங்கித் தனி இசையாக ஒலிக்கின்ற இடமெல்லாம் இருக்குது பாருங்க. அதுமாதிரித்தான் சம காலத்துப் பத்திரிகை ஓவியங்களும் சுயத்தை இழக்காதவை. தனித்துவமானவை. மூலக் கட்டுரையிலிருந்தோ, கதையிலிருந்தோ விலகித் தனித்து நின்று பொருள் விளக்கம் தரக்கூடியவை.

**ஹுசைன் வரைந்துள்ள இந்துக் கடவுள்களின் நிர்வாண ஓவியங்கள் தொடர்பாக எழுந்த சர்ச்சைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள். இந்த விடயத்தில் அவர் தனது சுதந்திரத்தை எல்லை மீறி எடுத்துக் கொண்டு விட்டார் என்று கருதலாமா?**

எல்லோரையும் போல ஓவியர் ஹுசைனும் ஓவிய மரபு, ஓவியர்களுக்கான சுதந்திரம் என்பது பற்றியெல்லாம் தெரிந்தவர்தான். போலி மதவாத அரசியல் அவர் மேல் சுமத்தியிருக்கின்ற குற்றச்சாட்டு இது. இந்துக் கடவுள்களின் உருவங்களை



வரைந்த அவர் ஒரு முஸ்லீமாக இருப்பது இந்த மதவாதிகளின் செயல்பாட்டுக்கு வசதியாக ஆகிவிட்டது. எப்போதோ அவர் வரைந்த பழைய ஓவியங்களைத் தூசி தட்டி இப்போது கையில் எடுத்திருக்கிறார்கள். காலங்களின் மதிப்பீடுகளை மீறி உலகம் முழுவதும் பல்வேறு கால கட்டங்களில் முழுவீச்சுடன் படைப்புக்கள் பல்வேறு சாதனங்களிலும் வெளிப்படுத்தப பட்டிருக்கின்றன. ஐரோப்பிய ஓவியர் பிரான்ஸிஸ் பேகன் தனது ஓவியங்களில் போப் ஆண்டவரின் உருவத்தைக் கையாண்ட விதம், கடந்த நூறு ஆண்டுகளுக்குள் ஐரோப்பிய ஓவியர்கள், நாடகக் கலைஞர்கள், திரைப்பட இயக்குநர்கள் மதத்தைக் கடுமையாக விமர்சனம் செய்து படைத்த படிமங்கள் போன்றவற்றை அறிந்திருந்தால் ஹுசைன் உடைய இந்த ஓவியங்கள் ஒன்றும் பெரிய விஷயமாகத் தெரியாது.

**தனியான ஓவியக் கண்காட்சிகளில் இப்பொழுதெல்லாம் நீங்கள் ஈடுபாடு காட்டாதது ஏன்?**

ஓவியக் கல்லூரி நாட்களில் இருந்து தேசிய, மாநிலக் கண்காட்சிகள் என்று 90 வரை பல கண்காட்சிகளில் கலந்திருக்கிறேன். சமீப காலமாக அனிமேஷன் துறையில் நான் அதிகம் ஈடுபாடு கொண்டிருப்பதால் தனிக்காட்சி அமைக்கவில்லை. இருந்தாலும், பத்திரிகைகளில் நான் வரைவதன் மூலம் ஒரு வகையில் தனிக்காட்சிதானே செய்கின்றேன்.

**அனிமேஷன் திரைப்படங்கள் குழந்தைகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஆனால் இறக்குமதியாகின்ற காமிக்ஸ் புத்தகங்களும் அனிமேஷன் திரைப்படங்களும் குழந்தைகள் மனதில் வன்முறையை விதைக்க காரணமாய் இருக்கின்றன என்ற கருத்து பரவலாக இருக்கிறது. தமிழில் அனிமேஷன் பட முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் உங்களுடைய கணிப்பீடு இதில் எப்படி இருக்கிறது?**

எழுத்து, அசையாத ஓவியம், பின்பு பேசி அசையும் சினிமா என்ற ஊடகங்களுக்கு இடையில் பல படங்களையும் பலபக்கங்களில் வடிவமைத்துத் தொடர்பு கொள்ள உதவும் மிகச் சிறந்த ஒரு ஊடகம்தான் இந்த காமிக்ஸ். ஆயிரக்கணக்கான காமிக்ஸ் புத்தகங்களை அதன் நேர்த்தியான ஓவியத்துக்கும், கதைசொல்லும் முறைக்கும், பரீட்சார்த்த முறைகளுக்குமாக வாங்கி சேகரித்து வைத்திருக்கிறேன். ஓய்வு நேரங்களில் அவற்றைத்தான் பார்த்துக் கொண்டிருப்பேன். அசையாத ஒரு பொருளை அல்லது வரைந்த கார்ட்டடூன்களை அசையச் செய்யும் முயற்சிதான் அனிமேஷன் படங்கள். காமிக்ஸ் அனிமேஷன் இரண்டிலும் நீங்கள் சொல்லும் வன்முறையைத் தூண்டக் கூடிய படிமங்கள் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் படைப்புகளில் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் இவை அனிமேஷன் படங்களில் சடுதியாக வந்தவையல்ல. சரித்திர பூர்வமாக ஆராய்ந்தால் இதன் ஆரம்பம் ஆதிமனிதனின் குகை ஓவியங்களிலிருந்து தொடங்குவது புரியும். ஆனால் வாழ்வில் உண்மையில் நடக்கும் செயல்கள் தான் குழந்தைகளைப் பாதிக்குமே தவிர படிமங்கள் ஏதும் செய்யாது என்று பல வல்லுனர்கள் தெரிவித்திரக்கிறார்கள். History of Comics, History of animation ஆகியவற்றை ஊன்றி அறிந்தால் இந்த உண்மை புலப்படும்.

**தமிழ் நாட்டில் நவீன ஓவியங்களுக்கான வரவேற்பு எந்த அளவுக்கு இருக்கிறது?**

மூத்த ஓவியர் ஆதிமூலம் அவர்கள் சொல்வது போல 'வண்ணங்களைத் தெளித்தாற்போல உள்ள ஓவியத்தைப் பாராட்டமுடியாதவர்கள் கூட, துணியில் அவை அச்சாகி வரும் போது நல்ல Design என்று வாங்கி சட்டையாகப் போட்டுக் கொள்கிறார்கள்' என்பதுதான் உண்மை. சிறுபத்திரிகைகள் ஓவியக் கண்காட்சி என்ற இடத்தைத் தாண்டாமல் இருந்த நிலைமாறி நவீன ஓவியம் வெகுஜனப்பத்திரிகைகளுக்குள் நுழைந்து விட்டாலும்கூட மக்களிடையே ஓவியரசனையை ஏற்படுத்த மேலும் ஊக்கப்படுத்த வேண்டும். ஓவியம் கற்க ஆர்வம் காண்பிப்பவரை ஊக்கப் படுத்த வேண்டும். ஏனெனில் இள வயதில் ஓவியம் வரைபவர் பிற்காலத்தில் தன்னை வெளிப்படுத்த வேறுசாதனம் எளிதாக இருப்பதாகக் கருதிச் சென்றுவிட்டாலும் கூட அங்குதான் நினைப்பதைத் தெளிவாகச் சொல்ல, எழுத, செயல்படுத்த ஆரம்பத்தில் ஓவியத்தில் கிடைக்கும் பயிற்சியான வெளியை ஆட்கொள்ளும் முறை, அதைக் கையாளும் முறை எல்லாம் பெரிதும் உதவும்.

**ஓவியம் என்பது கூட ஒரு தொடர்புச் சாதனம்தான். அதில் ;மற்றவர்களுக்குப் புரிதல்; என்று ஒன்று இருக்கிறது. ஆனால் நவீன ஓவியங்கள் அதனைச் செய்யத் தவறிவிடுகின்றன என்றும் ஒரு விமர்சனம் முன்வைக்கப்படுகிறதே?**

நான் திரும்பத் திரும்பத் சொல்லுவது போல, நவீன ஓவியத்தைப் பற்றி முழுமையாக அறிய முற்படு முன்னர் ஏற்படும் விமர்சனம் தான் இது. ஒரு மொழியைப் புரிய அவற்றின் எழுத்தை அறிய ஆரம்பித்து இலக்கணம் என்று சென்று அம்மொழியின் உள்ளார்ந்த வெளிப்பாடுகள் - கலாச்சாரம் என்பவற்றை அறிவது போல, நவீன ஓவியம் - சிற்பம் ஆகியவை பற்றி அறிய - குகை மனிதனில் இருந்து இன்று வரை இருபது நூற்றாண்டு உலகக் கலைகளைப் படிக்க, பார்க்க கிடைக்கிற தேர்ச்சியிலேயே உங்களுக்கு ஒவ்வொரு கதவாகத் திறப்பது புரியும். ஒரு மொழியைப் புரிந்துகொள்ள அட்சரம் படிக்கிறது எவ்வளவு அவசரமோ அதேமாதிரி ஓவியத்தைப்பற்றி அறிய வேணும் என்றால் கோடுகளைப்பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். வார்த்தைகளைப் படிக்கிறது மாதிரி கோடுகளைப் படிக்கிற அனுபவமும் உங்களுக்கு வரத் தொடங்கிவிட்டால் நான் எவ்வளவு தூரம் Socially Committed ஆக இருக்கிறேன் என்று உங்களால் புரிந்துகொள்ள முடியும். வெளியை நான் எப்படி ஆளுகிறேன் என்பதில் இருந்து என்னுடைய நேர்மையை, நான் உண்மையா போலியா என்பதையெல்லாம் கூட கண்டுபிடிக்க முடியும்.

**தமிழில் ஓவிய விமர்சனப் போக்கு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது?**

தமிழ்நாட்டில் ஓவிய விமர்சனம் பெரும் வளர்ச்சி பெற்றுவிட்டது என்று சொல்ல முடியாது. வெகு சிலரே எழுதுகின்றனர். ஆனால் ஆழமில்லாமல் உள்ளதாயே எனக்குப்படுகிறது. ஈழத்து ஓவியரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளரும், விமர்சகருமான சனாதனன் விமர்சனக் கலைக்கு பெரிய வரவு. அவர் தொடர்ந்து கவனிக்கப்பட வேண்டியவர். தமிழில் அவர் ஒருவர்தான் ஓவியத்தையும் அவை சார்ந்தவற்றையும் விசாலமாகவும் ஆழமாகவும் பார்க்கிறார்.

**இது கணனியுகம். இந்த அறிவியல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப ஓவியக்கலை வளர்ச்சி பெற்றுள்ளதா?**

தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஓவியத் துறை உதவுவது போல ஓவியத்துறையின் வளர்ச்சிக்கு தொழில் நுட்பவளர்ச்சி உதவியிருக்கிறது. மரபு ரீதியான சிற்ப — ஓவிய வெளிப்பாட்டுக்கும் கணனிகளை உபயோகிக்க முடியும் என்பதை ஓவியர்கள் புரிந்தனுபவிக்க முற்பட்டுள்ளது இப்போது அதிகம் என்று சொல்லலாம். குறிப்பாக கணனிகள் ஓவியனின் செயல் முயற்சியில் கடின உழைப்பின் ஒரு பகுதியைக் குறைத்துக் கொடுப்பதுடன் சிந்தித்து செயற்பட பெரும் வெளியை அமைத்துக் கொடுக்கிறது.

**திரைப்படங்கள், நாடகங்கள் என்று கூட பணியாற்றி வருகிறீர்கள். அந்த அனுபவங்களைப் பற்றியும் சொல்லுங்களேன்?**

மறைந்த புகழ்மிக்க தமிழ் எழுத்தாளர் கு. அழகிரிசாமி அவர்களின் இளைய புதல்வரும் என் நண்பருமான சாரங்கன் தயாரித்த மொத்த விளம்பரப் படங்களுக்கும் கலை இயக்குனராக பணியாற்றியிருக்கிறேன். அவற்றுள் பல இன்னமும் திரையரங்குகளிலும் தொலைக்காட்சியிலும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. குறைந்த திரைப்படங்களில் கலை இயக்குநராக இருந்ததுடன் சில படங்களுக்கு கம்பியூட்டர் கிராபிக்ஸ்உம் செய்திருக்கிறேன். திரைப்படங்களில் பல்வேறு கலைஞர்களுடன் இணைந்து செயற்பட்டதில் நடிகர் நாசர், ஒளிபட்பதிவாளர் ஸ்ரீதர் போன்றவர்களுடன் 'தேவதை' திரைப்படத்துக்கு பணியாற்றியது குறிப்பிடத்தக்க அனுபவம். நாங்கள் திட்டமிட்டதுகளையெல்லாம் படத்தில் கொண்டு வருவதற்கு பட்ஜெட் இடம் தரவில்லையென்றாலும் 'தேவதை' எனக்குத் திருப்தியளித்த படம். நாடகங்களைப் பொறுத்தவரையில் இளைய பத்மநாதன், மங்கை அரசு, கவிஞர் இன்குலாப் போன்றவர்களுடைய நாடகங்களுக்கு கலை இயக்குநராக இருந்து உடை, ஒப்பனை ஆகியவற்றை வடிவமைத்துக் கொடுத்திருக்கிறேன். இந்த வரிசையில் தீனிப்போர், மௌனக் குளம், ஔவை போன்ற நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றிலெல்லாம் நாட்டுப் புறக் கலை வடிவத்திலிருந்தே கூறுகளைப் பயன்படுத்தியிருக்கிறேன்.

**இன்குலாப், மங்கை போன்ற கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றீர்கள். அதனைத் தவிர்த்து, அவர்கள் முன் நிறுத்தும் மார்க்சியம், தமிழ்த் தேசியம், பெண்ணுரிமை போன்றவற்றை முன் நிறுத்தி நீங்கள் தனிப் படைப்புகளில் ஈடுபடுகிறீர்களா?**

கடந்த பதினைந்து - இருபது ஆண்டுகளாக communication illustration ஆக இப்படியான சம நோக்கில் ஒரு ஓவியனின் முழுச் சுதந்திரத்துடனும் வீச்சுடனும் நான்

( 22 பக்கம் பார்க்கவும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HERSHEY CENTRE, MISSISSAUGA இல்

MILLENNIUM SAREE PALACE
416-750-9613
Sarees, Salwar Kameez & Chudidhar

THE MORTGAGE ALLIANCE COMPANY OF CANADA
Sugan Sathiaseelan, EET, CST
Senior Mortgage Consultant
Tel: 416-271-7584

உதயாஸ் சுப்பர் மார்க்கட்
Tel: 416-740-7971
Fax: 416-740-8568

4 Friends Restaurant & Pub
2118 Bridle Town Cl. Scarborough. On, M1W 2L1
Tel: 416-756-3373

SEVEN STAR ELECTRONICS INC.
We also have bell, rogers, fido & telus cell phones
3575 Sheppard Ave.
416-321-5288

RUBINI
WEST INDIAN GROCERIES
Tel: (416) 297-5053
31 Tapscott Road, B2
(behind Malvern Town Centre)
Scarborough, Ontario
M1B 4Y7

Keth Kethees
Sales Representative
Cell: (416) 275-5788
HomeLife GTA

Thamotherampillai Yoganathan (Sivam)
Tel: (905) 455-0022
Cell: (416) 889-0065
YOA MONEY TRANSFERRING

Century 21
PERCY FULTON LTD.
Ravi Mohan
416-566-1455

CENTUM METROCAP FINANCIAL SERVICES
— Your Mortgage Specialist —
Tel: 416-388-9448
THIVY RASALINGAM
Mortgage Specialist

MOKA MARKET
East - West Indian Grocery
Fresh Vegetables, Fish & Meat
Indian Movie Rental
Tel: 905-273-4137

## இவர்களின் ஆதரவுடன்

உங்கள் நேசத்திற்குரிய

## தமிழோசை வானொலி

வழங்கும்

VIP $50 $26 $16

மண்டப வாசலில் $26 க் குரிய ரிக்கட்டுகள் மட்டுமே கிடைக்கும்

S.P. பாலாவின் 10 க்கு மேற்பட்ட தென் இந்திய இசைக் குழுவினருடன்

தொடர்புகளுக்கு:
416-750-9613
416-929-9767
905-273-4137
416-740-7971

## EVER GREEN MELODY KING

# Dr. S.P. பாலசுப்ரமணியததின்



S.P. சைலஜா



மாலிக் அர்ஜூன்





பூர்ணிமா



நிகழ்ச்சித் தொகுப்பு
உங்கள் அன்பு அறிவிற்பாளர்
B.H. அப்துல் ஹமீட்

3000 வாகனத் தரிப்பிடங்கள் இலவசம்

# பொன் மாலைப் பொழுது

காலம்:
26-SEP-2004-SUN
நேரம்:
மாலை 5.00 மணி

முக்கிய குறிப்பு

*21-SEP-2004* செவ்வாய்க்கிழமை அதிகாலை 12:30 க்கு 1430AM அலைவரிசையில் *S.P.B* யுடன் தமிழோசையூடாக நேரடியாக தொலைபேசியில் கலந்துரையாடலாம்.




இடம்:
HERSHEY CENTRE
5500 ROSE CHERY PLACE
MISSISSAUGA
(403/EGLINTON)
(MATHESAN/ROSECHERREY PLACE)

## Ticket கிடைக்குமிடங்கள்:

**Scarborough**
இரா CD சந்தை
PHOTO FAST
SP IMPORTERS
SIVA TRADING COMPANY
GREENDLAND GROCERY
YOGA'S GROCERY
MELLINIUM SAREE PALACE
SEVEN STAR ELECTRONICS
AKASH CATERING
CEYLON CATERING
NITHU SUPERMARKET

**Markham**
NEW STAR VIDEO(சங்கானை சந்தை)
PRIYA SUPER MARKET

**Etobicoke**
UTHYA'S SUPER MARKET

**Brampton**
GOLUMBIA VIDEO
SANGU BRAND

**Mississauga**
VIJAYA SILK
MOHA MARKET
JOE MONEY TRANSFER
AKSYAS

**Downtown**
RAMY VIDEO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SABA
AUTO TECH INC.
For Excellent Auto Repair & Body Work

Call: Logan
416.285-7133
90 Hymus Rd,Unit 5
Scarborough, On.
M1L 2C9

# திரைக்கதம்பம்




ADI Computer Repair
Network-Internet-Sharing your Computer
- PC Maintenance -Update BIOS
- Upgrade Windows & Software Install
- Upgrade Your System- Memory
- Trouble Shooting - Hardware Lookup
- New Computer - Customized Assemble

Call Nathan ( Network Specialist )
Phone: 416.850.5814 or 416.915.0161
Email: inathant@yahoo.com or adi_repair@hotmail.com

## காமெடியனாக நடிக்க ஆசை

### -பசுபதி-

தமிழ் சினிமாவின் முதன்மையான வில்லன் நடிகர்களில் ஒருவராக உயர்ந்திருக்கிறார் பசுபதி. 'மாயன்' படத்தில் அறிமுகமானாலும் 'தூள்' படம் இவரைப் புகழ் பெற வைத்தது. அதைத் தொடர்ந்து வந்த 'விருமாண்டி' .இவரைப் பெரிதும் பேச வைத்தது. அதன்பிறகு தமிழில் தயாராகும் பெரிய நடிகர்களின் படங்கள் அனைத்திற்கும் இவரை அணுகும் நிலை. அவரிடம் ஒரு பேட்டி.

**விருமாண்டிக்குப் பிறகு வெளியான படங்களில் ஒரே மாதிரி நடித்திருக்கிறீர்களே?**

என்ன செய்வது? என்னைத் தேடி வருகிறவர்களெல்லாம் இந்த மாதிரித்தான் நடிக்க வேண்டுமெனக் கேட்கிறார்கள். கொஞ்சம் மாற்றி நடித்தால் கூட 'இது மாதிரி இல்லை சார் அந்த மாதிரி' என்று சொல்கிறார்கள். இயக்குநரின் சொல்படி கேட்பது தானே நடிகனின் வேலை.



**மச்சி, அருள், சுள்ளான் ஆகிய மூன்று படங்களிலும் உங்களுடைய உடை அமைப்பும் ஒரே மாதிரி இருந்ததே?**

உண்மைதான். அதே சமயம் 'மச்சி' மிகவும் வித்தியாசமான படம். அதை நான் மிகவும் எதிர்பார்த்தேன். அருள், சுள்ளான் ஆகிய படங்கள் அடுத்தடுத்து உடனுக்குடனே வெளியானதால் இந்த ஒற்றுமை பளிச் செனத் தெரிகிறது. கொஞ்சம் இடைவெளிவிட்டு வந்திருந்தால் இவ்வளவு விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்காது.

**இந்த விமர்சனல்களை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்?**

மீடியாவும் மக்களும் எவ்வளவு விழிப்பாக இருக்கிறார்கள் என்பதையே இவை காட்டுகின்றன. என்னைப் பொறுத்தவரை நான் நடிக்கும் போதே எனக்கு நானே இந்த விமர்சனங்களைச் செய்து கொண்டவன். எனக்கும் தெரிகிற ஒரு விஷயத்தை எல்லோரும் சொல்லுகிறார்கள்.

**இது உங்களைப் பாதிக்கவில்லையா?**

கண்டிப்பாக பாதிக்கிறது. நான் ரொம்ப மன வருத்தத்திற்கு ஆளாகி கமல் சாரிடம் போனேன். என்ன சார் ஒரே மாதிரி கேரக்டர்களாக வருகின்றனவே எனப் புலம்பினேன். எனக்கும் ஆரம்பத்தில் இப்படித்தான் இருந்தது. எல்லாப் படங்களிலும் கையில் 'மைக்' கைக் கொடுத்துவிடுவார்கள். அதிலிருந்து மீள்வது கஷ்டம்தான் என்றார். நாசருக்கும் இந்த நிலைதான். 'நாயகன்' படத்துக்குப் பிறகு போலீஸ் வேடத்திலேயே பதினைந்து படங்கள் வரை நடிக்கக் கேட்டார்களாம். இவற்றையெல்லாம் பார்க்கும் போது போகப் போகத்தான் மீள முடியும் என்று தெரிகிறது.

**இப்போது நடிக்கும் படங்கள்?**

விஜய் நடிக்கும் 'மதுர' முடிந்துவிட்டது. அவருடனே திருப்பாச்சி'யில் நடிக்கப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து கமல் சாரின் அஸோஸியேட் அசோக் இயக்கும் 'ஆயுள் ரேகை' படம். இது மிகவும் வித்தியாசமான, திருப்தியளிக்கிற படமாக இருக்கும்.

**உங்களுக்கு எந்த மாதிரி பாத்திரங்களில் நடிக்க ஆசை?**

காமடியனாக நடிக்க ஆசை. காமடியனாக ஒரு படத்தில் நடித்துவிட்டால் போதும். எல்லாக் கேரக்டர்களுக்கும் பொருத்தமானவன் என்கிற பெயரை பெற்றிட முடியும்.

**இன்னமும் நாடகங்களில் நடித்துக் கொண்டிருக்கிறீர்களா?**

அதுதான் எனக்குப் பலமே. படப்பிடிப்பு இல்லாத நாட்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன். என்னை நானே புதுப்பித்துக் கொள்ள நாடக அரங்குகள்தான் உதவுகிறது. அதனால் இதை விடமாட்டேன்.

**நாடக நடிகர்கள் திரைப்படத்தில் மிகை நடிப்பு செய்வதாகச் சொல்வது பற்றி?**

இதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். நாங்கள் எல்லாம் எங்களுடைய கேரக்டரை முழுமையாக உணர்ந்து நடிக்கிறோம். எங்களுடைய நடிப்பை முழுமையாக வெளிப்படுத்தவே வாய்ப்பு இல்லாத போது மிகையாக நடிப்பதற்கு எங்கே இடம்?





**தெலுங்குப் படங்களில் நடிப்பது பற்றி?**

'தூள்' படத்தின் வெற்றி என்னை தெலுங்குப் பக்கம் இழுத்துச் சென்றது. அங்கு சில படங்களில் நடித்தேன். தொடர்ந்து நடிக்கக் கேட்கிறார்கள். எனக்கு தெலுங்கு தெரியாது. இப்படி மொழி தெரியாமல் நடிப்பதில் எனக்கு உடன்பாடில்லை. அதனால் தவிர்த்து விடுவேன்.

**இன்னும் பிரமச்சாரியாகவே இருக்கிறீர்களே எப்போது திருமணம்?**

இன்னொரு பெரிய வெற்றிப் படத்தில் நடித்த பிறகு. அப்படித்தான் வீட்டில் சொல்ல சமாளித்து வருகிறேன்.

சந்திப்பு
அர்த்தநாரி

லைகசி மருத்துவ நிலையம்
Legacy Medical Centre

Family Physicians Walk-in Clinic
குடும்ப வைத்திய நிலையம்
Dr. R. லம்போதரன்
( MBBS - Srilanka ) ( CCFP - Canada )
Dr. திருமதி. அருனா லம்போதரன்
( MBBS - Srilanka ) ( Diploma in Obstetrics- New Zealand ) ( CCFP - Canada )
9 A.M. - 9 P.M.
7 Days a Week
416-299-8100


5637 Finch Ave. East
Unit #7 ( Finch & Tapscott)
Scarborough, On
( நாக பூஷணி அம்மன் கோவில் அருகில் )

## பழஞ்சோறு.....பழஞ்சோறு.....பழஞ்சோறு



கே. சுப்பிரமணியம்



தியாக பூமி



'கல்கி' கிருஷ்ணமூர்த்தி

பாக்கியராஜின் 'மௌன கீதங்கள்' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த போதே படத்தின் புகைப் படங்களுடன் 'குமுதம்' வார இதழில் தொடர்கதையாகவும் வந்தது அப்போது பலருக்கும் புதுமையாக இருந்தது. இந்தப் புதுமையை தமிழில் முதன் முறையாகச் செய்தவர்கள் இயக்குநர் கே. சுப்பிரமணியமும் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியும் தான். ஆனந்த விகடனில் 'தியாக பூமி' தொடர்கதையாக வரத் தொடங்கியபோதே அந்தக் கதை 'தியாக பூமி' என்ற பெயரில் திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டது. திரைப்படத்தின் 'ஸ்டில் போட்டோக்களே' தொடர்கதையாக பயன்படுத்தப்பட்டு வந்தன. மைலாப்பூரில் பிரபல வக்கீலாக விளங்கிய கே. எஸ். ஜெயராமய்யர் என்பவரின் மகன் கே. ஜே. மகாதேவன் இலண்டனில் படித்து விட்டுத் திருப்பியிருந்தார். அவரைக் கதாநாயகனாக கொண்டு உருவான இந்தப் படம் 1939 இல் வெளியாகி பெரும் வெற்றியைப் பெற்றது. பிரட்டிஷ் ஆட்சியை எதிர்க்கும் காட்சிகள் இடம் பெற்றிருந்தமையால் உடனடியகாவே 'தியாக பூமி' தடைசெய்யப்பட்டது. 1947இல் சுதந்திரம் பெற்ற பின்னரும் தடை நீக்கம் பெறாமல் இருந்து 1952இல் தான் இப்படத்தின் மீதான தடைநீக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Anbu's Construction Co.
We install hardwood floors.
We do all kind of basment & painting jobs.
நம்மவரின் தரமான சேவை

For Services
Call Bala.
416 -994-0729

# திரைக் கதம்பம்





VMS Travels & Tours Inc.

416-293-5800
Call us for our best price
3419 Sheppard Ave. East, Unit 1A
Toronto, Ontario, M1T 3K4
www.vmstravels.com

## காதலே எங்கள் தேசிய கீதம்

அமெரிக்காவில் வாழும் ஸ்ரீராம் ராகவன் கதாநாயகனாகவும், வர்ஷினி கதாநாயகியாகவும் அறிமுகமாக, சிந்து பரத் புரொடக்ஷன் - ப்ரிஸ்டீஜ் கிரியேஷன்ஸ் 'காதலே எங்கள் தேசிய கீதம்' என்ற படத்தைத் தயாரிக்கிறது. இவர்களுடன், ரோகினி, ரமேஷ் அரவிந்த், பாத்திமா பாபு, ஒய். ஜி. மகேந்திரன், மதன்பாப், வையாபுரி, சாப்ளின் பானு, ஏ. கே. சுந்தர் ஆகியோர் நடிக்கும் இந்தப் படத்தின் கதை, திரைக் கதை, வசனத்தை ரமணியன் எழுத, விஜய் ஆனந்த் இயக்குகிறார். படப்பிடிப்பு சென்னை, புதுச்சேரி, கேரளா ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

## கலிங்கா

வர்ணாலயா சினி கிரியேஷன்ஸ் தயாரிக்கும் கலிங்கா படத்தில் பாலா நடிக்கிறார். இவருக்கு சோடியாக 'சக்ஸஸ்' பட நாயகி நந்தனா நடிக்கிறார். மற்றும் ரகுவரன், பொன்னம்பலம், ஜனகராஜ், 'மகாநதி' சங்கர், அனுமோகன், சாருஹாசன் ஆகியோர் நடிக்கும் இப்படத்தை ராம்பிரபா இயக்குகிறார். மகாபலிபுரத்தில் இரண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணை நடிகர் நடிகைகளுடன் ஒரு குட்டி யாழ்ப்பாணத்தையே உருவாக்கி படப் பிடிப்பு நிகழ்ந்து வருகிறது.



## ராஸ்கல்

லக்ஷ்மி மூவிமேக்கேர்ஸ் நிறுவனத்தின் சார்பில் கே. முரளீதரன், வி. சுவாமிநாதன், ஜி. வேணுகோபால் தயாரிக்கும் புதிய படத்துக்கு 'ராஸ்கல்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் 'ஜெயம்' ரவி கதாநாயகனாக நடிக்க இவருக்கு சோடியாக மலையாள நடிகை ரேணுகா மேனன் தமிழுக்கு முதன் முதலில் அறிமுகமாகிறார். இவர்களுடன் 'பெப்சி' விஜயன், வடிவேல், சீதா, அபிநய், 'அழகி' மோனிகா, 'விருமாண்டி' ஷண்முகராஜன், 'நிழல்கள்' ரவி, சந்தானபாரதி, கும்தாஜ் ஆகியோர் நடிக்கும் இப்படத்துக்கு தொலைக்காட்சித் தொடர்களுக்கு திரைக்கதை, வசனம் எழுதிய யோகஸ்வரன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகம் ஆகிறார். அன்றாட அனுபவங்களை விளையாட்டாக எதிர் கொள்ளும் ஒரு கல்லூரி மாணவனின் வாழ்க்கை காதலின் காரணமாக எவ்வளவு சவாலாக மாறிப் போகிறது என்பதை மையமாக வைத்து 'ராஸ்கல்' இன் கதை நகருகிறதாம்.

## கலையாத கனவுகள்

புது முகம் விஸ்வாஜி கதாநாயகனாகவும் மேடைப் பாடகி பூர்வஜா கதாநாயகியாகவும் நடிக்க கே. கே. சூரஜ் இயக்கத்தில், ஸ்ரீ சரவணா பிலிம் ஆர்ட்ஸ் பட நிறுவனம் 'கலையாத கனவுகள்' படத்தைத் தயாரித்து வருகிறது. ரஜினிகாந்த் கதாநாயகனாக நடித்த 'ராஜா சின்ன ரோஜா' படத்தில் இடம் பெற்ற 'சூப்பர் ஸ்டாருயாருன்னு கேட்டா சின்னக் குழந்தையும் சொல்லும்' என்ற பாடலை சற்று வேகமாக இருக்கும் வண்ணம் ஒலிப்பதிவு செய்து இந்தப் படத்தில் சேர்ததிருக்கிறார்கள்.




Ceylon Inn
சிங்கப்பூரில் உங்கள் இல்லம்
சகல அறைகளிலும் தொலைக்காட்சி, தொலைபேசி, சிறிய குளிர்சாதனப் பெட்டி, இணைந்த குளியல் அறை வசதி.
கடைகளுக்கும் போக்குவரத்துக்கும் சுலபமாகச் செல்லும் வழி
Very Good Service & Very affordable Rates
முன்கூட்டியே பதிவு செய்ய: Phone: 65.63 96 55 00 ( Nirmal ) Email: nirmathu2001@yahoo.com.sg


RBC
ROYAL BANK FINANCIAL GROUP
Mortgage Centre
"வீடு உயிர்ப்புள்ள ஒரு இயக்கம். வீடு பற்றிய நினைவில்லாத மனிதர்களே இல்லை என்கிற அளவுக்கு அது உயிர் பெற்றது. தாய்மையாக, தோழமையாக பரி வோடும் கனிவோடும் எங்களோடு கலக்கிறது. சிநேகம் கொள்கிறது. எப்போதும் எங்களோடு ஒரு இணக்கமான உறவை அது விரித்திருக்கிறது"
உங்கள் கடின உழைப்பை வீடொன்றில் முதலிடும் போது குறைந்த வட்டிவீதம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள..
எங்களை அழையுங்கள்....416.438.1688

Vince Sinnadurai
Account Manager
Residential Morgages
416-917-9462
Abirami ( Abby ) Sri Haran
Mobile Mortgage Specialist
416-472-3195
Mailvaganam (Mike)
Account Manager
Residential Morgages
416-220.1184

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Video Centre
Audio, Video, CD & Gift
VHS to DVD Record
DVD to DVD
PAL< > SCAM < > NTSC
Any System
NvC
607-1 Parliament St, 1St Floor
Toronto, Ontario ( Wellesly & Parliament )
Phone: 416.944.0238



அன்பார்ந்த குழந்தைகளே
நீங்கள் வரையும் சித்திரங்களை
எமக்கும் அனுப்பி வையுங்கள்
அழகானவற்றை இந்தப்
பக்கத்தில் பிரசுரிக்கிறோம்



Canx
Designers Ltd.
உழைப்பும் கனவும் குழைத்துக் கட்டிய
ஓர் அழகிய அமைப்பே வீடு..
Laminating Floor $1.49/Sq.ft
Complete with underpad and insulation $1.98/Sq.ft
Hardwood Floor $4.99/Sq.ft
Plus Insulation 0.99 Cents/Sq.ft
- Hardwood Flooring
- Laminates, Carpet
- Ceramic & Granite Tiles
- Granite Counter Tops
All your Home Improvement Needs
Call Param
Tel: 416.759.3709 Fax: 416.759.4293
65 Wickware Gate, Unit #9, Scarborough, On. M1P 4Z1 E.Mail: canxdesigners@bellnet.ca

# கரம்

ஜி.எஸ்.எஸ்.

எந்த விளையாட்டையுமே அதன் நுணுக்கங்களையும், அடிப்படை விதிகளையும் அறிந்துகொண்டால் திறமையாக ஆட முடியும். குறிப்பிட்ட விளையாட்டுப் போட்டிகளை நேரிலோ தொலைக்காட்சியிலோ பார்த்தாலும் நன்றாக ரசிக்க முடியும். அதற்கு இந்தப் பகுதி உதவும். இந்த இதழில் கேரம்.

1. யார் ஆட்டத்தைத் தொடங்குவது என்பதை எப்படித் தீர்மானிப்பது?

பூவா தலையா போட்டுத்தான்! அதில் வெற்றி பெறுபவருக்கு இரண்டு சாய்ஸ் உண்டு. ஒன்று, அவர் முதலில் ஆட முடிவெடுக்கலாம். அல்லது எந்த இடத்தில் உட்கார்ந்துகொள்வது (அதாவது கேரம்போர்டை சுற்றி இருக்கும் நான்கு இடங்களில்) என்பதைத் தீர்மானிக்கலாம்.

2. மொத்தம் எவ்வளவு பாயிண்ட்டுகள் எடுத்தால் ஜெயித்ததாகப் பொருள்?

இருபத்தைந்து பாயிண்ட்டுகள்.

3. இரண்டு பேர் ஆடும் ஒற்றையர் ஆட்டத்தில் குழப்பம் இல்லை. ஆனால், மொத்தம் நான்கு பேர் ஆடும் இரட்டையர் ஆட்டத்தில் எந்த வரிசையில் ஆடவேண்டும் என்பதில் குழப்பம் வருகிறதே!

இடமிருந்து வலமாகத்தான் ஆடவேண்டும். அப்பிரதட்சணமாக ' அதாவது கடிகாரச்சுற்றுக்கு நேரெதிர் திசையில் ஆடவேண்டும்.

4. ஆடும்போது ஒரு காய் வெளியே குதித்தோடிவிட்டால் என்ன செய்வது?

அதை எடுத்து போர்டில் நடுவே உள்ள சிறிய வட்டத்தில் வைக்க வேண்டும். அந்த வட்டத்தில்



ஒரு பகுதியை வேறு ஏதாவது காய் ஆக்கிரமித்திருந்தால் மீதமுள்ள பகுதியில் வெளியேறிய காயை வைக்கவேண்டும்.

5. நடுவில் உள்ள சின்ன வட்டத்தை முழுவதுமாக ஏதாவது ஒரு காய் ஆக்கிரமித்திருந்தால் என்ன செய்வது? அந்தக் காயின்மேல் வெளியேறிய காயை வைக்க வேண்டுமா?

கூடாது. அந்தக் காய் யாருக்கு உரியதோ அவருக்கு நேர் எதிர்புறமாக பெரிய மைய வட்டத்துக்குள் உள்ளே இருக்கும்படி வைக்கவேண்டும்.

6. எப்போதும் படுத்தவாக்கில் காய்கள் இருப்பதுதான் வழக்கம். ஆனால், ஆடும்போது ஒரு காய் நெட்டுக்குத்தாக நின்றால் அதை என்ன செய்வது?

ஒன்றும் செய்யக்கூடாது. அதாவது அதைப் படுக்கவைக்க கூடாது. அப்படியேதான் தொடர்ந்து ஆடவேண்டும்.

7. ஒற்றையர் ஆட்டத்தில் இருவரும் போட்டியாளர்கள். ஆனால், இரட்டையர் ஆட்டத்தில் எதிரே இருப்பவர் நம் கூட்டாளிதானே... அவரோடு அவ்வப்போது ஆலோசனை நடத்தலாம் இல்லையா?

மூச்! அதற்கெல்லாம் கேரம் விதிகளில் அனுமதியில்லை.

8. கேரம் விளையாட்டில் ராணியின் மதிப்பு குறைந்துவிட்டது என்கிறார்களே, என்ன அர்த்தம்?

கேரம் விளையாட்டில் சிவப்புக் காயைத்தான் ராணி என்று குறிப்பிடுவார்கள். தொடக்க காலத்தில் அதன் மதிப்பு ஐந்து பாயிண்ட்டுகள் என்று இருந்தது உண்மை. ஆனால், இப்போதெல்லாம் ராணியின் மதிப்பு மூன்றுதான். அதுமட்டுமல்ல, பந்தயத்தை வெல்ல எடுக்கவேண்டிய பாயிண்ட்டுகள் இருபத்தைந்து என்றாலும் இருபத்தோரு பாயிண்ட்டுகளுக்கு

( 23 பக்கம் பார்க்கவும் )



THE MORTGAGE ALLIANCE COMPANY OF CANADA
Scotiabank TD
MORTGAGE
Major Banks Only
5 Years Closed 4.7%
4 Years Closed 4.5%
3 Years Closed 4.3%
Variable 3.0%
உங்கள் அனைத்து மோர்கேஜ்
தேவைகளுக்கும் நாடுங்கள்
VIJAY MARIAMPILLAI
Mortgage Specialist
Cell: 416.566.0621
2190 Warden Ave, Suite 206, Scarborough, On
Office: 416.499.4700 Fax: 416.499.9546

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல்
11



# வாடைக்காற்று
## -செங்கை ஆழியான்-

**ஈழத்தின் சிறுகதை – நாவலாசிரியர்களில் பிரதானமானவரான செங்கை ஆழியானின் நாவல்களில் வாடைக்காற்றுப் பிரபலமானது. நெடுந்தீவின் புவியியல், சமூகப் பின்னணிகளில் உருவான இந்த நாவல் விமர்சகர்களால் சிலாகிக்கப்பட்ட அதே வேளை பெரும் சர்சைகளுக்கும் சிக்கல்களுக்கும் ஆளானது. 1973இல் வீரகேசரி பிரசுரமாகவும், 1978இல் திரைப்படமாகவும், 2001இல் பூபாலசிங்கம் புத்தக நிலையத்தினரால் இரண்டாவது பதிப்பாகவும் வெளிவந்து பல்லாயிரக் கணக்கானவர்களை வசீகரித்த வாடைக்காற்று இப்போது வைகறை வாசகர்களுக்காக நாவலாசிரியரின் உளப்பூர்வ அனுமதியுடன் தொடராக மறுபிரசுரமாகிறது.**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

'இவ்வளவு நாளா வேலைக்கு வாறன் ...... ஆரோ தெரியாதவள் போல இருந்தியள்..'

'அப்படி இல்லைத் தங்கச்சி....' என்ற செமியோன் எங்கோ வெறிக்கப்பார்த்து விட்டு கூறினான்: 'ஒரு பெண்ணோடு பேசப்போனதன் பயனாக எனக்குக் கிடைத்த பரிசுகேடு இன்னமும் மறையவில்லை.....' அவனுடைய குரலில் தொனித்த வெறுப்பையும், ஏக்கத்தையும் நாகம்மா உணர்ந்தாள். சில நிமிடங்கள் அவளால் எதுவுமே பேச முடியவில்லை.

'ஆரோ செய்த பிழைக்காக இன்னொருவரைக் கோபிக்கிறது சரியா அண்ணை? பிலோமினா, பாவம்...... அவள் ஒரு பாவமும் அறியாதவள்...... அவளுடைய அண்ணன் சூசை செய்த பிழைக்கு அவளைப் பழி தீர்க்கிறதா?......'

'முடிஞ்சு போன கதையைப் பற்றி இப்ப பேசி என்ன பலன்......' என்றார் பொன்னுக் கிழவர்.

'என்ர அப்பரிடமிருந்து தொழிலை மட்டும் நான் தெரிஞ்சு கொள்ளவில்லை. அவருடைய நல்ல செயல்களையும் தெரிஞ்சு வைச்சிருக்கிறன். எனக்கு ஒருத்தன் தீமை செய்தாலும் அவனுக்கு என்னால் தீங்கு நினைக்க முடியவதில்லை. அதுக்காக நான் கோழை என்று அர்த்தமில்லை. அன்றிரவு பிலோமினாவின் தமையன் சூசை நல்ல வெறியில் வந்து என்னை வாய்க்கு வந்தபடி பேசியதோடு, என் சேட்டிலும் பிடிச்சு இழுத்தான். நான் அப்பவும் பொறுமையை இழக்கவில்லை. நான் தலை அசைத்திருந்தால் போதும் தங்கச்சி. இன்டைக்குச் சூசை இருக்கமாட்டான். நான் பழி தீர்க்கிறவனா?.......'

உணாச்சி வசப்பட்டுச் செமியோன் பேசினான். அவனுடைய உயர்ந்த குணங்கள் யாவரும் அறிந்ததே.

'நீங்கள் அவளைக் கைவிட்டிருக்கக் கூடாது அண்ணை.....'

'தங்கச்சி அவளை நான் கைவிடவில்லை..... கடைசி நாள் அவளை நான் கேட்டன், என்னுடன் வந்துவிடு என்றுளூ அவளால் முடியவில்லை. சம்பிரதாயங்கள், பெருமை என்றெல்லாம் பார்க்கிறவை ஒருக்காலும் காதல் கொள்ளக் கூடாது தங்கச்சி!...... காதல் என்பது வீரர்களுக்குரிய இனியவாழ்க்கை. கோழைகளுக்குரியதல்ல......' என்ற செமியோன் கலகலவெனச் சிரித்தான்.

அப்போது வெளியில் யாரோ அழைக்க பொன்னுக்கிழவர் எழுந்து சென்றார். தனிமையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நாகம்மா கூறினாள்:

'அண்ணை , பிலோமினா உங்களை மறக்க முடியாது தவிக்கின்றாள். நீங்கள் போனதிலிருந்து நடைப்பிணமாக உலவுகிறாள். உங்களுடன் எந்தக் கணமும் வரத் தயாராக இருக்கிறாள்! ஒருக்கா அவளைச் சந்தித்துப் பேச மாட்டியளா?...'

செமியோன் மௌனமாக இருந்தான். நாகம்மா சொன்னாள்:

'நாளைக்கு இரவு இரண்டாம் சாமம்..... ஆலடி வயிரவர் கோயிலில் .....பிலோமினாவை வரச் சொல்லுறன்.....'

திடீரெனக் கடற்கரையில் கூச்சல் எழுந்தது. வாசலில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த பொன்னுக்கிழவர், 'தம்பி, கடற்கரையிலே ஏதோ சச்சரவு போலக் கிடக்குது..' என்றார்.

-----------------------------------

சற்று பலமாக வீசிய வாடைக்காற்று இரவு ஏழரை மணியளவில் திடீரென அடங்கியது. பூமியிலிருந்து காற்றே அற்றுப்போய் விட்டது போல அனல்வெக்கை எங்கும் பரவியது. சற்று முன் ஆரவாரத்துடன் கரையில் மோதிய அலைகள் சாந்தமடைந்து மெதுவாக நெளிந்தன. எங்கும் ஆழ்ந்த அமைதி!

தனது வாடியில் அமர்ந்திருந்த மரியதாஸ் கடலின் மேற்பரப்பில் பார்வையை மேயவிட்டான். தூரத்தில் கடலின் நீர்ப்பரப்பைக் கிழித்துக்கொண்டு சுறா மீன்கள் மேலேழுந்து துள்ளி விழுவதைக் கண்டான். ஒன்று..... இரண்டு.... மூன்று.... என அவற்றின் எண்ணிக்கையும் பெருகியது. அமைதியுற்ற கடலில், கரைவரை சுறாக்கள் வரும் என்பது அவனுக்குத் தெரியும்.

வள்ளத்துக்கு அருகிலே அமர்ந்து மன்றாடி இராமசாமியும், இஸ்மாயிலும் வேறிருவரும் சாராயம் குடித்துக் கொண்டிருந்தனர். ஏனையோர் சற்று விலகி அமர்ந்தி ருப்பதையும், எதையோ காரசாரமாக விவாதிப்பதையும் மரியதாஸ் கண்டான்.

வாடியில் இருந்தவாறே, 'மன்றாடி....' என்று குரல் கொடுத்தான்.

அமைதியைக் கிழித்தபடி அவனது குரல் எழுந்தது. முதல் அழைப்பிற்கே இராமசாமி பதில் கொடுப்பது போல எழுந்து நின்றான். மரியதாஸ் வருமாறு சைகையால் அழைத்தான்.

இராமசாமியுடன் இஸ்மாயிலும் வந்தான்.

'இரவு காற்று பலமாக வீசும் போல இருக்கு.'

'இப்ப இருக்கிற நிலைமையைப் பார்த்தால் புசல் காத்து அடிக்கும் போலப் படுகுது..' என்றான் இஸ்மாயில். மரியதாஸ் கடலைப் பார்த்தான். தூரத்தில் மீன் ஒன்று துள்ளிப் பாய்வது தெரிகின்றது.

'காற்று வீச இன்னும் எவ்வளவு நேரம் எடுக்குமென்று நினைக்கிறாய், மன்றாடி?'

மரியதாசின் கேள்வி மன்றாடிக்கு வியப்பைத் தந்தது. வானத்தையும் கடலையும் சற்று நேரம் பார்த்து விட்டு, 'இரண்டு மணித்தியாலமாவது எடுக்கும்..' என்றான்.

'அதிலும் கூட எடுக்கும்.' என்றான் இஸ்மாயில்.

'சின்னக் கரை வலையை ஒருக்காப் போட்டு வலிக்க இரண்டு மணித்தியாலங்கள் போதுமா?.....' என்று கேட்டபடி மரியதாஸ் எழுந்து நின்றான். 'பால் சுறாக்கள் கரையை அண்டித் திரிகின்றன... ஏராளமான மீன் பிடிபடுமென்று நினைக்கிறன்' என்றான் அவன் ஆர்வத்தோடு.

'இப்பவா....' என்றான் மன்றாடி ஆச்சரியத்தோடு. இருந்தாற்போல கடல் பொங்கி..... காற்று கிளம்பிவிட்டு தென்றால்... வலையும் போகும்... நாங்களும்...'

மரியதாஸ் குறுக்கிட்டான்.

'அப்படியொன்றும் நேராது... இரண்டு மணித்தியாலத்திலே எவ்வளவோ சாதித்துடலாம்.. ஒரு பரீட்சை தானே?...... இன்று பிடிபடுகிறதிலை எல்லாருக்கும் சமபங்கு.... இது எங்களுக்கு ஒரு சவால்... எங்கே பார்க்கலாம்...' என்றான். இதனைக் கேட்ட எல்லோரது முகங்களும் மலர்ந்தன.

கடற்கரையில் அமைதி குலைந்தது. கலகலப்பு நிறைந்தது. மரியதாசின் தொழிலாளர்கள் கரைவலை வள்ளத்தில் வலையை ஒழுங்காக ஏற்றினர். அடுத்த வாடிபடும் அமர்க்களத்தை செமியோன் வாடியிலிருந்த செபஸ்தியானும், பேதுருவும் கண்டனர். என்ன நடக்கின்ற தென்பதை உடன் அவர்களால் உணர முடியவில்லை. வலையை

( 22 பக்கம் பார்க்கவும் )


# V.N. FURNITURE

## *Custom Made Sofas*

### The Best Quality and Selection

For all your custom made home furniture needs Call us at
(416) 746-8520
(416) 665-4395






**294 EDDYSTONE AVENUE**
**(Eddystone & Jane ( Downsview )**
**Opeining Hours:**
**Mon- Friday 11am-8pm**
**Sat-Sub 11Am -6pm**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருது

**-சுகதேவ்-**

ஏழாண்டுகளுக்கு முன்பு 'அன்னை இல்ல'த்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனிடம் பேசிக் கொண்டிருந்தேன். மூன்று மணி நேர உரையாடலில் அவர் சொன்ன ஒரு விஷயம் இப்போது நினைவுக்கு வருகிறது:

"ஒரு கலைஞனுக்கு விருது என்பது அவன் வேகமாக வளரும் இளம் வயதில் கிடைக்க வேண்டும். அப்போது தான் அவன் அதைக் கொண்டாட முடியும்".

சிவாஜியின் அளவுகோல்படி விக்ரம் மிகச் சரியான தருணத்தில் சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றிருக்கிறார்.

ஆனால் தமிழ் மட்டுமன்றி தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளிலும் சேர்த்து 300 படங்களுக்கு மேல் எண்ணற்ற பாத்திரங்களில் நடித்த சிவாஜிக்கு ஒரு முறை கூட தேசிய அளவில் சிறந்த நடிகர் விருது வழங்கப்படவில்லை என்பது இந்தியத் திரை வரலாற்றின் அதிர்ச்சி நிறைந்த உண்மை.

கடைசி வரைக்கும் சிவாஜிக்குள் இந்தக் காயம் ஆறாமலிருந்தது.

".......... ஒன்றை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். உரிய காலத்தில் விருது கிடைக்கவில்லை என்ற ஆதங்கமும் வருத்தமும் என் மனத்தின் ஓரத்தில் விண், விண் என்று இருக்கத்தான் செய்கிறது. நானும் மனுஷன்தானே..... இதை மறைத்தால் என்னைவிட அயேக்கியன் யாரும் இருக்க முடியாது". (தினமணி தீபாவளி மலர், அக்டோபர் 1997). இப்படி ஒரு தீராக் குமுறலுடன்தான் இந்த மண்ணின் மாபெரும் கலைஞான இச் சமூகம் வழியனுப்பி வைத்திருக்கிறது.

ஒரு நடிகராக அமெரிக்க அரசின் அழைப்பின் பேரில் அங்கு சென்று வந்த முதல் இந்திய நடிகர். நயாகரா நகர மேயராக ஒரு நாள் தங்கச் சாவி அளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவர். கெய்ரோவில் நடந்த ஆசிய – ஆப்பிரிக்கத் திரைப்பட விழாவில் சிறந்த நடிகர் ('வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்துக்காக) விருதைப் பெற்றவர். பிரெஞ்சு அரசின் மிக உயரிய விருதான செவாலியே பட்டம் பெற்றவர் என்ற பெருமைகளெல்லாம் சிவாஜிக்கு உண்டு.

திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனைக்காக வழங்கப்படும் தாதா சாகேப் பால்கே விருது; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் டாக்டர் பட்டம்; கலைமாமணி, பத்மஸ்ரீ; பத்மபூஷண் போன்ற கூடுதல் பெருமைகளும் அவருக்கு உண்டு.

என்றாலும் அவரே சொன்னது போல, உரிய காலத்தில் அவர் எதிர்பார்த்த அங்கீகாரம் கிடைக்காதது. ஒரு கலைஞனாக அவரை மிகவும் மனமுடையச் செய்திருக்கிறது.

சிறந்த நடிகர், சிறந்த இசை ஆகியவற்றுக்கு கெய்ரோ பட விழாவில் விருது பெற்ற 'வீரபாண்டிய கட்டமொம்மன்' படம், இந்தியாவைப் பொறுத்தமட்டில் தேசிய அளவில் நற்சான்றிதழ் பெற்ற படம் மட்டுமே. தமிழக அரசு சார்பில் ஒரே ஒரு முறை சிறந்த நடிகராக சிவாஜி தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். அது 1969-ல் 'தெய்வ மகன்' படத்துக்காக. ஆனால் அதற்கு முந்தைய ஆண்டே எம்.ஜி.ஆருக்குச் சிறந்த நடிகர் விருது அளிக்கப்பட்டுவிட்டது. எந்தப் படத்துக்கு....? 'குடியிருந்த கோயில்' (!). 1971-ல் 'ரிக்ஷாக்காரன்' படத்தில் நடித்ததற்காக (?!) எம். ஜி. ஆருக்கு 'பாரத்' பட்டம், அதாவது தேசிய அளவில் சிறந்த நடிகர் விருது வழங்கப்பட்டது. தமிழ்ச் சமூகம் மறக்க முடியாத திரைக் காவியமான 'தில்லானா மோகனாம்பாள்' வந்த சமயம் அது. ஆனாலும் சிவாஜிக்குக் கிடைக்கவில்லை.

சிவாஜிக்குத் தேசிய விருது அளிக்காதது குறித்து அப்போதே அதிருப்திக் குரல்கள் எழுந்தன. என்றாலும் சக நடிகர் என்ற முறையிலும் சிவாஜி நூறு சதவிகிதம் விருதுக்குத் தகுதியானவர் என்ற அடிப்படையிலும் தேர்வுக் குழுவின் முடிவை எதிர்த்து வெளிப்படையாக உரக்கக் குரல் கொடுத்த ஒரே நபர் சோ மட்டுமே. மற்றவர்களெல்லாம் தங்களைப் பத்திரப்படுத்திக்கொள்வதிலேயே குறியாக இருந்தார்கள்.

'தேவர் மகன்' படத்துக்காக 1992-ல் கிடைத்த நீதிபதிகள் விருதுதான் (ஜுரிஸ் அவார்ட்) தனித்திறனுக்காக சிவாஜிக்குக் கிடைத்த ஒரே தேசிய விருது. அதற்குப் பிறகு கிடைத்தது தாதா சாகேப் பால்கே விருது. எப்போதோ கொடுத்திருக்க வேண்டிய அந்த விருதும் மிகத் தாமதமாகத்தான் கிடைத்தது.

சிவாஜியின் சமகால நடிகர்களான கன்னடத்தில் ராஜ்குமார், தெலுங்கில் என். டி. ஆர்., நாகேஸ்வர ராவ், மலையாளத்தில் பிரேம் நசீர் ஆகியோரெல்லாம் தேசிய விருதைப் பெற்றிருக்கிறார்கள். சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறையும்கூட இந்த விருது கிடைத்திருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், கமல்□ாசன் மூன்று முறை இந்த விருதைப் பெற்றிருக்கிறார். ('மூன்றாம் பிறை' - 1982; 'நாயகன்' - 1987; 'இந்தியன்' - 1996). அவரது குடும்பத்தைச் சேர்ந்த சாருஹாசனும் சுஹாசினியும் தலா ஒரு முறை இந்த விருதைப் பெற்றிருக்கிறார்கள்.
(மூன்று முறை தேசிய விருதைப் பெற்றாலும்கூட, "சிவாஜி பாராட்டுதான் சம்பளம்; விருது எனக்கு போனஸ்" என்றே சொல்லியிருக்கிறார் - தினமணி கதிர் பேட்டியில் - கமல்).

சுஹாசினி ('சிந்து பைரவி') தவிர நடிகைகளில் தேசிய விருது பெற்றவர்கள் லட்சுமி ('சில நேரங்களில் சில மனிதர்கள்'). ஷோபா ('பசி'), அர்ச்சனா ('வீடு'), ஜெயபாரதி ('மறுபக்கம்'). சிறந்த துணை நடிகருக்கான விருதைப் பெற்றவர்கள் : நாகேஷ் ('நம்மவர்'), பிரகாஷ் ராஜ் ('இருவர்'), அதுல் குல்கர்னி ('ஹேராம்'), சிறந்த துணை நடிகைகள்: மனோரமா ('புதிய பாதை'), ரேவதி ('தேவர் மகன்').

இவைதான் நடிப்புக்காக இதுவரையில் தமிழகம் பெற்றிருக்கும் தேசிய விருதுகள். இப்போது 'பிதாமகன்' விக்ரம்.

நடிப்பு தவிர, பிற பிரிவுகளிலும் சேர்த்துப் பொதுவாகத் தமிழகத்துக்குச் சராசரியாக ஐந்தாறு விருதுகளாவது ஆண்டுதோறும் கிடைக்கும். இந்த முறை அதுவும் சுருங்கிவிட்டது. இரண்டே இரண்டுதான். சிறந்த தமிழ்ப் படத்துக்கான விருது 'இயற்கை'க்குக் கிடைத்திருக்கிறது.இந்த முறை கிடைத்த இரண்டு விருதுகளுமே சரியான தேர்வு தான். இருந்தாலும் தமிழ் சினிமாவில் இயங்கு தளத்துடன் ஒப்பிடுகையில் மிகச் குறைவாகத் தெரிகிறது.

தேசிய விருதுக்கானத் தேர்வுக் குழுவில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் இடம் பெறுவது உண்டு. அப்படியிருந்தும் நம்மவர்களுக்கு அதிகம் கிடைப்பதில்லை. பானுமதியும் ராண்டார் கையும் விருதுக் குழுவில் இடம்பெற்றருந்த ஆண்டில் தமிழ் சினிமாவுக்கு எந்த விருதுமே கிடைக்கவில்லை. அதைப் பாாக்கும்போது இரண்டு கிடைத்தாலும் திருப்தியடைய வேண்டியதுதான்.

அண்டை மாநிலங்களைப் போலத் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைக் கடந்து கலைஞர்களும் அறிவுஜீவிகளும் குரல் கொடுக்காததன் விளைவாகவே தமிழகம் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

"சிவாஜிக்குச் சிறந்த நடிகர் விருது அளிக்காதது நிச்சயமாகப் பெரிய அநீதிதான். அவர் அரசியலில் எடுத்த நிலைகள்கூட இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்" என்கிறார் வரலாற்றாசிரியரும் திரைப்பட ஆய்வாளருமான சு. தியடோர் பாஸ்கரன்.

"சிவாஜிக்குச் சிறந்த நடிகர் விருது கிடைக்காததற்கு மட்டுமல்ல, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய பல விருதுகள் கிடைக்காமல் போனதற்கு முக்கியக் காரணம் கேரளத்துக்காரர்களைப் போல நம்மவர்களிடம் 'லாபியிங்' இல்லாததே" என்கிறார் திரைத் துறையில் பழுத்த அனுபவம் நிறைந்த பிலிம் நியூஸ் ஆனந்தன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் பேசும் மக்கள் தனியரசுக்கான தமது வேணவாவினை 1977ம் பொதுத் தேர்தல் மூலம் உலகிற்குப் பிரகடனம் செய்தனர். ஆனால் ஈழத்தில் நிராயுதபாணிகளாய் அப்பாவிகளாய் – அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள்கூட்டம் தனியாட்சி உரிமைப்பிரகடனம் செய்ததன் பின்னர் 1977ன் ஆவணி மாதத்தில் ஒரு பெரும் கலவரத்தைச் சந்தித்தது. "போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம" என்ற ஜே. ஆரின் அரசு கட்டவிழ்த்துவிட்ட கலவரத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைந்தனர். தஞ்சமடைந்தவர்களில் ஒரு பகுதியினரைச் சுமந்து கொண்டு கொழும்பிலிருந்து லங்காராணி புறப்பட்டுச் சென்றது. இதைப் பின்னணியாகக் கொண்டு 1978 மார்கழியில் அருளர் அவர்கள் 'லங்காராணி' நாவலை எழுதி வெளியிட்டார்.**

**லங்காராணி வெறுமனே கற்பனைக் கதை அல்ல, பொழுது போக்குவதற்காக எழுதப்பட்ட புனை கதை அல்ல. இலங்கையின் இனப்பிரச்சினை தமிழர்களுக்கான தனியரசு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே தீர்க்கப்படமுடியும் என்பதையும் இதனை ஈடேற்ற ஒரு மாபெரும் மக்கள் எழுச்சியை தோற்றிவிக்கவேண்டிய அவசியத்தையும் இந்நூல் வலியுறுத்துகிறது.**

**அருளர் அவர்களின் மனப்பூர்வமான சம்மதத்துடன் லங்காராணி நாவல் வைகறை இதழில் தொடர்ந்து பிரசுரமாகின்றது.**

# நாவல்



**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

# லங்கா ராணி- அருளர்

## 11

"1971ஆம் ஆண்டு சிங்கள அரசுக்கெதிராக ஆயுதம் கொண்டு போராடிய சிங்கள இளைஞர்களுடன் ஒன்று சேர்ந்து நாம் ஏன் போராடக் கூடாது. சிங்களப் பாட்டாளிகளுக்கும், தமிழ்ப் பாட்டாளி மக்களும் ஒன்று சேர்ந்து அமைக்கும் ஒரு தொழிலாளவிவசாயிகள் தலைமையிலான அரசுதான்தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும். உலகப் பாட்டாளிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து புரட்சி செய்யவேண்டும். ஆளும் வர்க்கத்தினர் தமிழர் சிங்களவர் பிரச்சினையை முன்வைத்து மக்களை ஏமாற்றுகிறார்கள். இதைத் தமிழ்த் தொழிலாளிகளும், விவசாயிகளும் விளங்கிக்கொண்டு சிங்கள தொழிலாளிகளுடன் ஒன்று சேர்ந்து போராடவேண்டும்" என்று வளாக மாணவன் கேள்வி ஒன்றை எதையும் ஏற்றுக் கொள்ளாதவன் போல் கேட்டான்.

"சரி, சரி. நான் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லுகிறேன்" என்று அந்த வேட்டியுடன் இருந்த இளைஞன் அதற்குப் பதில் சொல்லத் தொடங்கினான்.

"முதலாவது இந்த 71ஆம் ஆண்டு விடயம் ஒரு இளைஞர் கிளர்ச்சிதான். அது இலங்கைத் தொழிலாளர்களுடைய புரட்சியல்ல. இரண்டாவது இலங்கையில் தொழிலாளர் வர்க்கமென்று இருப்பவர்கள் முதலில் மலையகத் தொழிலாளர்கள்தான். என்ன புரட்சி ஏற்பட்டாலும் அவர்கள் தான் முன்னிற்கவேண்டும். சரி. முன்னுக்குத்தான் இல்லையென்றாலும் அவர்களைச் சேர்த்துக்கொண்டாவது போகலாம். அதற்கு மாறாக இவர்களைக் காலனித்துவ ஆக்கிரமிப்பு, இந்திய ஊடுருவல் என்றெல்லாம் இழிவுபடுத்த முற்பட்டனர் இந்த புரட்சியாளர்கள்."

"இதெல்லாம் பழைய கதைகள்" அந்த வளாக மாணவன் கூறினான்.

"இவர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்து திருத்திக்கொண்டிருக்கலாம்; வரவேற்கிறோம். உலகப் பாட்டாளிகளின் புரட்சி என்பதெல்லாம் உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சமதர்ம நாடுகளாக மலரவேண்டுமென்ற நியதியை இது குறிக்கிறது. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயல்படவேண்டுமென்பதையே இது குறிக்கிறது. அத்தோடு இதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இது சோறு போடாது. மற்றது ஆளும் வர்க்கத்தினர் சிங்க்ளப் பாட்டாளிகளையும், தமிழ்ப்பாட்டாளிகளையும் விவசாயிகளையும் ஒன்றுசேர விடாமல் வைத்திருப்பதற்காக இனப் பிரச்சினையைக் கிளப்பி விட்டுக்கொண்டிருக்கின்றனர். சரி, அதற்கு நாங்கள் ஒன்றுபடவேண்டும் ஒன்றுபடவேண்டும் என்று கூறிக்கொண்டிருந்தால் அந்தச் சூழ்ச்சிக்கு ஆட்பட்டுப் பொறியில் விழுந்தவர்களாகத்தான் இருப்போம் சரி, ஒன்றாகப் போனாலும் உண்மையிலேயே அந்தப் புரட்சி வெற்றி பெற்றாலும் இனப்பிரச்சினை சுலபமாகத் தீர்ந்துவிடுமா என்பதும் சந்தேகம்தான். இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தமிழர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கின்ற அவர்களுடைய ஆசை வரவேற்கத்தக்கதே. அவற்றை வெளிநாட்டு நிர்ப்பந்தங்களுக்காகச் சொல்லுகிறார்களோ, தங்களுடைய கிளர்ச்சியின் தோல்வி காரணமாகச் சொல்லுகிறார்களோ அல்லது நாம் ஒரு வேறு இனம், சரித்திர, சமய, மொழி, கலாச்சார, புவியியல் ரீதியாக வேறானவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டுதான் சொல்கிறார்களோ தெரியாது. எங்கள் கால்களில் முதலில் சரியாக நிற்கவேண்டும். பின்புதான் நாம் யாரை அணைத்துக்கொள்ளவேண்டும் என்பதைத் தீர்மானிக்கலாம். ஏற்றுக்கொள்கிறீரா? இப்படி எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன" என்றான் அந்த இளைஞன். வளாக மாணவன் தனது சந்தேகங்கள் தீர்ந்தது போல் தலையை அசைத்தான்.

இலங்கையில் 1971 ஏப்ரல் மாதத்தில் ஒரு இளைஞர் கிளர்ச்சி ஏற்பட்டது. இந்தக் கிளர்ச்சியின் அடிப்படை இலங்கைப் பொலீசாரையும் இராணுவத்தினரையும் கொன்று இலங்கையின் ஆட்சியைப் பிடிப்பதுதான். வெளிநாடுகளின் உதவியுடன் இந்தக் கிளர்ச்சியை அரசு அடக்கிவிட்டது. பதினாறாயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவர்கள் வைத்திருந்த ஆயுதங்களெல்லாம் வெறும் சாதாரண கைத்துப்பாக்கிகளும் உள்ளூரில் தயார் செய்யப்பட்ட கைக்குண்டுகளும் தான்.

இளைஞனது அந்தக் கேள்விக்கு மறுமொழி கூறிவிட்டு இன்றைய நிலை உருவாகுவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை ஆராய முற்பட்டனர். ஒருவன் தனிச் சிங்களச் சட்டம்தான் இன்றைய பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் என்றும், இன்னொருவன் சிங்களக் குடியேற்றம் என்றும், தமிழ் இளைஞர்களுக்கு உயர் கல்வி மறுப்புத்தான் எனவும் தெரிவித்தனர். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூறினர்.

"நாங்கள் ஒரு தேசிய இனம் என்று எங்களை அழைக்கின்றோம். இதன் பொருள் என்ன?" என்று வேட்டியுடன் இருந்த இளைஞன் மற்றவர்களை வினவினான்.

அதற்கு வளாக மாணவனொருவன் "ஒரு பொதுமையான கலாச்சாரமாக பிரதிபலிக்கப்படும் பாரம்பரியங்களையும், மொழியையும், பூமியையும், பொருளாதார வாழ்க்கை முறையையும் கொண்ட மக்களின் தொகுப்பே ஒரு இனம்" என்று கூறினான். தான் இதை எங்கோ படித்ததாகவும், அதை யார் எழுதியது என்று தனக்கு ஞாபகமில்லை என்றும் கூறினான். இன்னுமொருவன் இதன்படி பார்க்கப்போனால் நாம் ஒரு தேசிய இனம் இல்லையென்றும், நிலப்பரப்பால் தமிழர்கள் இலங்கை முழுவதும் இருக்கிறார்கள் என்றும் ஒன்றுபடாமலும் பாரம்பரியங்களால் வேறுபட்டும் மொழிவகையில் கூட இதுவரை காலமும் ஆங்கிலத்தையே விரும்பிப் பேசி வருகிறார்கள் எனவும் கூறினான். இதனைப் பலர் மறுத்தனர். என்னவாக இருந்தாலும் தமிழர்கள் தமிழர்கள்தான் என்றனர்.



1961 யாழ்ப்பாணம்

கடைசியாக இளைஞன் குறுக்கிட்டு சகல விதத்திலும் எமது இனத்திற்கான குணாம்சங்களை நிலைநிறுத்துவதற்குத் தடங்கல்களை இருப்பதால்தான் நாங்கள் போராட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இவ்வாறான ஒற்றுமைப்பாட்டுக்குப் பாதகமான வெளிநிலைத் தாக்கங்களை அகற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினான். நானூறு ஆண்டுகள் அந்நியர்கள் இருந்ததினால் அவர்கள் தமிழ் இனத்தின் நலன்களை என்றும் மனதில் கொண்டிருக்கவில்லை என்பதையும் இதனால் இனத்தின் இலட்சணங்கள் சிதைக்கப்பட்டுள்ளன என்றும் எங்கள் எதிரிகளை நாங்கள் அறிந்து எங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் சக்தியை முற்றாக இழந்துபோய் தனிமனிதராகவும் குடும்பம் உறவினர் என்ற நிலையிலும் தப்பித்துக்கொள்வதை மாத்திரம் நோக்கமாகக்கொண்டு செயற்படும் அந்நியர் ஏற்படுத்திச் சென்ற நிலையே தொடர்ந்து

"அது சரி, அந்நியன் இங்கிருந்த போய்விட்டான். அதற்காக நாம் ஏன் சிங்களவருடன் மோதவேண்டும்?" என்று வளாக மாணவனொருவன் கேட்டான்.

அந்நியர் சட்டத்தின் அரசு, தி ரூல் ஒவ் லோ, என்ற போர்வையில் சட்டங்களை இயற்றி அவற்றை நடைமுறைப்படுத்திக் கொண்டதால் தங்கள் அடக்கு முறைகளை நடைமுறைப்படுத்தியது போல, ஒரே நாட்டுக்குத் தேவையான உயர்ந்த இலட்சியங்களையோ கோட்பாடுகளையோ பொதுமைப்பாட்டையோ முன்வைக்காமல் ஒரே நாடு என்ற போர்வையில் பொரும்பான்மையினரின் பலமே சட்டங்களாக மாறும் நிலையால் தொடர்ந்து அடக்குமுறை நீடிப்பதே இந்த நிலைமைக்கு முக்கிய காரணம் என்று சொன்னான். தொடர்ந்து கூறுகையில் ஆங்கிலேயர் விட்டுச் சென்றவற்றின் மீது ஏறி உட்கார்ந்துகொண்டு இவர்கள் தங்களை அறியாமலே ஆங்கிலேயர்களைப் போல் நடந்து கொள்வதனால் தமிழர்கள் தங்கள் நாட்டுச் சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் ஒரு இனமாக இருப்பதால் இந்த உரிமையை அதாவது பிரிந்து போய் தனியான நாடு காணும் உரிமையை, சுயநிர்ணய உரிமையை, தி ரைட் ரு செல்வ் டிற்றேமினேசன் எங்கள் போராட்டத்திற்கு நாங்கள் பிரயோகிப்பதாக அமையும். இதில் எவ்வாறான தவறுமில்லை என்றும் கூறினான். இலங்கை ஒரே நாடாகத் தொடர்ந்து இருக்க இந்நாட்டு அரசு இரண்டு இனங்களுக்குமிடையில் ஏற்படும் உடன்பாடாக அமைய வேண்டுமேயொழிய ஒரு நாடு ஒரு மொழி வேண்டுமென்ற போர்வையில் ஒரு இனம் தனது மொழியையும் கலாச்சாரத்தையும் திணித்து இன்னொரு இனத்தை சிதைத்து அழிக்க முற்படுவதாக இருக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டான். அது ஆங்கிலேயரை

நீடிக்கிறது என்பதையும் அந்தப் போக்கை மாற்றி எங்கள் இனத்திற்கான இலட்சணங்களை நிறைவுபடுத்த வேண்டும் என்பதையும் குறிப்பிட்டான். மற்றவர்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

விட மோசமாக நடந்துகொள்வது போல் அமையும் என்றும் கூறினான்.

அங்கிருந்து நீர்கொழும்பு இளைஞன் சிங்களக் கடையொன்றில் எடுபிடி வேலை பார்த்து வந்தவன். இவற்றையெல்லாம் தன்னால் விளங்க முடியவில்லை என்பதைக் கூற விரும்பாமல் "இதுகளெல்லாம் இவங்களுக்கு எங்கே விளங்கப்போகுது. நாங்கள் எங்கடை பாட்டிலை போறதுதான் புத்தி' எனக் குறிப்பிட்டதும் மற்றவர்களால் சிரிப்பை அடக் முடியவில்லை.

பின் தளங்களில் உணவு பரிமாறி முடிந்தபின் தொண்டர்கள் இந்தத் தளத்திற்கு வந்தனர். படிகளில் நின்றுகொண்டே சாம்பார் தட்டுக்களைக் கீழ்த்தளத்திற்குத் கொடுத்தனர். பேசிக் கொண்டிருந்த இளைஞர்கள் தட்டுக்களைப் பெற்றுக்கொண்டு சாப்பிடத் தொடங்கினர் விவாதம் தொடர்ந்தது.

மேலே தளத்தில் சரவணனும் நண்பர்களும் வேலையை முடித்துவிட்டிருந்தனர். வேறு பலரும் உணவை முடித்தபின் மேல்தளத்திற்கு வந்துவிட்டிருந்தனர். டாக்டர் நற்குணம் 'பீனோல்' என்ற கிருமிநாசினியைக் கழிவிடங்களுக்குத் தெளித்தார் மழைக்கோலம் போட்டு வானத்தை மூடி இருளாக இருந்தது. அந்த வாளிகள் சரியாக வைக்கப் பட்டிருக்கின்றனவா என்று சரவணன் மீண்டுமொரு தடவை எட்டிப்பார்த்துச் சிலவற்றை உள்ளே தள்ளிவிட்டான்.

சரவணன் யாழப்பாணக் கல்லூரி ஒன்றில் படித்து வந்தவன் இவனுடைய தகப்பன் ஒரு புகையிலைத் தோட்டத்தைக் குத்தகை எடுத்துச் செய்து வந்தார். மூன்று தங்கைமார் இருக்கின்றனர் "தரப்படுத்தல்" திட்டம் வந்தது. கடினமான நிலையே வீட்டில் தொடர்ந்து நீடித்தது. இனிமேல் படித்தும் பிரயோசனம் இல்லையென்று தெரிந்ததும் இவனுக்குப் படிப்பு ஓடவில்லை. மாணவர் பேரவையில் சேர்ந்தான். கூட்டங்களுக்குப் போவான். ஊர்வலங்களில் முன்னுக்கு நிற்பான். மாணவர்கள் துரோகிகள் பட்டியல் தயாரிப்பதைப் பொழுது போக்காகச் செய்வார்கள். இவனும் அதில் ஈடுபடுவான். துரோகிகள் பட்டியலில் சிங்களவர் பெயர் இடம்பெறமுடியாது என்ற கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். சிவகுமாரன் இறக்கிறான். மேலும் கோபமடைகிறான். கைத் துப்பாக்கிகள் தேடி அலைகிறான். கிடைக்கிறது. இப்படி இருக்கும்போதுதான் நண்பன் ஒருன் வந்து வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு துரையப்பாவைப் பார்க்க வரும்படி அழைக்கிறான்.

இவனுக்குக் கார் ஓட்ட அதிகம் தெரியாது. கார் நிற்பாட்டியபின் சாரதியின் ஆசனத்தில் ஏறி அமரும்படி கூறிக்கொள்கிறார்கள். அதன்படியே எல்லாம் நடக்கிறது. திரும்பி வருகையில் சற்றும் எதிர்பாராதவாறு பொலிஸ் ஜீப் ஒன்று வருகிறது. வேறு வழியில்லை பிரேக் போடுகின்றான். கார் மற்ற பக்கமாகத் திரும்பி வயலுக்குள் பாய்ந்தோடி நிற்கிறது. இளைஞர்கள் நால்வரும் தப்புகின்றனர். அதன்பின் சரவணன் தலைமறைவாகிறான். கடைசியாக வீடு போயிருந்தபோது இவனுக்குப் பணம் தேவைப்பட்டது. வீடு மேய வைத்திருந்த ஐம்பது ரூபாவையும் தாய் கொடுக்க மறுத்துவிட்டாள். தங்கையின் தங்கச் சங்கிலியை வாங்கிக்கொண்டு புறப்பட்டு வந்தவன் மீண்டும் வீடு திரும்பவில்லை. அதற்குப் பின்பும் நண்பர்களுடன் சேர்ந்து பல இடங்களுக்குப் போய் வருகிறான்.

( தொடர்ச்சி அடுத்த வாரம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகாம்பிகை நகைமாளிகை

## KANAGAAMBIKAI GOLD HOUSE

*There's never been a more beautiful interpretation of what it means to be a woman.*



# கனகாம்பிகை அடைவுமாடம்

## கனகாம்பிகை
## நகைமாளிகையின் கிளை நிறுவனம்

### கனேடிய அரசினால் அங்கீகாரம் பெற்ற அடைவுமாடம்





3160 EGLINTON AVE E,
UNIT# 03,
SCARBOROUGH

TEL: 416-269-7198

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

# சனிப்பிணம்

## கந்தர்வன்

ராமு நாடாரின் மளிகைக் கடையை விட்டுக் கிளம்பிய ஆராயி முறத்தையும் விளக்குமாற்றையும் தூக்கி நார்ப்பெட்டிக்குள் போட்டுக் கொண்டு சேரியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். பொழுது நன்றாக இருட்டி விட்டது. மேற்கேயுள்ள நெடுஞ்சாலையின் இருபுறமும் அந்த வருடம் விளையாமல் சாவியறுத்த வயல்களைத் தாண்டிக் கொண்டிருந்தாள். ஊர் பஞ்சம்போனபிறகு பெரும் பகுதியான குடும்பங்கள் சிந்தாமணிக்கும் தஞ்சாவூர் சீமைக்கும் போனது போக மிஞ்சிய ஆட்களில் சிலர் அங்கங்கே சிமெண்டு மடைகளின் மேல் உட்கார்ந்து வம்பளந்து கொண்டிருந்தனர்.

சாவகாசமாக இப்படிச் சிலர் உட்கார்ந்து வம்பளந்து கொண்டிருப்பதைப் பார்க்கப் பார்க்க, அவள் வேகம் இன்னும் அதிகரித்தது. அவள் போய்த்தான் வெள்ளைக் கிழவனுக்குக் கஞ்சி வைத்துக் கொடுக்க வேண்டும். வெள்ளையனுக்கு பக்கவாதம். எழுந்து நடமாட முடியாது. பத்து அடி நடப்பதற்குள் இரண்டு தடைவையாவது விழுந்து விடுவான். காலையில் ஆராயி கிளம்பும் பொழுது அவனுக்குக் கொஞ்சம் கூழும் கருப்பட்டியும் கொடுத்து குடிக்க வைத்துவிட்டுத்தான் வந்தாள். ஓலைப்பாயை விரித்து கிழவனைப் படுக்க வைத்துவிட்டு கூடையைத்திறந்து கோழிகளை மேய்வதற்காக விரட்டி விட்டுத்தான் வந்திருந்தாள். கிழவன் உயிரோடிருக்கிறானா போய் விட்டனா என்பதை அவள் போய்ப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். அவளுக்கு இப்படி கெட்டதாகவே நினைத்துப் பழக்கம்.

இதிலெல்லாம் தைரியமாக இருக்க அவளுக்குத் துணைக்கு இப்போது ஒரு தூணில்லை. ஒரு சிறு குச்சிகூட இல்லை. அவள் நாலையும் நினைத்து அடிக்கடி மனதைப்புரட்டிக் கொள்வாள். கடைசியில் அவள் நினைத்ததைப் போலெல்லாம் கெடுதியாக ஒன்றும் நடக்கவில்லையே என்பதில் பேரானந்தம் வரும். இதில் அவளுக்கு 60 வருஷம் சர்வீஸ். ஆராயி எட்டி நடை போட்டாள். அவள் மடியில் இரண்டு மூன்று அழுகல் தக்காளிப் பழங்களும் தலையிலிருந்த பெரிய நார்ப்பெட்டியின் மூலையில் கொஞ்சம் குறுணை அரிசியும் இருந்தது அவளுக்கு அன்றைய இரவை ஒப்பேற்றப் போதுமான தைரியத்தை அளித்திருந்தது. ஊர் விளைந்திருந்தால் கதிரறுப்பிலும் களம் கட்டு கூட்டுவதிலும் கணிசமாக நெல் சேர்த்திருப்பாள். அதுவும் போக வடக்குத் தெரு பிள்ளையார் வீட்டிலும் முஸ்லீம் வீடுகளிலும் அவ்வப்போது ரைஸ் மில்லிலும் அரைக்கும் அரிசியைத் தவிடு புடைப்பதிலும் தினப்படிக்குச் சாப்பாட்டிற்குப் பார்த்துக் கொள்வாள். இந்தக் கொள்ளைப் பஞ்சத்தில் ரைஸ்மில்லே தூங்க ஆரம்பித்து விட்டது. பிள்ளைமார் வீட்டு நெல்லும் மலேயா சவராளிகளான முஸ்லீம்களின் வீடுகளிலும்கூட நெல் கொட்டியிருந்த மரசல்களில் அண்டும் அழுக்கும் தான் மிஞ்சியிருந்தன.

அப்போதுதான் அவள் புதிய வேலை தேடலானாள். மளிகைக் கடை நாடார் கடையில் அரிசி வியாபாரம் அமோகமாக நடந்தது. கிராமத்து ஜனங்களுக்குக்கேற்ற படி கல் நெல் எல்லாம் போக்கிச் சுத்தமான அரிசி போடுவது போல் பாவனை செய்து கொண்டிருந்தார். அங்கே இரண்டு மூன்று சேரிப் பெண்கள் உட்கார்ந்து அரிசி புடைப்பதும் கல் பொறுக்குவதுமான வேலையில் ஈடுபடச்செய்வதை பப்ளிக்காக எல்லோரும் பார்க்கும்படி செய்து வியாபார வேலைகளைக் காட்டிக் கொண்டிருந்தார் மளிகைக் கடைக்காரர். அதிலே ஒருத்தியாக ஆராயியும் ஒண்டிக்கொண்டாள். நடமாட்டமில்லாத கிழவனையும் வைத்துக்கொண்டு ஏதோ அவள்பாடு இந்தப் பஞ்சகாலத்திற்குத் தேவலாம் என்று சொல்லி சேரியிலுள்ள மற்ற பெண்கள் ஆராயிக் கிழவியிடம் லேசாகப் பொறாமை கொண்டிருந்தார்கள் என்பது கூட உண்மைதான்.

ஆனாலும் ஆராயி எப்போதும் வருத்தமாகவே இருப்பாள். வேலை செய்யும் வயசுப்பெண்களைப் போல் அதிகமாக வேலைசெய்ய முடியாததை சொல்லிச்சொல்லி நாளைக்கு வேலைக்கு வரவேண்டாம் என்று ஒவ்வொரு நாளும் மளிகைக்கடைக்காரர் சொல்வதும் மறுநாள் போய் கெஞ்சிக் கூத்தாடி ஒண்டிக்கொள்வதும் அவளுக்கு எப்போதும் ஒரு பயத்தை ஊட்டிக்கொண்டிருந்தது. சாகப் பிழைக்கக்கிடக்கும் கிழவனுக்கு வாயக்கு ருசியாக ஒன்றும் வாங்கிக்கொடுக்க முடியவில்லையே என்று ஆராயி வருந்தினாள். போன மாசம் கால் ரூவாய்க்கு 'தொண்டனும்' சூடை மீனும் வாங்கி ஆக்கிப்போட்டதுதான். கிழவன் அன்றைக்கு சிரித்துக் கிடந்தது போல் என்றைக்கும் இருந்ததில்லை. அப்படி இன்னொரு தடவை வாழை மீனாக வாங்கி ஆக்கிப்போட வேண்டுமென்ற ஆவல் அவளுக்கு மீன் கடைகளைப் பாக்கும்போதெல்லாம் வரும். கிழவனுக்கும் வரவர ரொம்ப முடியாமல் போய்க்கொண்டிருக்கிறது. அவளுக்கு ஒவ்வொரு நாளும் அவன் உயிரோடு படுத்திருப்பது மிகுந்த ஆறுதலாக இருந்தது.

ஆராயி தூரத்தில் வரும்போது கிழவன் கோழிகளைக் கூவிக்கூப்பிடும் குரலைக் கேட்டுக்கொண்டாள். இன்று அவளுக்கு மறுபடியும் ஒரு ஆறுதல். அவன் உயிரோடுதான் இருக்கிறான். கண்டதை நினைத்துக்கொண்டு வரும்பொழுது அசம்பாவிதம் நடவாததுதான் ரொம்ப மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சிதான் அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

கிழவி மெல்ல மெல்ல குடிசைக்குள் வந்தாள். மூன்று கோழிகளும் வந்துவிட்டன. இன்னும் ஒரு விடைக்கோழி வந்து சேரவில்லை. அதற்குத்தான் கிழவன் குரல் கொடுத்துக் கொண்டே படுத்திருந்தான். நார்ப்பெட்டியை இறக்கி ஒரு மூலையில் வைத்துவிட்டு நிமிர்ந்தவளின் மடியை படீரென்று யாரோ சரசரவென்று இழுப்பதுபோல் இருந்தது. இருட்டில் நன்றாகக் கண்ணை இறுக்கிப் பார்த்தாள். அந்த விடலைக் குஞ்சுதான் மடியில் இருந்த அழுகல் தக்காளி பழங்களைக் கீழே தள்ளிவிட்டு ஒன்றைக் கொத்தியெறிய ஆரம்பித்துவிட்டது.

கிழவி அவசரஅவசரமாக மீதிப்பழங்களைப் பொறுக்கி மறுபடியும் மடியில் கட்டிக்கொண்டாள்.

அப்போதுதான் கிழவன் வாயைத் திறந்தான். "சனியன் பகல்பூராவும் இப்படித்தானே அழிம்பு பண்ணுது".

"வெடலைக்கு வீரம் இருக்குமில்ல. உன்னை மாதிரி அது என்ன கெழடா படுத்துக்கிடக்க" என்று சொல்லிவிட்டு, உட்கார்ந்துவிடாமல் குடிசைக்கு வெளியே சேர்த்து வைத்திருந்த காட்டுக்கருவேல முள் விறகைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

கிழவனுக்கு விடலைக் குஞ்சின் மேல் எப்போதும் ஒரு கண் உண்டு. கோழிக்குஞ்சு சாறு குடிச்சு ரொம்ப வருஷங்களாகிவிட்டன. அதிலே அவனுக்கு எப்போதும் ஆசை. உடம்பு மோசமாக ஆக அந்த ஆசை அதிகரித்துக்கொண்டிருந்தது. கிழவி கைகளில் லேசான கீறல்களுடன் கள்ளிகளைப் பொறுக்கிக்கொண்டு உள்ளே வந்தவுடன் கிழவன் மீண்டும் பேச்சுக்கொடுத்தான்.

"அந்த வெடலையைப் புடிச்சு கூடைக்குள்ளே போடு. சனியன் இன்னும் இறக்கையை அடிச்சுகிட்டு மேலே விழுந்துகிட்டு இருக்கு. வேட்டியெல்லாம் சனியனாலே சீலைப்பேன் பத்திருச்சு".

கிழவி காதில் வாங்கிக்கொள்ளாமலேயே அடுத்து குடிசைக்குப்போய் ஒரு எருவாட்டியில் தீயெடுத்துக்கொண்டு வந்து அடுப்பைப்பற்ற வைத்தாள். அரிசியை அள்ளிப்போட்டுவிட்டு, கோழிக்குஞ்சைப் பிடித்து கவிழ்த்திருந்த கூடைக்குள் தள்ளிவிட்டாள்.

கிழவன் பெருமூச்சுவிட்டுக்கொண்டே காறிக் காறித் துப்பிக்கொண்டிருந்தான். அவர்கள் அவ்வளவாகப் பேசிக்கொள்ள மாட்டார்கள். அப்படி அவர்களுக்குள் ஒரு சண்டையுமில்லை. அது அவர்கள் சுபாவம்.

கிழவி அடுப்புக்கு முன்னால் காலை நீட்டி உட்கார்ந்து கொண்டு பானையையும் அடுப்பையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்படி ஒன்றும் அவள் எதைப்பற்றியும் பிரமாதமாக நினைத்துக் கொண்டிருக்கவில்லை. லேசாக எதையோ மனதுக்குள் அசைபோடுகிறாள்.

கூடைக்குள் போன வெடலைக்குஞ்சு படபடவென்று சிறகுகளை அடித்துக்கொண்டு கூடையை முன்னும்பின்னுமாகத் தள்ளிக்கொண்டிருந்தது. படுத்துக்கிடந்த கிழவனால் சும்மா இருக்க முடியவில்லை. என்றைக்கும் இல்லாமல் மறுபடி பேச்சுக்கொடுத்தான். "அழும்பு உள்ளே போயும் ஓயலை. ஒரு நாளைக்கு சூட்டான் போட்டாத்தான் சரி", என்று சூசகமாகக் கிழவிக்குப் புரிந்திருக்கும் என்று நினைத்துச் சொன்னான். கிழவிக்குப் புரியவில்லையோ, காதில் விழவில்லையோ என்னவோ, கிழவி பேசாமல் அடுப்பையே பார்த்துக்கொண்டிருந்தாள். கிழவன் ஒரு முறை திரும்பிப்பார்த்துவிட்டு உரக்க இருமி ஒருமுறைத் துப்பினான்.

கஞ்சியைக் குடித்துவிட்டுப் படுத்துக்கொண்ட கிழவனும் கிழவியும் அதற்குப் பிறகு பேசிக்கொள்ளவேயில்லை. படுக்கும்போது கிழவிக்கு மளிகைக்காரர் சொன்னது திடீரென்று ஞாபகத்திற்கு வரவே சற்று பயந்துபோய் பெருமூச்சு விட்டுக்கொண்டாள். வயசுப் பெண்கள் மாதிரி தன்னால் அதிகமாகப் புடைத்தெடுக்க முடியாததை குறைசொல்லி நாளைக்கு நீ வேலைக்கு வர வேண்டாம் என்று முன் எப்போதும் இல்லாத கண்டிப்புடன் மளிகைக்கடைக்காரர் சொல்லியிருந்தார்.

நாளைக்கு நிஜமாகவே வரவேண்டாம் என்றால் எங்கே போவது என்ற வருத்தமும் கூடவே தன் மனம் எப்போதும் அப்படித்தான் நினைக்கும். ஆனால் அப்படி நடக்காது என்று வேண்டுமென்றே அதிகமாகக் கவலைப்பட்டாள். அப்படி அவள் அதிகமாகக் கவலைப்பட விஷயங்களெல்லாம் கடைசியில் சுமுகமாக நடந்தேறியிருப்பதாலேயே அப்படிக்கவலைப்பட ஆரம்பித்து நடுச்சாமத்தில் ஒப்பாரிகூடவைத்தாள்.

காலையில் வேலைக்குப் போன கிழவி மத்தியான வெயிலோடு குடிசைக்குத் திரும்பிவிட்டாள். அவள் அழுததெல்லாம் வீண். நிஜமாகவே கடைக்காரர் வேலைக்கு வைத்துக்கொள்ள மறுத்து கழுத்தைப்பிடித்துத் தள்ளிவிட்டார்.

அன்று இரவு இரண்டு கிழங்களும் வெம்பட்டினி கிடந்தன. கிழவி அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாயிருந்தாள். வெள்ளையன் மட்டும் பெரிய தைரியசாலி போல் அடிக்கொருதரம் இருமுவதும் சளியைத் துப்புவதுமாய் இரவைப் போக்கினான்.
காலையில் கூவுகின்ற கோழிகள் வழக்கமாய்க் கூவினாலும் கிழவி மனதில் ஒரு நம்பிக்கையை ஊட்டின அந்தக் கூவல்கள். எழுந்துபோய் ரோடு

( 23 பக்கம் பார்க்கவும் )


# Kumaran's Video Store




Audio Duplication 50 Cents
Video Duplication $2.99
Long Distance Phone Cards 20% Off
Audio CD all new $1.49
VHS<>DVD
VIDEO<>DVD
DVD<>DVD
PAL<>NTSC

We Also Have Devotional Songs, Tamil, Malayalam & Hindi Audio & CDs

உங்கள் அனைத்துவிதமான ஒலி-ஒளி நாடாக்கள், CDs, DVDs DVD ல் பதிவு செய்துகொள்ள எங்களை நாடுங்கள்

We are Open 7 Days!

2085 Eglinton Ave East, Scarborough, On.

Tel: 416 264 4254 Fax: 416 264 3195


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4வது ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு - 21-2-1966
உருத்திரபுரம்

உதிர்வு - 28-09-2000
ரொறன்ரோ

## ரூபன் ஒரு நினைவுப் பொறி

## அமரர் தியாகரூபன் தியாகராஜா

அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும் தியாகத்திற்கும்
இலக்கணமாக வந்துதித்த ஜோதியே!

அணையா விளக்காக எம் அனைவர் உள்ளத்திலும்
தீபச் சுடராக சுடர்விடும் ஒளியே!

மண்ணில் மட்டுமின்றி விண்ணிலும்
பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரமே!

என்றென்றும் எம்முள் பிரகாசித்துக் கொண்டிருக்கும்
அற்புத அகல் விளக்கே!

நாம் உன்னை மறந்தால் தானே நினைப்பதற்கு.
உன் நினைவன்றி வேறொன்றும் யானறியேன்
என் குலக் கொழுந்தே!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

பாசம்மிக்க: அம்மா தங்கமலர், அப்பா தியாகராஜா, தம்பி சொரூபன், அக்காமார் ஜெயா வதனி, தங்கை வதனி
மனைவி [illegible] பிள்ளைகள் நிவேதன்இ நிசாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 11 ம் பக்கத் தொடர்ச்சி ) நேர்காணல்...

வரைந்த ஓவியங்கள் அதிகம். பல்வேறு கால கட்டங்களில் அவை வெளிப்படையாகவே பதிவாகியிருக்கிறது. அதில கோபமும் நையாண்டியும் கூட இருந்திருக்கிறது. நேரடியாக சாடுவதற்கு சில நேரங்களில் கேலிச் சித்திரமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறேன்.

**உங்களுடைய கலைக்கான அரசியல் என்று எதனைக் கருதுகிறீர்கள்?**

40 களில் இலங்கையிலிருந்து தலைமறைவு வாழ்வுக்காக தப்பி வந்த ட்ராஸ்கிய வாதிகளான என். எம். பெரேரா, கொல்வின், ஆர். டி. சில்வா போன்றவர்களுக்கு ஆதரவாக மதுரையில் என் தந்தை மிகச் சிறிய வயதிலேயே இயங்கியவர். இவர்களுடன் ஏற்பட்ட ஈடுபாடுதான் அப்பாவை ஒரு கம்யூனிஸ்டு ஆக்கியது. இதன் காரணம் தான் பின் நாளில் நான் பிறந்தபோது எனக்கு டிராட்ஸ்கி எனப் பெயர் வைத்ததும். ஆனால் நான் இதுவரையில் எந்தக் கட்சியுடனும் என்னை அடையாளப்படுத்திக் கொண்டதில்லை. 67 இல் □ந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது நான் எட்டாவது படிக்கும் மாணவன். அந்த வயதிலேயே 500 தட்டிகள் வரை வரைந்திருக்கிறேன். 20 அடிக்கு 15 அடி என்ற பெரிய சுவர்களிலெல்லாம் ஷிந்தி எதிர்ப்பு கார்ட்டூன்கள் போட்டியிருக்கிறேன். பெரிய வெளிகளைக் கையாளும் பயம் எனக்கு இல்லாமல் போனது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான், அன்றிலிருந்து இன்றுவரை சரியான விடயத்துக்காக யாரெல்லாம் குரல் கொடுக்கிறார்களோ – அது எந்த அமைப்பாக இருந்தாலும் - அங்கெல்லாம் ஒரு ஓவியனாக என்பங்களிப்பைச் செய்து கொண்டுதான் இருக்கிறேன். இந்த வகையில் சமகால ஈழவிடுதலைப் போராட்டத்தில் உணர்வு ரீதியாய் ஒரு ஓவியனாக இணைந்து என் பங்களிப்பை வழங்கியிருக்கிறேன். இதில் எனக்கு அற்புதமான நண்பர்கள் கிடைத்தார்கள். புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள், நாடக கலைஞர்கள், ஈழத்து எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்று பல தரப்பட்ட நண்பர்களுடன் கிடைத்த தொடர்பை அவர்களுடன் பகிர்ந்து கொண்டதை என் ஓவிய வாழ்வில் முக்கியமானதாயே கருதுகின்றேன்

.

**தொடர்பு முகவரி**

**எம். டிராட்ஸ்கி மருது**

**இலக்கம் 3 – D, பழைய டவர் புளொக்**

**நந்தனம் விரிவாக்கம் 3வது தெரு**

**நந்தனம்**

**சென்னை 35**

**தமிழ்நாடு, இந்தியா**





**டிராட்ஸ்கி மருதுவின் ஓவியங்கள்**

( 16ம் பக்கத் தொடர்ச்சி )வாடைக்...

ஏற்றிய வள்ளம் கடலுள் கரைவலையைப் படுத்தபடி விரைவாகச் செல்வதைக் கண்டபின் என்ன நடக்கிறதென்பது அவர்களுக்குப் புரிந்தது.

'விசரன்கள்...! படு விசரன்கள்....! புயலடிக்கப் போகுது.. கடலுக்கை போறாங்கள். கடலோடு போகப் போறாங்கள்...' என்றான் செபஸ்தியான். குடிவெறியில் அவனுக்கு வார்த்தைகள் தடுமாறின.



எவருமே கடலில் இறங்கத் தயங்கும் வேளையில் மரியதாஸ் கரைவலை வளைக்கின்ற செய்தி யூசுப்பரின் வாடிக்கும் பரவி விட்டது. மரியதாசின் வாடியின் முன் பலர் வேடிக்கை பார்ப்பவர்களாகக் கூடி விட்டனர். இடையிடையே கடலின் நீர்ப் போர்வையைக் கிழித்தபடி சுறா ஒன்று மேலெழுந்தது.

ஒரு மணி நேரத்துள் கரைவலை குதிரை லாடமாக வளைக்கப்பட்டது.

தோணி கரையை அடைந்ததும் மரியதாஸ் தோணியில் ஏறிக்கொண்டான். கரைவலையின் மிதப்புக் கட்டைக் கயிற்றைப் பற்றி வலித்தவாறு மடியை நோக்கி வேகமாக விரைந்து சென்றான். மின்னலென எழுந்த சிறு சுறாவொன்று அணியத்தில் படுத்திருந்த அவனுக்கு மேலாகத் துள்ளிப் பாய்ந்தது. மடியின் மேல்வட்டக் கயிற்றில் தோணியைப் பிணைத்து விட்டு எழுந்து நின்ற மரியதாஸ் வலிக்குமாறு சைகை காட்டினான். அம்பாச்சொல்லி வலை வலிபடத் தொடங்கியது.

சற்று நேரம் சென்றது. மரியதாஸ் 'கூய்..' என்று குரல் கொடுத்தான், கரையில் இருந்தும் ஆரவார ஒலி எழுந்தது. வலிக்கும் கரங்களில் வலு ஏறியது. 'ஏலேலோ தையதா' என்ற ஒலி தாள லயத்தோடு எழுந்தது.

புதியதொரு பிரச்சினை எழுந்தது. கரைவலையில் பரப்புச் சுருங்கச் சுருங்க அந்தப் பரப்புள் சிறைப்பட்ட இரு பால் சுறாக்கள் நன்கு தென்பட்டன. அவை வலைப்பரப்பிலிருந்து விடுபட்டு வெளியேறும் நோக்கத்தோடு கரைவலையின் மடியை நோக்கி விரைந்து செல்கின்றன. அவை செல்லும் வேகத்தில் மடியில் மோதினால் மடி பிளந்து போகும் அபாயத்தை மரியதாஸ் உணர்ந்தான். எனவே, அவை வேகமாக மடியை நோக்கி வரும்போது தோணியை வலிக்கும் சவளைப் பற்றியவாறு அதைக் குத்தாக வீசினான். அதைக் கண்டு திகைத்த சுறாக்கள் வந்த வழியே திரும்பிச் சென்றன.

கரைவலை வலிப்பது சற்றுக் கடினமாகியது. கடல் அலைகள் மெதுவாகப் பொங்கத் தொடங்கியது. மரியதாஸ் நிலைமையை ஓரளவு புரிந்து கொண்டான். 'இன்னும் ஒரு பதினைந்து நிமிடங்கள் அவகாசம் கிடைத்தால் போதும்....' என அவன் எண்ணினான்.

'சுறுக்கா வலியுங்கடா...' என்று குரல் கொடுத்து விட்டு மடியில் பிணைத்திருந்த தோணியை அவிழ்த்து, மிதப்புக் கயிற்றைப் பற்றி வேகமாக வலித்தவாறு மரியதாஸ் கரையை அடைந்தான். அவன் கரையை அடையும் நேரம் காற்றும் இரைந்தபடி விரைந்து வந்தது. மழைத்துளிகள் சலசலத்து ஊசிகளாக விழுந்தன. கரை வலை போட்டோர் நெஞ்சுறுதியோடு வலித்தனர். யூசுப் சம்மாட்டியின் ஆட்களும் கை கொடுத்தனர்.

காற்றும், மழையும் முழு மூச்சுடன் ஆரம்பிக்க கரைவலையும் ஒருவாறு கரையில் இழுத்துப் போடப்பட்டது. எல்லோரது கண்களும் வலை மடியையே பார்த்த வண்ணமிருந்தன. வியப்பு.... பொறாமை....அவற்றில் பளிச்சிட்டன.

வலையில் இரண்டு சுறாக்கள் மடிக்குள் சிக்குண்டு கடைசி மூச்சை விடத் துடித்தன. ஒவ்வொன்றும் ஆறடி நீளமானவை. அவற்றோடு பல்வகை மீன்களும் நிறைந்து மடி உப்பிக் கிடந்தது. சுறாக்களின் தாக்குதலால் மடி இரண்டு, மூன்றிடங்களில் பிய்ந்து போயிருந்தது. கரையை அண்மித்து நிகழ்ந்ததால் அதிக சேதம் ஏற்படவில்லை என மரியதாஸ் எண்ணினான்.

'இப்படியும் ஒரு கொள்ளையோ....?' என்று செபஸ்தியான் முணுமுணுத்தான்.

'பேசாலையானுக்கு அதிர்ஷ்டம் விளையாடுது....' என்றான் இன்னொருவன்.

மரியதாசின் முகத்தில் வெற்றிப் பெருமிதம் நிலவியது. இரைச்சலோடு வீசும் காற்று அவன் தலை மயிரைப் பறக்க வைத்தது.

மரியதாசின் பக்கத்தில் நின்ற மன்றாடி இராமசாமிக்கு திடீரெனத் துணிவு ஏற்பட்டது.

'கடலுக்குப் போகப் பயந்தவர்கள் ஏன் தொழில் செய்ய வந்திட்டான்கள்...?' என்றான் செமியோனின் வாடியை நோக்கி, இந்த வார்த்தைகள் பேதுருவின் காதுகளில் மோதியபோது, அவன் முகத்தில் சினம் பொங்கியது.

'டேய்.. என்னடா சொன்னாய்....? ' என்றபடி இராமசாமியின் மீது பாய்ந்தான் பேதுரு.

---

செமியோன் வாடியை நோக்கி ஓடி வந்தான். கடற்கரை போர்க்கோலம் பூண்டிருந்தது. ஒருபக்கம் செமியோனின் ஆட்கள் கையில் ஆயுதங்களுடன் நின்றனர். மறு பக்கம் மரியதாசின் ஆட்கள், அவர்களிடையே மரியதாசும் நின்றிருந்தான். இருபுறத்தாருக்கும் நல்ல மது வெறி.

'டேய் ராமசாமி, நீ என்னிலே கை வைச்சிட்டாய். இனி உன்னை உசிரோடை விடமாட்டன்.... மச்சான் செபஸ்தி, விடடா என்னை....' என்று கத்தினான் பேதுரு. அவனை விடாது செபஸ்தியான் இழுத்துப் பிடித்தான்.

' என்ரை ஆக்களிலை கை வைச்சால் சுட்டுப் பொசுக்கிடுவன்..' என்றான் மரியதாஸ். பொறுப்புள்ள ஒரு முதலாளியாக அவன் பேசவில்லை எனச் செமியோன் எண்ணினான். செமியோனைக் கண்டதும் மரியதாஸ் ஒருபடி அதிகமாகத் துள்ளினான்.

'உம்முடைய ஆக்களை நீர் கட்டுப்படுத்தி வைக்க வேணும்..... இல்லாவிட்டால் நான் நல்லவனாக இருக்க மாட்டன்....' என்றான் மரியதாஸ். அவன் கூறியது செமியோனுக்குப் பிடிக்கவில்லை.

'ஏன் நீர் எங்கடை மசிரைப் பிடுங்கி விடுவீரோ?.....' என்று உறுமினான் செபஸ்தியான். செபஸ்தியானை மேற்கொண்டு பேசவிடாது செமியோன் அமர்த்தினான்.

' இங்கே இப்ப என்னதான் நடந்தது.......?' என்று கேட்டான் செமியோன்.

'பேதுரு அண்ணர் கொஞ்சம் கூடுதலாகப் போட்டிட்டார்...... வாடிக்கு முன் நிண்டு கொண்டு தன்ரை பாட்டிற்குப் பாட்டுப் பாடினார். அப்ப வெளியிலே வந்த ராமசாமி, தயடா என்றான் ..... பிறகென்ன.......? அவர்கள் எல்லாரும் சேர்ந்து பேதுருவை அடிச்சுப் போட்டான்கள்...... நாங்கள.......விடுகிறதோ.....?' என்றான் செபஸ்தியான்.

செமியோன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். இத்தகைய சச்சரவுகள் சகஜமானவைதான். ஆனால் சம்மாட்டிகள் பொறுப்போடு நடந்து கொள்ளா விடில் பெரும் பிரச்சினை உருவாகி விடும்.

அப்புறத்தில் இருந்து மரியதாஸ் ஏசினான்:

'இவங்களுக்குப் பாடம் படிப்பிக்கிற மாதிரிப் படிப்பிப்பன்.....'

( தொடர்ச்சி அடுத்த வாரம் )

( 17 ம் பக்கத் தொடர்ச்சி ) விருது..

('சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு' என்ற தலைப்பில் 780 பக்கங்களில் இவர் எழுதிய புத்தகம் தமிழக அரசின் ஆதரவுடன் விரைவில் வெளியாகவிருக்கிறது).

பல கட்டங்களில் மாநிலக் கட்சிகள் மத்தியில் செல்வாக்குடன் இருந்தபோதும், சிறந்த நடிகர் விருதை சிவாஜிக்கு அழுத்தமாகப் பரிந்துரைத்து வெற்றிகரமாக வாங்கித் தருவதற்கு யாரும் முனையவில்லை. சிவாஜியும் அரசியலில் இருந்தது அதற்குக் காரணமாக இருக்கலாம்.

தங்கள் கட்சியில் இருக்கிறார், இருந்தார் என்பதற்காக இல்லாவிட்டாலும் தலைசிறந்த ஒரு தமிழ்நாட்டுக் கலைஞர் புறக்கணிக்கப்படுகிறார் என்ற அடிப்படையிலாவது காங்கிரஸ்காரர்கள் குரல் கொடுத்திருக்கலாம். 'தேசியப் பார்வை' கொண்டவர்களாயிற்றே.... தமிழகம் கண்ணுக்குத் தெரியாமல் போய்விட்டது.

'கலை கலைக்காகவே' என்ற கோஷத்தை முன்னிறுத்தும் அணியை எதிர்த்து, 'கலை மக்களுக்காகவே' என்ற கோஷத்தை முன்வைத்த இடதுசாரிகள், மக்கள் கலைஞனாக இருந்த சிவாஜியை ஒரு காலகட்டம் வரை பெரிதாகப் பொருட்படுத்தியதே இல்லை. பின்னாளிலும்கூட தங்கள் தளங்களில் சிவாஜியை ஒரு தலைசிறந்த கலைஞனாக அடையாளப்படுத்தியதும் கிடையாது.

இடதுசாரிகளும் சரி, அவர்களுடன் முரண்படும் இதர அறிவுஜீவிகளும் சரி சினிமா என்றாலே அகிரா குரோசேவாவில் ஆரம்பித்து, பெங்காலில் சத்யஜித் ரே வழியாக வந்து, கேரளத்தில ஓரிரு பெயர்களைச் சொலவ்லி





முடித்துக்கொள்வது வாடிக்கையாக இருந்தது. இப்போது கொஞ்சம் மாறியிருப்பது போலத் தெரிகிறது.

விருதுகளைப் பொருத்தமட்டில், சினிமாவிலிருந்து இலக்கியம் வரை பல நேரங்களில் தகுதியானவர்கள் பெற்றதை விடத் தகுதிக்கு அப்பாற்பட்டவர்கள் விரட்டிப் பிடித்ததும் நடந்திருக்கிறது. இருந்தாலும் தகுதியானவர்களுக்கு மிகத் தாமதமாகவேனும் கிடைக்க வாய்ப்புண்டு. ஆனால் அரை நூற்றாண்டுக் காலம் தமிழ் சினிமாவில் ஆதிக்கம் செலுத்திய, மண் வாசனையுடன் நடிப்பில் பன்முகப் பரிமாணத்தைக் காட்டிய சிவாஜிக்கு அந்த வாய்ப்பும் கிட்டாமல் போனது தமிழிக - இந்திய சினிமாவின் மனசாட்சியை உலுக்கும் கேள்வியாகவே என்றும் இருக்கும். சிவாஜிக்கே உரிய காலத்தில் கிடைக்காத கௌரவத்தை 25 படங்களைக்கூடத் தாண்டாத விக்ரம் பெற்றிருக்கிறார். 'பிதாமகன்' விக்ரம் அதற்கு முற்றிலும் தகுதியுடையவர் என்பதில் சந்தேகமில்லை.

சிவாஜி சொன்னது போல, விக்ரம் இந்த விருதைக் கொண்டாடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 15ம் பக்கத் தொடர்ச்சி )கரம் மேல் எடுத்தால் அதற்குப் பிறகு ராணிக்கு மதிப்பு கிடையாது! அதாவது பாயிண்ட்டுகள் எடுத்தவருக்கு ராணியை (ஃபாலோவுடன்) போட்டதற்காக ஸ்பெ'லாக அதிகப்படியாக மூன்று பாயிண்ட்டுகள் கிடையாது!

9. ஒரே அடியில் சிவப்புக் காய் மற்றும் என்னுடைய காய் இரண்டும் குழியில் விழுந்துவிட்டன. அப்படியானால் நான் ஃபாலோ போட்டுவிட்டதாக அர்த்தமா?

ஆமாம். மறுபடி ஒரு காயை குழியில் போடவேண்டும் என்கிற அவசியமில்லை.

10. அந்த இரண்டு காய்களும் குழியில் விழும்போது முதலில் என் காயும் அதை தொடர்ந்து சிவப்புக் காயும் விழுந்திருந்தால்?

எந்த வரிசையிலும் அவை விழுந்திருக்கலாம். வெவ்வேறு குழிகளிலும் விழுந்திருக்கலாம். ஒரே அடியில் அவை இரண்டும் விழுந்திருந்தால் சிவப்புக்கு ஃபாலோ போட்டுவிட்டதாகத்தான் பொருள்.

11. நான் யோசித்து விளையாட கொஞ்சம்நேரம் எடுத்துக்கொண்டால் எதிராளி அது கூடாது என்கிறான். இது நியாயமா?

செஸ் ஆட்டத்தில் வேண்டுமானால் ஒரு மூவ் செய்ய அதிக நேரம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், கேரம் விளையாட்டில் ஸ்டிரைக்கர் உங்கள் கைக்கு வந்த பதினைந்து நொடிகளுக்குள் நீங்கள் ஆடிவிட வேண்டும். இல்லையென்றால், அந்த சுற்றில் உங்கள் சான்ஸ் அவுட் என்றுதான் அர்த்தம். அடுத்தவரிடம் ஸ்டிரைக்கரைக் கொடுத்துவிட வேண்டியதுதான்!

12. சிலர் ஆடும்போது ஆடுகிற கோணத்துக்குத் தகுந்தவகையில் உடலை நகர்த்திக்கொண்டெல்லாம் ஆடுவார்கள். இது சரியா?

இடுப்புக்கு மேலே உள்ள பகுதியை எப்படி வேண்டுமானாலும் வளைத்துக் கொள்ள அனுமதி உண்டு. ஆனால் மொத்த உடலையும் நகர்த்திக்கொண்டு ஆட அனுமதி இல்லை.

13. ஆடும்போது கை லேசாக அசைந்து, ஸ்டிரைக்கரும் கொஞ்சம் நகர்ந்து விடுகிறது. அப்போது மறு ஆட்டம் ஆடலாமா?

ஆடலாம், இரண்டு சூழல்களில் மட்டும். அப்படி ஸ்டிரைக்கர் லேசாக நகர்ந்தபோது எந்தக் காயும் லேசாகக்கூட அசைந்திருக்கக்கூடாது. தவிர, ஸ்டிரைக்கரை வைத்துக்கொள்ளும் இரண்டு கோடுகளில் ஒன்றைக் கூட ஸ்டிரைக்கர் தாண்டியிருக்கக் கூடாது.

14. தம்பிங் என்பது அழுகுணி ஆட்டம்தானே? குழந்தைகள் மட்டும்தானே தம்பிங் ஆடலாம்? யார் சொன்னது? உலக அளவில் ஆடும் கேரம் போர்டில்கூட தம்பிங்குக்கு தாராளமாக அனுமதி உண்டு.

15. போர்டில் சிவப்புக் காய், என்னுடைய வெள்ளைக் காய், எதிராளியின் கறுப்புக் காய் ஆகிய மூன்றுதான் உள்ளன. இந்நிலையில் சிவப்புக் காய் அடிக்கும்போது அது குழியில் விழாமல் எதிர்பாராத விதத்தில் என் வெள்ளைக் காய் குழியில் விழுந்துவிட்டால் என்ன செய்யலாம்?

ஒன்றும் செய்ய முடியாது.அந்த போர்டு அதோடு முடிவடைந்ததாகத்தான் அர்த்தம். எதிரணிக்கு (அல்லது எதிராளிக்கு) மூன்று பாயிண்ட்டுகள் கிடைக்கும்.

16. மேலே சொன்ன அதே சூழலில் சிவப்புக் காயை சரியாகப் போட்டுவிடுகிறேன். ஆனால், அதற்கு ஃபாலோவாக என் காயைக் குறிவைத்து அடிக்கும்போது எதிர்பாராதவிதமாக ஸ்டிரைக்கர் நகர்ந்து எதிராளியின் காயைக் குழிக்குள் போட்டு விட்டால்?

அப்போது எதிரணிக்கு நான்கு பாயிண்ட்டுகள் கிடைக்கும்.

17. தேசிய அளவிலான போட்டிகளில் கட்டைவிரலுடன் ஆள்காட்டி விரலை இணைத்துதான் ஆடவேண்டுமா?

அப்படிப்பழகிக்கொண்டால் விளையாட்டின் துல்லியம் அதிகமிருக்கும். மற்றபடி அந்த இரு விரல்களைக் கொண்டுதான் ஸ்டிரைக் செய்ய வேண்டும் என்பது கிடையாது.

18. பெரிய அளவில் நடத்தப்படும் போட்டிகளில் ஒரு ஆட்டத்தில் பாயிண்ட்டுகள் குறைவாக எடுப்பதைத் தவிர வேறு எப்படியாவது தோற்க முடியுமா?

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்ளும்போது புகைபிடிக்க அனுமதி கிடையாது. நடுவர் மற்றும் எதிராளியின் அனுமதியின்றி வெளியே சென்று வரக்கூடாது. இவற்றை மீறினால் நீங்கள் ஆட்டம் இழந்ததாக நடுவர் தீர்ப்பு கூறிவிடுவார். அவ்வளவு ஏன்... பாதி விளையாட்டின்போது எழுந்து சில நொடிகள் நிற்பதற்குக்கூட நடுவரின் அனுமதி தேவை!

முனையில் நின்று கொண்டு கீழக்கரைக்குப்



போகும் சாலையையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப்பக்கத்திலேயே அதிகமாகப் பணம் புழங்குமிடம் கீழக்கரைதான். அங்கேயுள்ள முஸ்லீம் பணக்காரர்களுக்கு இந்தச்சாலை வழியாகத் தினமும் கோழிகளை வாங்கிக்கொண்டு செல்லும் வியாபாரிகள் செல்வார்கள்.

அவர்களிடம் கோழிகளை விற்றால் நல்ல விலைக்குப்போகும் என்று நினைத்து வியாபாரியைத் தேடியே அவள் நின்றுகொண்டிருந்தாள். கடைசியாக ஒரு வியாபாரியோடு அவள் சேரிக்குள் நுழையும் பொழுது நன்றாக விடிந்துவிட்டது.

கிழவி கோழி வியாபாரியோடுதான் வருவாள் என்பதை உள்ளே படுத்திருந்த கிழவன் அறிந்துகொண்டான். கிழவி எல்லாக் கோழிகளையும் விலைக்கு விற்றுவிடப்போகிறாள் என்று தெரிந்துவிட்டது அவனுக்கு. மெல்லப் படுக்கையிலிருந்து எழுந்து நகர்ந்து நகர்ந்து போய் அந்தக்கூடையைக் கிளப்பினான். அவன் எதிர்பார்த்தபடியே வெடலைக்குஞ்சு மட்டும் இறக்கையைப் படபடவென்று அடித்துக்கொண்டு வெளியே ஓடியது. இரண்டு கோழிகளும் பதுங்கிப் பதுங்கி வெளிவே வருவதற்குள் அவைகளை உள்ளே தள்ளிக் கூடையை மூடிவிட்டு வந்து படுத்துக்கொண்டான்.

கிழவி வியாபாரியோடு சேரிக்குள் நுழையும் போதே வெடலை வெளியே வந்து மேய்வதைப்பார்த்துவிட்டாள். வெடலையைப் பிடிக்க அவளும் வியாபாரியும் படாதபாடு பட்டார்கள். கடைசியாக மற்றக்கோழிகளைக் கிழவன் எங்கே விட்டான் என்பதை அறிந்துகொள்ள குடிசைக்குள் வந்தவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

இரண்டு கோழிகளும் கூடைக்குள்ளேயே கிடப்பதைப்பார்த்துவிட்டு கேட்டாள்.

''இது என்ன மூடினது மூடினபடி இருக்க மூஞ்சுறு எப்படி வெளியே போச்சு?''

கிழவனுக்கு உள்ளுக்குள் உதைப்பு இருந்தாலும் அலட்சியமாகச் சொன்னான் ''சனியன் படபடவென்று அடிச்சுக்கிட்டு தூங்க விடலை. தொலைஞ்சு போன்னு நான் தான் வெளியே பத்திவிட்டேன்''.

அப்புறம் கிழவி பேசவில்லை. அதுவும் சரிதான். அப்புறம் ஒரு நாளைக்கு அது உதவும் என்று நினைத்துக்கொண்டாள். இரண்டு கோழிகளையும் விலைபேசிப் பிடித்துக்கொடுத்துவிட்டு நார்ப்பெட்டியும் முறமுமாய் வெளியே புறப்பட்டாள்.

கிழவன் புரிந்துகொண்டான். கிழவி வெளியே கிளம்புகிறாள்.

வருவாள் யாரிடமாவது வேலையும் கேட்டு அதையும் பார்ப்பாள். இன்று அரிசி வருவதற்குள் குஞ்சை அடித்துப்போட்டுவிட வேண்டுமென்று நினைத்தான். அந்த நினைவு வந்த மாத்திரத்தில் அவன் வேறு ஆளாகி விட்டான். நெஞ்செல்லாம் எச்சில் வழிந்தோடியது. மெல்ல நகர்ந்து வந்து வெடலைக்குக் குரல் கொடுத்தான்.

குடிசைக்கு வெளியே கிடந்த கற்களைப் பொறுக்கி வைத்துக்கொண்டான். வெகு நேரம் குரல் கொடுத்தும் வரவில்லை. கடைசியாக அது வந்தது. எதையோ கொத்திக்கொண்டும் இங்கும் அங்கும் எதையோ கா்வா் செய்வது போலவும் வந்தது. கிழவனுக்கு வேகம் வந்துவிட்டது. வலது கையில் வாதமில்லை, கற்களை எடுத்துக் குறி பார்த்தான். ஒன்று இரண்டென்று கற்கள் சிதறின. குறி தப்பிக்கொண்டேயிருந்தது. அவனுக்குப் பதட்டம் அதிகமாகிவிட்டது. சற்றுப் பதறினான். நல்ல வேளை, அவன் தன் வீட்டுக்குஞ்சைக் குறிபார்க்கும் இந்தக்காட்சியைக் காணச் சுற்றிலும் யாருமில்லை.

நன்றாகச் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டுக் கடைசிக் கல்லைத் தன் பலங்கொண்ட மட்டும் வேகமாக வீசினான். வீசினவன் விழுந்தான். வேகத்தோடு உயிரையும் அப்படி வீசியிருக்கக்கூடாது.

ஊா் கூடியது. கிழவி மாா்பில் அடித்துக்கொண்டு புலம்பினாள். நீட்ட நீட்டமாய் பச்சைக்கம்புகள் வந்தன. கிழவனைப் பாடையிலேற்றி நான்கு

பேர் தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள். ஒரு வயதான ஆள் சொன்னார்.

''இது என்ன மடத்தனமாயிருக்கு? சேரியிலே மத்தவ எல்லாம் இருக்கிறதா கிழவனோடேயே போறதா? சனிக்கிழமை செத்தவன் தனியாப் போவானா? யாரைக்காவு கொடுக்கபோறீக? ஆராயிட்ட கேட்டு அவ வீட்ல சின்ன வெடலைக் குஞ்சைப் பிடிச்சுக் கட்டுங்கடா பாடையிலே''.

ஆங்காங்கே தேடி ஒரு வழியாக அந்த வெடலைக் குஞ்சைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். ஒருவர் அதை வாங்கிக் கழுத்தைப் பிடித்துக்கொண்டு ஒருமுறை சுற்றிவிட்டார். சொடக்கென்று ஒரு சப்தம் எல்லார் காதிலும் விழுந்தது. அப்புறம் அவர்கள் பார்த்தது ஒரு பாடையில் அவர்களுக்குத் தெரிந்த வாத நோயால் செத்துப்போன வெள்ளைக் கிழவன் பிணத்தையும் பிணத்தின் காலடியிருந்து ஒரு அரை அடி தூரத்திலேயே அவனைப் போல் பிணமான வெடலைக்குஞ்சு ஒன்று தலைகீழாகத் தொங்கிக்கொண்டு சேரியின் தெற்கு மூலையை அடைந்ததையும் தான்.



# தென் இலங்கை கவிதை நூல் வெளியிடப்படுகின்றது



சோ.ப என்று இலக்கிய உலகிற்கு அறியப்பட்ட சோ.பத்மநாதன் தமிழில் மொழிபெயர்த்த தென் இலங்கை கவிதை நூல் ரொறன்டோவில் வெளியிட்டு வைக்கப்படுகின்றது. ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமாய் எழுதப்பட்ட தென்னிலங்கைக் கவிஞர்களின் 33 கவிதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

செப்டம்பர் 19 (ஞாயிற்றுக் கிழமை) மாலை 6 மணிக்கு Scarborough Civic center ல் இந் நிகழ்சி நடைபெறுகின்றது.

ஏற்கனவே சோ.ப, வடக்கிருத்தல், ஆப்பிரிக்க கவிதை போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் ஈழத்தமிழர்களுடைய எழுத்துக்களை ஆங்கில மூலம் உலகறியச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

நிகழ்சி பற்றிய தொடர்புகளுக்கு:

நந்தா கந்தசாமி- (416)- 425 6724

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதினுள் பாயும் நஞ்சு

பொ.ஐங்கரநேசன்

ஒன்றையொன்று முந்தித் தள்ளியவாறு விரைந்து கொண்டிருக்கும் வாகனங்களின் உறுமல்கள் , இடை விடாது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற் சாலை இயந்திரங்களின் கர்ண கடூர இரைச்சல்கள் , ஒலிபெருக்கிகளின் கதறல்கள் என்று வீதிகளை நிரப்பிக் கொண்டு பாயும் சத்த வெள்ளம் - இப்போது உச்ச ஸ்தாயியில் அலறித் தீர்க்கும் வானொலி , தொலைக்காட்சி அலைவரிசைகள் , சமையல் அறையில் அரவை இயந்திரங்கள் மூலம் வீடுகளினுள்ளும் நுழைந்துவிட்டது.

எம்மை அறியாமலேயே இந்த ஒலி வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் நாம் இரைச்சல்களை வெறும் தொந்தரவு மட்டும் தான் என்ற எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் , ஒலிச்சூழல் சீர்கேடுகள் தொடர்பான அண்மைக் கால ஆராய்ச்சி முடிவுகளோ செவிப்பறையில் ஓங்கி அறைவதைப் போன்ற உக்கிரத்துடனேயே வெளியாகியுள்ளன. எதிரிபார்த்ததற்கும் மேலாக இரைச்சல்களால் எமது மனமும் உடலும் மோசமாக பாதிக்கப்படுவது பற்றி இப்போது தெரியவந்துள்ளது.

டாக்டர் ஜோன்சன் என்பவர் லக்சம்பர்க்கில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பல்வேறு ஒலிச்சூழல்களில் பணிபுரிய வைத்து ஆராய்ந்து பார்த்தார். முடிவுகள் திடுக்கிட வைத்தன. ஒலி அதிகமான சூழலில் பணி புரிந்தவர்கள் கொடுமை நிறைந்தவர்களாகவும் ஆதிக்க மனப்பான்மை கொண்டவர்களாகவும் பீதி உணர்வைக் கொண்டவர்களாகவும் மாறி விடுவதை அந்த ஆய்வுகள் சுட்டிக் காட்டின.

டாக்டர் மாகெரி என்பவர் இத்தாலியில் பல்கலைக்கழக மாணவர்களை வைத்து ஒரு சோதனை நடத்தினார். பல்கலைக்கழகத்தின் மிகச் சிறந்த மாணவர்கள் எண்பது பேரைத்



தேர்ந்தெடுத்து தொழிற்சாலை ஒன்றின் சந்தடிமிக்க சூழலில் வினாக்களுக்கு விடையளிக்க வைத்தார். எண்பது பேருமே படிப்பில் ஜாம்பவான்கள் தான். ஆனால் இரைச்சலின் அளவு அதிகரிக்க அதிகரிக்க இவர்கள் செய்யும் தவறுகளும் அதிகமாகிக் கொண்டே சென்றன.

அதிக ஒலிகளுக்கு இடையில் மனிதர்கள் வாழ நேரிடும் போது அவர்கள் நிறக்குருடர்களாகி விடுவார்கள் என்பதைப் பிரான்ஸில் நிகழ்த்தப் பட்ட ஒரு சோதனை வெளிப்படுத்தியுள்ளது. பதினைந்து நிமிடங்களுக்கு உரத்த ஒலி உள்ள சூழலில் நிற்கும் ஒருவர் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக நிறக்குருடால் அவதிப்பட நேரிடுமாம்.

நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிக ஒலியளவால் பாதிக்கப்படும் போது அவர்களுக்கு இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிவு ஏற்படவும் , இரத்தக் குழாய்கள் சுருங்கி இரத்தம் பாய்வது தடுக்கப்படவும் , மாரடைப்பு ஏற்படவும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்திய மருத்துவக் கழகமும் தன் பங்குக்கும் ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளை வெளியிட்டுள்ளது. தினமும் உரத்த ஓசைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு மன அழுத்தம் , எதற்கெடுத்தாலும் படபடப்பு , எதிலுமே மனதை ஒருமுகப்படுத்த முடியாமை , களைப்பு , உணவுக்குழாயில் அல்சர்... என்று பலவும வரும் எனப் பயமுறுத்தியுள்ளது. கூடவே இன்னொரு குண்டையும் தூக்கிப் போட்டிருக்கிறது. இன்னமும் இரண்டு வருடங்களில் இந்திய மாநகரங்களில் உள்ளவர்களில் மிகப் பெரும்பாலோனோர்கள் ஏதோ ஒரு வகையில் செவிப்புலன் பாதிப்புக்கு ஆளாகியிருப்பர் என்பது தான் அது.

இந்திய மருத்துவக்கழகத்தின் இந்த அபாய அறிவிப்பை அலட்சியப்படுத்துவதற்கு இல்லை. சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் சமூக பணித்துறை சென்னை மாநகரின் வணிகக் கேந்திர மையங்கள் , தொழிற்பேட்டைகள் , குடியிருப்புப் பகுதிகள் அமைதி வலையங்கள் என்று வெவ்வேறு பகுதிகளிலும் ஒலியின் அளவுகளைப் பதிவு செய்ததில் எல்லா இடங்களிலுமே அனுமதிக்கப்பட்ட எல்லையையும் தாண்டி ஒலியின் அளவு ஏகத்துக்கும் எகிறியிருப்பது தெரிய வந்துள்ளது. அனுமதிக்கப்பட்ட ஒலி அளவிலும் பார்க்க சென்னை நகரின் ஒலியின் அளவு 50 சதவீதத்தால் அதிகரித்திருப்பதால் விரைவில் சென்னை நகர வாசிகள் அரைச் செவிடர்களாகும் ஆபத்து அதிகம் இருப்பதாக இன்னுமொரு ஆய்வறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தின் சீனித் தொழிற் சாலையொன்றின் தொழிலாளர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் அதிக இரைச்சல் காரணமாக அவர்களில் 59 சதவீதமானோரின் கேட்கும் திறன் குறைந்து போயிருப்பதும் தெரிய வந்திருக்கிறது.

இவற்றுக்கெல்லாம் மேலாக . அதிக போக்குவரத்து நெரிசல் , சந்தடி காரணமாக ' ரினைற்றஸ் ( Tinnitus ) ' எனப்படும் வேறு ஒரு விநோத நோயும் உருவாகி வருகிறது. இதில் உட்காதில் ஒலியை வாங்கும் மயிர்க்கலங்கள் அதிக சத்தத்தைத் தாங்க முடியாமல் அப்படியே உடைந்து போவதால் சத்தமே இல்லாத அமைதியான நேரத்தில் கூட காதில் சில்வண்டின் சத்தம் போல இரைச்சல் கேட்டுக் கொண்டே இருக்கும். இப்படி 'ரினைற்றஸ்' ஆல் பாதிக்கப்படுபவர்கள் கடைசியில் செவிட்டுத் தன்மைக்கு ஆளாகவும் நேரிடலாமாம். குண்டவீச்சு விமானங்களின் முழக்கங்களும் , குண்டுவெடிப்புச் சத்தங்களும் அன்றாட நிகழச்சிகளாகி விட்ட ஈழத்தமிழர்களிடையே முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் ஒலிமாசின் மகா பயங்கரம் பற்றி மேலும் தெரிய வரும்.

ஒலியின் முக்கிய இயல்புகளில் ஒன்றான ஒலியின் உரப்பு ( டுழரனநேளள ) 'டெசிபெல்' என்கிற அளவு முறையாலேயே அளவிடப்படுகிறது. இங்கு டெசிபெல் (னுநஉடைநட) எனப்படுவது ' பெல் ' இன் பத்தில் ஒரு பாகம் ( கிரஹாம் பெல்லின் நினைவாகவே ஒலியளவுக்கு இந்தப் பெயர் ) நமது மூச்சுக்காற்று 10 டெசிபல்கள் என்பதில் இருந்து மரங்களின் சலசலப்பு 20 டெசிபெல்கள் , மெதுவான உரையாடல் 30 டெசிபெல்கள் , வானொலி இசை 50 டெசிபெல்கள் உரத்த பேச்சு 60 டெசிபெல்கள் என்று அத்தனை சத்தங்களையும் அளவிட்டு பதிவு செய்து வைத்திருக்கிறர்கள்.

50 டெசிபெல்களுக்கும் அதிகமான ஓசை நிரம்பிய அறையில் சாதாரணமாக உரையாடினால் கூட தெளிவாகக் கேட்க முடியாது. அதுவும் 70 டெசிபெல்களை எட்டிவிட்டால் எதுவுமே கேட்க முடியாது. இதன் அளவு 120 டெசிபெல்களுக்குப் (ஒலிபெருக்கிகளின் ஒலி அளவு) போய்விட்டால் காதுகளுக்குத் துன்பம் தான். 130 டெசிபெல்களுக்கும் மேல் போவது அதிகம் ஆபத்தானது.

இயந்திரக் கோளாறுடைய மோட்டார் சைக்கிள் எழுப்பும் ஒலி 105 டெசிபெல்கள் இது சிலரது செவிப்புலனை ஒரு மணிநேரத்தில் பாதித்து விடும். பேருந்துகளில் நீதிமன்ற தடையுத்தரவையும் மீறிப் பயன்படுத்தும் ஒலியெழுப்பிகள் ( Air Horn ) கதறும் சத்ததின் அளவு 135 டெசிபெல்கள். இரண்டே நிமிடங்களில் மயிர்க்கலங்களில் சிலவற்றை சேதமாக்க இது போதும். ராக் இசை , ஸ்டீரியோ கருவிகள் சிலவற்றின் ஒலி அளவுகளும் 135 டெசிபெல்கள் தான். இயந்திர ஓசைகளும் , வாகனங்களின் இரைச்சல்களும்தான் காதைக் கெடுக்கக் கூடியவை என்பதல்ல. இசையுமே அது சங்கீதமாக இருந்தால் கூட பெரும் ஓசையாகும் போது நாசத்தையே விளைவிக்கின்றது.



இத்தனை நஞ்சுகளையும் சுமந்து கொண்டு வரும் சத்தங்களின் மத்தியிலேயே பகலில் மட்டுமல்லாது இரவிலும் கூட பொழுதைக் கழிக்க வேண்டியதாய் உள்ளது. உலக சுகாதார நிறுவனம் அமைதியான ஆழ்ந்த தூக்கத்துக்கு 35 டெசிபெல்கள் அளவுடைய ஒலிச்சூழலை சிபார்சு செய்திருக்கிறது. இதன்படி கடிகாரம் ஒன்றின் டிக்..டிக் ஓசையே தூக்கத்தை கெடுக்காத எல்லையாக இருக்கும். ஆனால் உலகில் மிகப் பெரும்பான்மையோர் 50 டெசிபெல்கள் சூழலிலேயே நித்திரை என்ற பெயரில் புரண்டு கொண்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

50 டெசிபெல்கள் உள்ள சூழலில் நீண்டகாலமாக இருந்தால் போதும் செவிப்புலன் பாதிக்கப்பட்டு விடும். என்று அறிவித்துள்ள இந்திய மருத்துவக்கழகம் கூடவே பரிந்துரை ஒன்றையும் செய்திருக்கிறது. வருங்காலங்களில் சந்தடிமிக்க வீதிகள் , புகையிரதப் பாதைகள் விமான ஓடு தளங்களுக்கு அருகாமையில் வீடுகளையோ, பாடசாலைகளையோ அமைக்க வேண்டாம் என்பது தான் அந்த அறிவுரை. ஆனால் நகரமயமாக்கலில் தீவிரங் காட்டப்படும் இந்த நேரத்தில் இத சாத்தியமா என்பது கேள்விக் குறிதான்.

சத்தத்தை உறிஞ்சும் சக்தியை இயற்கை மரங்களிடம் ஒப்படைத்திருக்கிறது. மற்ற மரங்களை விட வேம்பு , சவுக்கு , வாழை போன்ற மரங்களுக்கு இந்த ஆற்றல் அதிகம் என்பதும் ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. நகரமயமாக்கலில் கட்டிடக் காடுகளிடையே இந்த மரங்கள் ஒவ்வொன்றாகத் தொலைந்து கொண்டிருக்க எங்குமே பேரிரைச்சலின் பிரவாகம் தான்.

இந்நிலையில் பெருகி வரும் இந்த அச்சுறுத்தலில் இருந்த தப்பிக்க நம்முன்னால் உள்ள ஒரே வழி காதுகளுக்கு கதவுகளை இடுவது தான். ( சுட்டு விரல்களை இரண்டு காதுத் துவாரங்களின் உள்ளும் செருகினாலே அது 20 டெசிபெல்கள் ஒலியை தடுத்து நிறுத்திவிடும். ) வாகனப் புகைகளை வடிகட்ட அணியும் முகமூடிகளைப் போல , இந்த இரைச்சல்களை வடிகட்டவும் வீதிகளில் இறங்க முன்னர் காதுச் செருகிகளை மாட்டிக் கொள்வது வருங்காலத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கப் போகிறது.

# கவிதைப் பொழில்

## இடப்பெயர்ச்சி

ஒவ்வொருமுறை இடம்பெயரும் போதும்
முதிராக் கதிரோடு பயிர் பிடுங்கியெடுக்கும் துடிப்பும்
ஜன்னலில் விரியும் புதிய காட்சிகள் காணும்
சுற்றுலாப் பயணியின் துள்ளலும்
எனக்குள் வந்து சேர்கின்றன.

வெற்றிடம் எனக்குப் பிடித்தமானது
எனினும்
வெற்றிடமாக்கி வெற்றிடம் செல்கையில்
விட்ட வெற்றிடம் மறக்கவும்
சேர்ந்த வெற்றிடம் நிரப்பவும்
விரைந்து முயல்கிறேன்

முதுகேறிக் கொண்ட என் சொற்பப் பொருள்களை
அவற்றிற்குரிய இடங்களைக் கண்டறிந்தும்
தேர்வு செய்தும் அடுக்குகிறேன்
ஏதாவதொன்று இடமாற்று மிஞ்சி
பதற்றம் கொள்ளச் செய்கின்றது.

ரகசியமாக எப்போதும் பாதுகாக்க விரும்பும்
நாட்குறிப்பேட்டிற்கு இடமின்றி
அம்பலமாகிப் போயிற்று ஒரு முறை
முழு அலமாரியைத் தனக்கெனக் கேட்ட
சிறுகடவுளுக்கு
சாதாரண மஞ்சள்பையைத்தான் தரமுடிந்தது
பிறிதொருமுறை
முக்கிய நாளொன்றின் நினைவுப்பரிசாகிய
அறைகள் பல கொண்ட அழகிய நகைப்பெட்டி
எந்த இடத்திற்கும் பொருந்தாமல்
அலைக்கழித்தது வேறொருமுறை

நண்பனிடம் கடன்வாங்கி 'பிறந்த' புத்தகத்தைக்
காட்டிக் கொடுக்கும்படியான இடத்திலேயே
வைக்க நேர்ந்தது இன்னொருமுறை
சொல்லிச் செய்ததால்.

வலு இறுகிக் கம்பீரமாக நின்றிருந்த பிரோவை
உள்ளே நுழைக்க முடியாமல்
நித்திய நோயாளிபோல்
வராண்டாலில் படுக்க வைக்க நேர்ந்தது
இந்த முறை.

எங்கும் தனக்கென ஓரிடத்தை
நிரந்தரமாய் வைத்திருக்கும் பெருள்களால்
பிரச்சினை எதுவுமில்லை
எந்தமுறையும்.

**இளமுருகு.**

## இயற்கையோடு

நகரவாசி நான்
வினோதமான விதத்தில்
இயற்கையைத் தொலைத்தேன்

மனிதர்களுடனேயே
சாலையோர மரங்களும்
பஸ் ஏறக் காத்திருப்பது போன்ற ஒரு வரிசை.
அப்படியொரு மரத்தின் பின்னால்
நானும் கடைசியாக

பஸ் வந்தபோது
அறிவாளி நான்
அந்த மரம் ஏறிக்கொண்ட பிறகு
ஏறிக்கொள்ளலாம் என
நின்றுகொண்டிருந்தேன்
அப்போதுதான் எனக்குத் தெரிந்தது
மரம் பஸ்ஸில் ஏறாது என.

மரத்தைப் பின்னால் விட்டுவிட்டுப்
பஸ்ஸில் ஏறி அமர்ந்துகொள்கிறேன்
நகரவாசி நான்
இப்படித்தான் இயற்கையிலிருந்து
பிரிந்துபோகிறேன்.

பஸ்ஸில் அமர்ந்திருக்கும் எனக்கு
சாலையின் இருபுறமும்
வழிநெடுக
மரங்கள் வேண்டும் என்ற ஆசை.

என் அறையில்
மாட்டிவைத்திருக்கிறேன் நான்
அடர்ந்த காடு ஒன்றின் சித்திரத்தை.

**இந்தி மூலம்: வினோத்குமார் அக்லா**

**தமிழில்: ராதிகாராணி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகலில் பறந்த வெளவால்கள்!

**மதுமிதா**

ஓர் அடர்ந்த காட்டில் பலவகையான விலங்குகள் வாழ்ந்தன. காட்டின் நடுவில் ஒரு பெரிய குகை இருந்தது. அதன் மேற்கூரையில் சுமார் முந்நூறு வெளவால்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

ஒரு நாள் எல்லா வெளவால்களும் ஒரு கூட்டம் போட்டன. வெளவால் தலைவன் பேசத் தொடங்கியது.

“இந்தக் காட்டில் நாம் மிக அதிக எண்ணிக்கையில் இருக்கிறோம். ஆனாலும், நாம் ஒரு குகைக்குள்ளேயே பதுங்கியிருக்க வேண்டியிருக்கிறது. மற்ற மிருகங்கள் காட்டைப் பயன்படுத்தும் அளவு நாம் பயன்படுத்துவதில்லை”

மற்ற வெளவால்களெல்லாம் “அதற்கு நாம் என்ன செய்வது?” என்றன.

அதற்குத் தலைவன் வெளவால், “நாம் ராத்திரியில் பறப்பதால்தான், காட்டை அதிக அளவில் உபயோகிக்க முடியவில்லை. இனிமேல் நாம் பகலிலும் பறக்கலாம்...” என்றது.

“இது நல்ல யோசனைதான்!“ என்று மற்ற வெளவால்கள் ஒப்புக்கொண்டன.

தலைவன் தொடர்ந்தது: “பகலில் சுற்றும் மிருகங்களிடம் உ'ாராக இருக்க வேண்டும். இன்னொரு வி'யம்... மற்ற காடுகளில் இருக்கிற நம் சொந்தக்கார வெளவால்களையும் அழைத்திருக்கிறேன், ஒரு வாரம் நம் விருந்தாளிகளாகத் தங்கிச்செல்ல. அவர்களையும் நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்”

“பக்கத்துக் காட்டுப் பெரிய வெளவால்கள் முரட்டுத்தனமானவை. போன முறை வந்தபோது, நம் காட்டில் இருக்கிற சின்ன வெளவால்களைச் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டன...” என்று



குறைப்பட்டுக்கொண்டன சில வெளவால்கள்.

தலைவன் வெளவால், “அந்தக் காட்டு வெளவால்களைக் கூப்பிடவில்லை” என்றது. அத்துடன் கூட்டம் கலைந்தது.

அடுத்த இரவு... எல்லாக் காடுகளிலிருந்தும் வெளவால்கள் வரத் தொடங்கின. குகை முழுவதும் திருவிழாக் கோலம். எங்கு பார்த்தாலும் வெளவால்கள் தொங்கிக்கொண்டும் பறந்துகொண்டும் இருந்தன.

புதிதாக வந்த வெளவால்களுக்கு, காட்டு வெளவால்கள் பகலில் சுற்றத் திட்டம் போட்டிருந்த செய்தி தெரிந்தது. அவையும் இவற்றோடு பகலில் காட்டைச் சுற்றத் தீர்மானித்தன.

மறுநாள் காலை எல்லா வெளவால்களும் கூட்டமாகக் குகையைவிட்டு வெளியே வந்து, முதன்முதலாக பகலில் பறப்பதற்கு தயாராகி நின்றன. தலைவன் வெளவால் ஆணையிட்டதும் பறக்கத் தொடங்கின.

பறக்க ஆரம்பித்த சில நொடிகளிலேயே முக்கால்வாசி வெளவால்கள் கீழே இறங்கி, “சூரிய வெளிச்சம் கண்ணைக் குத்துகிறது. எங்களால் பார்க்க முடியலை. நம்மால் பகல் நேரத்தில் பறக்கமுடியாது...' என்றன.

அதற்குத் தலைவன் வெளவால், “இரவில் மட்டும் நாம் கண்களால் பார்த்தா பறக்கிறோம்? தொடர்ந்து ஒலிகள் எழுப்புவதன் மூலமாக, நமக்கு எதிரில் உள்ள பொருட்கள்மீது இடிக்காமல் பறக்கிறோம். நமக்கான இரையைப் பிடிக்கவும் இதே ஒலிகளைத்தானே பயன்படுத்துகிறோம்... அதனால், கண்ணை மூடிக்கொண்டு பறங்கள்!” என்றது.

அடுத்து, அனைத்து வெளவால்களும் கண்களை மூடிக்கொண்டு பறக்கத் தொடங்கின.

இரண்டு வாரம் கழிந்தது.

வெளவால்கள் தங்கள் இயல்பை மாற்றிக்கொண்டு, பகலில் பறப்பதால் மற்ற மிருகங்களுக்குப் பலவிதங்களில் பிரச்னை உண்டாயிற்று. அதனால், அவையெல்லாம் கூடி வெளவால்களை அடக்க முடிவு செய்தன.

அதன்படி, கீழே உதிர்ந்து விழுந்த இறகுகளைக் கொண்டு பல இறக்கை வடிவங்களைத் தயார் செய்தன பறவைகள். அவற்றை வெளவால்களுக்குத் தெரியாமல், அவற்றின் பெரிய இறக்கையில் போட்டன. இரவில் ஒன்றாகக் கூடிய வெளவால்கள், தங்கள் எல்லோர் உடலிலும் இறக்கைகள் இருப்பதைப் பார்த்தன.

தலைவன், “நாம் பகலில் பறக்கிறோம்னு முடிவு செய்ததால்தான், நமக்குக் கடவுள் இந்த மாதிரி அரைகுறை உருவத்தைக் கொடுத்துவிட்டார் என்று நினைக்கிறேன். எனக்கு ரொம்பப் பயமாயிருக்கிறது. நாம் எல்லோரும் இனி இரவில் மட்டும் பறக்கலாம்” என்றது நடுங்கிக்கொண்டே.

மற்ற வெளவால்களும் அதே பயத்தில் தலைவன் சொன்னதை ஆமோதித்தன. அதன்பிறகு ஒழுங்காக இரவில் மட்டுமே பறந்தன வெளவால்கள். அதனால், மற்ற காட்டு மிருகங்களும் சந்தோ'மாக இருந்தன. சில நாட்களில் வெளவால்களின் உடலில் ஒட்டி இருந்த இறக்கைகளும் உதிர்ந்து போயின. (இந்தக்கதை அறிவியல் உண்மைகளின் அடிப்படையில் எழுதப்பட்டதல்ல. கற்பனையே!)

# டென்னிஸ் விளையாட்டு தோன்றியது எப்படி?

## யூரேகா

ஹாய் வாசகர்களே, உங்க இந்த யுரேக்கா பகுதியில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கண்டுபிடிப்புகள் பற்றிய தகவல்களை தெரிஞ்சிக்கிட்டு வர்றோம். இந்த வாரம், டென்னிஸ் விளையாட்டை யார், எப்போ கண்டுபிடிச்சாங்கன்னு பார்க்கலாம்.

உலக அளவில் கால்பந்துக்கு அடுத்தபடியாக அதிக ரசிகர்களை கொண்ட விளையாட்டு - டென்னிஸ்.

12-ம் நூற்றாண்டில் இருந்த ஹபாம்“ (உள்ளங்கை என்று அர்த்தம்) என்ற ஒரு பிரெஞ்சு விளையாட்டில் இருந்து உருவானது தான் டென்னிஸ். குறிப்பிட்ட வளாகத்திற்குள் (டென்னிஸ் கோர்ட்) ஒரு பந்தை எதிரெதிர் நிற்கும் இருவர் மாறி மாறி அடித்து ஆடும் விளையாட்டாக ஹபாம்“ இருந்தது.

அந்த ஹபாம் விளையாட்டு ஹஜு டீ பாம் என்ற இன்னொரு விளையாட்டையும் தோற்றுவித்தது. இந்த விளையாட்டில் பந்துக்கு பதிலாக ராக்கெட்டுகள் (விண்கலம் அல்ல, ஹி...ஹி...) பயன்படுத்தப்பட்டன. இந்த விளையாட்டு ஐரோப்பிய நாடுகளில் வேகமாக பரவின.

1873-ம் ஆண்டு, மேஜர் வால்ட்டர் விங்பீல்டு என்பவரைத் தான் இன்றைய நவீன டென்னிஸ் விளையாட்டின் தந்தை என்று சொல்ல வேண்டும். ஏன் என்றால், அவர் தான் ஹஸ்பேரிஸ்டிக்“ (பந்து ஆட்டம் என்பதற்கான கிரேக்கச் சொல்) என்றழைக்கப்பட்ட விளையாட்டை கண்டுபிடித்தார். அதில் இருந்து உருவானது தான் நவீன வெளிப்புற டென்னிஸ்.

### சில தகவல்கள்

டென்னிஸ் என்பது தான் இந்த விளையாட்டுக்கு உலகெங்கிலும் பொதுப்பெயர். ஆனால் நாட்டிற்கு நாடு வேறு பெயர்கள் இருந்தன. பிரிட்டனில் டென்னிஸ் என்றழைக் கப்பட்டது. லான் டென்னிஸ், ரியல் டென்னிஸ், ராயல் டென்னிஸ் என்றும் வேறுபடுத்தி அழைக்கப் பட்டன. அமெரிக்காவில் கோர்ட் டென்னிஸ் என்றும், பிரான்சில் ஹஜு டீ டென்னிஸ்“ என்றும் ஆஸ்திரேலியாவில் ராயல் டென்னிஸ் என்றும் அழைக்கப்பட்டன.

1874-ல், ரியல் டென்னிஸ் விளையாட் டில் இருந்து தோன்றியது தான் லான் டென்னிஸ். சுற்றுச்சுவர்கள் இல்லாமல், குறிப்பிடப்பட்ட ஒரு பரப்பில் லாண் டென்னிஸ் ஆடப்பட்டது. அமெரிக்காவின் கோர்ட் டென்னிஸ் என்பது சுற்றுச்சுவர்கள் மற்றும் நான்கு பக்கங்கள் சூழப்பட்ட தனி கோர்ட்டில் ஆடப்படும் விளையாட்டாக இருந்தது.

16-ம் நூற்றாண்டு பிரெஞ்சு அரசர்களும், 17-ம் நூற்றாண்டு ஸ்டூவர்ட் அரசர்களும் டென்னிஸ் விளையாட்டின் தீவிர வீரர்களாக இருந்தனர்.

# வார்த்தை விளையாட்டு-9

உங்கள் நேரத்தை பயனுள்ளதாக கழிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது வார்த்தை விளையாட்டு. இதன் மூலம் தமிழ் சொற்களை அதிகம் தெரிந்து கொள்ள முடியும். அருகே உள்ள கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளை எப்படியும் பயன்படுத்தலாம். ஆனால் குறைந்தது 15 தமிழ் வார்த்தைகளையாவது கண்டுபிடிக்க வேண்டும். (உதாரணமாக :கூட்டணி, ஆடு...) அதிக வார்த்தைகளை கண்டுபிடித்து எழுதுபவர்களுக்கு பரிசு $20.00 வழங்கப்படும் வி.டைகளை எழுதி தபால் கவரில் வைத்து 24.09-2004 முன்னர் அனுப்ப வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான விடை எழுதி இருந்தால் அவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்ய படுவார்.ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.




1252 Lawrence Avenue East
Unit 207
Toronto. ON. M3A 1C3
Tel: 416 385 2999
Fax: 416 385 9862

**தயவு செய்து உங்கள் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்**

# சிறுவர் வட்டம்

## நண்டு

உலகில் எல்லா பிராணிகளும் முன் பக்கமாகவே நடக்கும். ஆனால், நண்டு மட்டுமே பக்கவாட்டில் நடக்கக்கூடியது.



நண்டு கடினமான ஓட்டுடன் வளர முடியாது. அதனால் அது ஆண்டுதோறும் தன் ஓட்டைக் கழற்றி விடும். புது ஓடு உருவாகிக் கொண்டிருக்கும்போது, பழைய ஓட்டைக் கழற்றி விடும்.

உலகிலேயே பெரிய நண்டு ஜப்பானில் உள்ள ஹசிலந்தி நண்டு“ தான். அதன் ஒரு காலின் நீளமே 3 மீட்டர் இருக்கும்.

## பாம்பு

உலகில் சுமார் 3000 வகைப்பாம்புகள் இருக்கின்றன. இந்தியாவில் 400 வகைப் பாம்புகள் இருக்கின்றன.

பாம்பின் கண்களுக்கு அசைந்து கொண்டிருக்கிற உருவம்தான் தெரியும். அசையாத உருவம் தெரியாது. பாம்பின் கண்களில் இமைகள் இல்லை. கண்கள் எப்போதும் திறந்தே இருக்கும்.

பாம்பின் நாக்கு தொடு உணர்ச்சியை அறிவதுடன் வாசனையையும் அறிகிறது, சூழ்நிலையையும் உணர்ந்து கொள்கிறது. எனவேதான் அது நாக்கை அடிக்கடி வெளியே நீட்டுகிறது.

ஒரு நாகப்பாம்பிடம் அதன் ஆயுளில் சுமார் 4000 மனிதர்களைக் கொல்லக்கூடிய வி'ம் உற்பத்தியாகிறது.

பாம்புகளின் தாடையில் மூட்டுகள் இல்லை. எனவே எவ்வளவு பெரிய இரையானாலும் வாய் விரிந்து கொடுத்து விழுங்கி விடும்.

## தவளை மூளை

தவளையின் கண்கள், அதன் நாக்கு எட்டக்கூடிய தொலைவிற்கு வருகின்ற பூச்சிகளை மட்டுமே பார்க்க கூடியதாக



அமைந்துள்ளது. தவளையின் கண்கள் தன்னை சுற்றி நகர முடியாத அல்லது இறந்து கிடக்கும் பூச்சிகளைப் பற்றி யெல்லாம் அதன் மூளைக்கு தகவல் தெரிவிப்ப தில்லை. அதற்கு தேவைப் படும் அசையும் பொருட்களை பற்றி மட்டுமே அதன் மூளையில் பதிவு செய்யப் படுகிறது.

வார்த்தை விளையாடடு-6 ல் தெரிவு செய்யப்பட்டவர் அடுத்தவாரம் அறிவிக்கப் படுவார் வெற்றி பெற்றவர் பெயர்: அபிலாஸ். ஈஸ்வரநாதன் ஸ்காபரோ, ஒன்ராறியோ

வேம்பு வேலி வேளை வேடம் வேகம் வேகடம் அம்பு அலி அகம் அளை அரும்பு அகம்பு அகரு அகலிடம் கரும்பு களை கடம் கரு கலி கம்பு புலி புரு புடம் புகலிடம் அலிகம்.

வார்த்தை விளையாடடு-7 ல் தெரிவு செய்யப்பட்டவர் அடுத்தவாரம் அறிவிக்கப் படுவார்.

வார்த்தை விளையாட்டு சிறுவர்கள், தமிழ் படிக்கும் மாணவமணிகளுக்காகவே வாராவாரம் வைகறை தருகிறது. விளையாட்டோடு தமிழையும் கற்றிட சிறார்களுக்கு நாம் எல்லோருமாக வழி சமைத்துக் கொடுத்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்
செய்ய
அழையுங்கள்
416-385 2999




# 4 விக்கெட் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வென்றது இலங்கை



லண்டன், செப்.15: ஐசிசி சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற டி பிரிவு ஆட்டத்தில் இலங்கை 4 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற இலங்கை முதலில் ஆடும்படி ஜிம்பாப்வேயை பணித்தது. அதன்படி ஆடிய ஜிம்பாப்வே 49.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 191 ரன்களைச் சேர்த்தது. பின்னர் ஆடிய இலங்கை 43.5 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 195 ரன்கள் சேர்த்து வென்றது. முன்னதாக 6 விக்கெட் இழப்புக்கு 85 ரன்கள் என்ற நிலையில் களமிறங்கிய ஜிம்பாப்வே வீரர் எல்டன் சிகும்பரா நிதானமாக விளையாடி 57 ரன்களைச் சேர்த்து அணிக்கு மரியாதையான ஸ்கோரைப் பெற்றுத் தந்தார். 71 பந்துகளைச் சந்தித்த அவர் 6 பவுண்டரிகளையும் விளாசினார்.

8-வது விக்கெட்டுக்கு பிராஸ்பர் உத்சேயாவுடன் இணைந்து 64 ரன்களைச் சேர்த்தார் அவர். உத்சேயா 28 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 31 ரன்களைச் சேர்த்தார். இலங்கை தரப்பில் ஜோய்சா, மகரூ∴ப் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். பின்னர் ஆடிய இலங்கை கஷ்டப்படாமல் வென்றது. கேப்டன் அட்டப்பட்டு 43 ரன்களும், ஜயந்தா 36 ரன்களும் சேர்த்தனர். சங்கக்காரா, ஜயவர்த்தனே தலா 28 ரன்களைச் சேர்த்தனர். தில்ஷான் ஆட்டமிழக்காமல் 28 ரன்களும், சந்தானா ஆட்டமிழக்காமல் 20 ரன்களும் எடுத்தனர். ஜிம்பாப்வே தரப்பில் சிகும்பரா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முன்னதாக செப். 10-ம் தேதி நடைபெற்ற ஆட்டத்தில் ஜிம்பாப்வேயை வென்றது இங்கிலாந்து. அடுத்து 17-ம் தேதி நடைபெறும் ஆட்டத்தில் இங்கிலாந்தும், இலங்கையும் மோதுகின்றன.

# அமெரிக்க ஓப்பன் பட்டத்தை வென்றார் ஸ்வெத்லானா



நியூயார்க், செப். 13: யு.எஸ். ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை 19 வயதாகும் ரஷிய மங்கை ஸ்வெத்லானா குஸ்னெட்ஸவா கைப்பற்றினார். மகுடம் சூடியதன் மூலம் ரூ. 4.6 கோடியைப் பரிசாகப் பெற்றார் குஸ்னெட்ஸவா. இது அவருக்கு முதல் கிராண்ட் ஸ்லாம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. 19 ஆயிரம் பேர் குழுமியிருந்த நியூயார்க் ஆர்தர் ஆஷ் அரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சக நாட்டின் எலீனா டேமன்டீவாவை 6-3, 7-5 என்ற நேர் செட்களில் தோற்கடித்தார் குஸ்னெட்ஸவா.

74 நிமிஷங்களில் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இந்த சீசனில் நடைபெற்ற முக்கியப் போட்டிகளில் பட்டம் வெல்லும் 3-வது ரஷிய வீராங்கனை எனும் சிறப்பையும் அவர் பெற்றார். இந்த ஆண்டு நடைபெற்ற 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மூன்றில் ரஷிய வீராங்கனைகள் பட்டத்தை கைப்பற்றியுள்ளனர். பிரெஞ்ச் ஓபன் பட்டத்தை அனஸ்டாஷியா மிஸ்கினாவும், விம்பிள்டன் பட்டத்தை மரிய ஷரபோவாவும் வென்றனர். பிரெஞ்ச் ஓபனிலும் ரஷியர்களே இறுதிச் சுற்றில் விளையாடியது குறிப்பிடத்தக்கது. நானாகவே 34 தவறுகளை இழைத்தும் பட்டம் வென்றதில் மிகவும் சந்தோஷமாக உள்ளேன். எப்போது வெற்றி பெற்றாலும் கையை உயரே தூக்கி உவகை கொள்வேன். ஆனால் இம்முறை மிகவும் உணர்ச்சி வயப்பட்டேன். ஆனந்த அதிர்ச்சியும் அடைந்தேன் என வெற்றிக்குப் பின் கூறினார் குஸ்னெட்ஸவா. வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் 1-6, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் லின்ட்சே டேவன் போர்ட்டைத் தோற்கடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார் குஸ்னெட்ஸவா.

இதன் மூலம் யு.எஸ்.ஓபனில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய முதல் ரஷிய வீராங்கனை எனும் சிறப்பை அவர் பெற்றிருந்தார். 2001 செப்டம்பர் 11-ல் உலக வர்த்தக மையத்தில் நடைபெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும், கடந்த 1-ம் தேதி ரஷிய பள்ளியில் பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்டு உயிரிழந்த பள்ளிக் குழந்தைகளுக்கும் இப் பட்டத்தை அர்ப்பணிப்பதாக குஸ்னெட்ஸவா அறிவித்தார். ரஷ்ய பள்ளிக் குழுந்தைகளின் கொடூரமான உயிரிழப்புக்காகவும், உலக வர்த்தக மைய தாக்குதலின் 3-ம் ஆண்டு நினைவு தினத்தையும் முன்னிட்டு ஆட்டம் தொடங்குவதற்கு முன்பும், முடிந்த பின்பும் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. இறந்தவர்களுக்கு மரியாதை செய்யும் விதமாக, குஸ்னெட்ஸவாவும், டேமன்டீவாவும் போட்டி முழுவதும் கருப்பு ரிப்பனை தலையில் கட்டி விளையாடினர்.

# ரொஜர் ∴பெடரர் அமெரிக்க ஓப்பன் ஆடவர் சாம்பியன்



நியூயார்க், செப். 14: ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் ∴பெடரர் யு.எஸ். ஓபன் கிராண்ட் ஸ்லாம் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். அவருக்கு கோப்பையுடன் ரூ. 4.6 கோடி ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. நியூயார்க்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆடவருக்கான இறுதி ஆட்டத்தில் ∴பெடரர் 6-0, 7-6(7-3), 6-0 என்ற நேர் செட்களில் ஆஸ்திரேலிய வீரர் லேடன் ஹுவிட்டைத் தோற்கடித்தார். இவ் வெற்றி மூலம் ஒரே ஆண்டில் 3 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற வீரர் எனும் பெருமையைப் பெற்றார் ∴பெடரர். இந்த சீசனில் ஏற்கெனவே விம்பிள்டன் மற்றும் ஆஸ்திரேலியன் ஓபன் பட்டங்களை வென்றுள்ளார் அவர்.

கடைசியாக, 1988-ல் ஸ்வீடன் வீரர் மாட்ஸ் விலாண்டர் மட்டுமே ஒரே ஆண்டில் 3 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இப் பதிவு ஒருபுறம் இருக்க, இறுதி ஆட்டத்தில் 2 செட்களில் ஒரு கேமையும் கைப்பற்ற விடாமல் எதிராளியை வென்றது 1884-க்குப் பிறகு இதுவே முதல் முறை என யு.எஸ். ஓபன் வரலாறு தெரிவிக்கிறது.

"நினைத்ததை சாதித்தேன். இதற்கு மேல் ஆசைப்படவில்லை. மிகவும் கடினமான விளையாட்டு டென்னிஸ். அதனாலேயே ஒவ்வொரு போட்டியிலும் பட்டம் வெல்லும்போது பெரிதும் உவகை கொள்கிறேன். ஆனால் எது கடைசிப் போட்டி என்பது எனக்கே தெரியாது" என்றார் வெற்றிக்குப் பின் ∴பெடரர்.

"என்னைப் பொருத்தவரை எனது மிகப் பெரிய கனவாக யு.எஸ்.ஓபன் பட்டத்தை நினைக்கவில்லை. ஆனால் வெல்ல வேண்டும் என நினைத்தேன். தற்போது சாதித்துள்ளேன். ஆனால் அவ் வெற்றியை எளிதாக நம்பமுடியவில்லை. ஒவ்வொரு சீசனின் முடிவில்தான் பழையதை திரும்பிப் பார்ப்பேன். அப்போது எப்படி இந்த வெற்றிகள் சாத்தியமாயின என பிரமிப்படைவேன்" என்றார் 23 வயதாகும் ∴பெடரர். 1995-ல் அமெரிக்க வீரர் பீட் சாம்ப்ராஸ் மட்டுமே விம்பிள்டன், யு.எஸ்.ஓபன் ஆகிய கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை அடுத்தடுத்து கைப்பற்றியுள்ளார். அவருக்குப் பிறகு அந்த பெருமையை ரோஜர் ∴பெடரர் பெற்றுள்ளார்.

1993-94-ல் நடைபெற்ற 5 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் 4-ஐ பீட் சாம்ப்ராஸ் வென்றார். ∴பெடரரோ கடைசியாக நடந்த 6 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் 4-ஐ கைப்பற்றியுள்ளார்.

# ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியல் முதலாமிடத்தில் வாஸ்,மூன்றாமிடத்தில் சங்கக்கார



ஒரு நாள் பந்து வீச்சு தர வரிசையில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் 150 புள்ளிகளுடன் முதலிடத்தையும் துடுப்பாட்ட தரவரிசைப் பட்டியலில் விக்கெட்காப்பாளர் குமார் சங்கக்கார 78 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளனர். ஒரு நாள் போட்டிகளுக்கான சம்சுங் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதில் ஒரு நாள் போட்டிகளில் ஹெய்டன் 86 புள்ளிகளுடன் முதலிடம் பெறுகிறார். இவர் கடந்த 14 போட்டிகளில் 597 ஓட்டங்களை எடுத்துள்ளார். சச்சின் டெண்டுல்கர் 80 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் உள்ளார். இலங்கையின் சங்கக்கார 78 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்

பந்துவீச்சில் இலங்கையின் சமிந்த வாஸ் 150 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறார். அவுஸ்திரேலியாவின் கிலெஸ்பபி(144 புள்ளிகள்), இலங்கையின் முரளிதரன் (141 புள்ளிகள்) முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களில் உள்ளனர். டெஸ்ட் போட்டி டெஸ்ட் போட்டிகளில் லாரா 137 புள்ளிகளுடன் முதல் இடத்தை பெறுகிறார். கலிஸ் (126 புள்ளிகள்), டிராவிட் (125 புள்ளிகள்) முறையே இரண்டாம், மூன்றாம் இடங்க ளில் உள்ளனர். பந்துவீச்சில் இங்கிலாந்தின் ஹார்மிசன் (147 புள்ளிகள்) முதல் இடத் தை பிடிக்கிறார். இவருக்கு அடுத்து இலங் கை அணியின் நட்சத்திர வீரர் முரளிதரன் (144 புள்ளிகள் ) உள்ளார். அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலியா வழக்கம் போல் முதல் இடத்தை பெறுகிறது . கடந்த 81 ஒரு நாள் மற்றும் 44 டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் இந்த தரவரிசைப் பட்டியல் கணக்கிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





*Ajith Sabaratnam*
*Member, Million Dollar Round Table*
*Bus (416) 439 2800*
*Res. (905) 848-0080*
*Cell (416) 735-SABA (7222)*
*4 Robert Speck Parkway, suite 1200*
*Mississauga, ON L4Z 1S1*
*ajith.sabaratnam@clarica.com*

CLARICA
*Investment and insurance solutions - since 1870*

*life, health & disability insurance, savings and retirement plans,*
*employee benefits, mortgage & business insurance, & mutual funds**

Associated with Clarica Financial Services Inc. and *Clarica Investco Inc., a Mutual Fund Dealer.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லம் ஒன்று உங்களுக்காக அமைந்திட...



ROYAL LEPAGE
Residential Real Estate Service
INDEPENTLY OWNED AND OPERATED, BROKER

**Murali Sivakumar**
*Sales Representative*
**416•624•7253**
Bus: 905-275-9400



ROYAL LEPAGE
Connect Realty
INDEPENTLY OWNED AND OPERATED, BROKER

**Raj Ariyanayagam**
*Sales Representative*
**416•930•4663**
Bus: 416-284-5555



ROYAL LEPAGE
Connect Realty
INDEPENTLY OWNED AND OPERATED, BROKER

**Ganesh Thangarajah**
*Sales Representative*
**416•994•9046**
Bus: 416-284-4751



**Mavis & Eglinton**
3+1 Bedroom, 3 Bathroom
Well Kept Nice Home, End House
Double Door Entry, 6 Car Parking
**$299,900**
**Call Murali**



**Bovaird & Richvale**
3 Bedroom, 3 Bathroom
One Year Townhouse
Mins to Hwy 410, Close to Amenities
**$264,900**
**Call Raj**



**Midland & Eglinton**
3 Bedroom, 2 Washroom
Newly Finished Parquet Floor
Lots of Upgrades - Corner Unit
**$144,900**
**Call Ganesh**



**Eglinton & Terry Fox**
3 Bedroom, 3 Bathroom
Beautiful Home, Well Maintained
Professionally Finished Basement
**$289,900**
**Call Murali**



**BUSINESS FOR SALE / LEASE**
**Derry & Torbram**
Framing/Retail/Wholesale
Excellent Location
**Call Raj for Price**



**Brand New House at Markham & Passmore**
4 Bedroom, 3 Washroom
2100 Sq. Feet Home
**$349,000**
**Call Ganesh**




**145 Hillcrest Ave at Dundas & Hwy 10**
2+1 Bedroom, 2 Bathroom
Beautiful Lake View And C.N Tower View
**$189,900**
**Call Murali**



**Markham & Passmore**
Brand New Semi Detached Home
4 Bedrooms, 3 Washrooms
5 New Appliances
**$299,000**
**Call Raj**



**King & Bathurst**
4 Bedroom, 3 Bathroom
Open Concept Design
Close to Amenities
**$314,000**
**Call Ganesh**

Mr.Creations



**Jane & America**
4 Bedroom, 3 Washrooms
Stunning Mattamy Built Cortez Home
Lots Upgrades, Covered Front Porch
With Second Floor Balcony
**$439,900**
**Call Mathi**



**Finch & McCowvan**
Condo Townhouse
3 Bedroom, 3 Washroom
Close to TTC, School & Mall.
**$249,900**
**Call Kirew**




**Neilson & Mclevin**
2 Bedroom, 2 Washroom
Close to TTC, Mall, School & Shopping
**$170,000**
**Call Ravi**



**Kipling & Martin Grove**
3+1 Bedroom, 3 Washroom
Very Clean, All Neutral Colours,
Living Room Walk Out To A Fully
Fenced Back Yard,
Fully Finished Basement
**$289,900**
**Call Mathi**



**Neilson & Mclevin**
3+1 Bedroom, 4 Washroom
Close to TTC, School and Shopping
Basement Apartment
**$259,900**
**Call Kirew**



**Markham & Steeles**
3 Bedroom, 3 Washroom
Close To Hwys, Ttc And All Amenities
**$265,000**
**Call Ravi**



**Martingrove & Garfilla**
3+1 Bedroom, 3 Bathroom
Large Bunglow, Basement Apartment
Walking Distance To Schools, Ttc
**$398,000**
**Call Mathi**



**Morningside & Shappard**
4+1 Bedroom, 3 Bathroom
Newly Painted And Renovated House
New Windows, New Roof
New Driveway
**$289,900**
**Call Kirew**




**Mccowan & 14th Ave.**
5 Bedroom, 4 Bathroom
Upgraded Kitchen Cabinets
Parquet & Ceramic Floor
**$434,900**
**Call Ravi**



HOMELIFE HIGHER STANDARDS
**Miracle Realty Ltd.**

**Mathi Mahalingam** B.A Sc.
*Sales Representative*
**416•624•1503**
Bus: 416-747-9777



HOMELIFE HIGHER STANDARDS
**HomeLife GTA Realty Inc.**

**Ravi R. Raveendran** BSc.(Eng)
*Sales Representative*
**416•817•8479**
Bus: 416-321-6969



HOMELIFE HIGHER STANDARDS
**Gold Pacific Realty Inc.**

**Kirew Kanagasabai** BE.Sc
*Sales Representative*
**416•844•7355**
Bus: 416-490-1068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org